www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 சிலை 16 (13.12.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள்


**கவிதை மூலை**

பெருநாளெல்லாம்
தெருநாளான
சோகம் அங்கே தமிழா
இரு நாளெல்லாம்
இரக்கமின்றி
இங்கே நீயும் சும்மா

- சுடு கவி

## வடமராட்சி - தென்மராட்சி நோக்கியும் தாக்குதலை ஆரம்பிக்கச் சிறீலங்கா முடிவு

## வன்னி நோக்கி மக்கள் இடம் பெயர்வு



தமிழீழ மக்களைத் தனது கோர இனவெறிக்கு இலக்காக்கி வரும் சந்திரிகா அரசு உணவு, உறையுள், மருத்துவம் இன்றித் தவிக்கும், இடம் பெயர்ந்த 5,00,000 தமிழ் மக்கள் மீதும் ஈவிரக்கம் இன்றி, அடுத்த இராணுவ ரீதியான இனஅழிப்பு நடவடிக்கைக-ளைத் தொடங்குவற்கு அறிவித்தல் கொடுத்துள்ளது.

இந்நிலையில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கி மக்கள் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

சிறீலங்கா அரசு, இதனை அனுமதிக்காது கிளாலிக் கடலேரி மீது பயணத்தடையை இறுக்கியுள்ளது. ஆயினும் விடுதலைப் புலிகளின் பாதுகாவலுடன் கிளாலிக் கடற்போக்குவரத்து மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கார்த்திகை 29ஆம் நாள் சிறீலங்காக் கடற்படையினர் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் பிரயாணிகள் படகுகள் கைப்பற்றப்பட்டதுடன், ஐவர் உயிரிழந்தனர். இதனையடுத்து, குடாநாட்டினை வன்னிப் பெருநிலப் பரப்புடன் இணைக்கும் ஒரே ஒரு கடற்பாதையான கடலேரியைத் திறந்து, அதனூடாகப் பாதுகாப்புத் தேடும் மக்கள் பயணம் செய்யக் கிளாலி மீது சிறீலங்கா அரசு போட்ட தடையைத்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## கிளாலியில் 2 படகுகளுடன் பயணிகள் படுகொலை

29-11-95 அன்று, ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இரு பயணிகள் படகுகள் கடல்நீரேரிப் பகுதியில் வைத்து சிறீலங்காக் கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டன.

ஆனையிறவு முகாமிலிருந்து படகில் வந்த படையினரே, இவ்வாறு படகுகளையும் அதிலிருந்த பத்துப் பேரையும் தடுத்து நிறுத்தி முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். 1993ஆம் ஆண்டு பூநகரி, நாகதேவன்துறை சிறீலங்கா கடற்படைத்தளம் தாக்கியழிக்கப்பட்ட பின்னர், இப்பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்ததினால் படகுகள் பயணச் சேவை, கடற்புலிகளின் ரோந்து இல்லாத நேரங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மக்கள் சிறீலங்காக் கடற்படையால் கைதானதைத் தொடர்ந்து, தமிழீழ அரசியல்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் கடற்புலிகள் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடும்போது மாத்திரம் பயணம் செய்யுமாறு கேட்டுள்ளனர்.

கடற்புலிகளின் பாதுகாப்புடன் கிளாலிப் படகுச் சேவை நடைபெறும் என்ற அறிவித்தலையடுத்து, பெருமளவு மக்கள் பயணம் செய்வதற்காகக் கிளாலியில் கூடுகின்றனர். மக்கள் நீண்ட வரிசையில் ஆயிரக்கணக்கில் காத்திருந்து கிளாலியூடாக வன்னிப் பெருநிலப்பகுதிக்குச் செல்கின்றனர்.

கிளாலி கடல்நீரேரியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட ஐந்து பேரில் ஒருவரும் ஐந்து பிள்ளைகளின் தந்தையுமான ராசன் குணநாயகம் என்பவரின் சடலம் 03-12-95 அன்று கண்டுபிடிக்கப்பட்டது.

04-12-95 அன்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூவரின் சடலங்கள் கிளாலிக் கடலில் சூட்டுக் காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பெயர்கள்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## மட்டக்களப்பில் 36 அப்பாவித் தமிழ் மக்கள் படு கொலை

மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சிறீலங்காவின் விசேட அதிரடிப்படை முகாம் மீது, 05-12-95 அன்று விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் அம்முகாம் பெரும் சேதத்திற்குள்ளானதன்பின்பு வழமைபோல், தங்கள் கையாலாகத்தனத்தைத் தமிழின அழிப்பு முயற்சியாக மாற்றிய சிறீலங்காப் படைகளால், மட்டக்களப்பு கல்முனை வீதி இரண்டு தினங்களாக முற்றாகத் தடுக்கப்பட்டு, பஸ்களிலும் வேறு வாகனங்களிலும் பிரயாணம் செய்த தமிழ் பொதுமக்களும், அயற் கிராமமான கிரான்குளம் வாசிகளும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

இவ் அரச பயங்கரவாதத்திற்கு 36 அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மேலும் பலர்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## புதுக்குடியிருப்பு முகாம் தகர்ப்பு

### 40 விசேட பொலிஸ் கமாண்டோ படையினர் பலி

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் கொடியேற்றிய சில மணிநேரத்துள், மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 40 விசேட அதிரடிப் படையினர் பலியாகினர். மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சிறீலங்காவின் விசேட அதிரடிப்படை முகாம் மீது, 05-12-95 அன்று பெரும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

பிற்பகல் 3. 05 மணியளவில் நடாத்தப்பட்ட கரும்புலித்தாக்குதலைத் தொடர்ந்து, விடுதலைப்புலிகளின் தாக்குதலணியினர் இம்முகாம் மீது பாரிய தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் முகாம் பாரிய சேதத்துக்குள்ளாக்கப்பட்டதுடன், மூன்று பவல் கவச வாகனங்கள் முற்றாக வேயழிக்கப்பட்டன. இத்தாக்குதலில் 3 உயரதிகாரிகள், 2 மேலதிகாரிகள் உட்பட 40 க்கு மேற்பட்ட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவிலானோர் படுகாயம்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## பிரித்தானியப் பாராளுமன்றில் உறுப்பினர்கள் தொடர் கேள்வி

பிரித்தானியப் பாராளுமன்ற கூட்டத் தொடரில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைத் தீவின் இன்றைய நிலை குறித்து அடிக்கடி, கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

கார்த்திகை 21, 23, 29, 30ஆம் நாட்களில் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் திரு. கப்ஸ் (Mr. Gapes MP) திரு. டிம்ஸ் (Mr. Timms MP) திரு. கோர்பன் (Mr. Gorbyn MP) திரு. நீல் யெராட் (Mr. Gerrard MP) திரு. கொக்ஸ் (Mr. Cox MP), செல்வி. லெண்டர் (Miss Lester MP) ஆகிய

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அழிவிலிருந்து இனத்தைக் காக்கவே போராட்டத்தில் நாம் இணைந்தோம்

## விடுதலைப் போரில் இணைந்த விஞ்ஞான பீட மாணவர்

"நாம் இப்போராட்டத்தில் பங்கு கொள்வதன் நோக்கம் எமது இனத்தையும் கல்வியையும் எதிரியானவன் அழிப்பதைத் தடுப்பதற்காகவே. இன்றைய நிலை தொடர்ந்தால் எமது கல்வியின் நிலை என்னாவது! இதற்கு ஒரு முடிவை நாம் போராடியே எடுக்க வேண்டும்" இவ்வாறு விஞ்ஞானபீட மாணவர்கள் விடுத்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு: விடுதலைப் போராட்டமானது கல்வியை அடிப்படையாகக் கொண்டது. கல்வியும் போராட்டமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ள வாழ்க்கையில் தான் நாம் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எதிரியானவன் எங்கோ ஒரு மூலையில் நின்று எம் இனத்தை அழிக்கும் கொடூரத்தை உணர்ந்தும், உணர்விலிகளாக இருந்து விட்டோம். ஆனால் எதிரியானவன் எம்முன்னே வந்து எம் இனத்தை அழிக்கும் தம் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றான். ஆனால் இனியும் கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்க கையாலாகாத கோளைகளா நாம்!

மாணவ சமுதாயமே! சற்று சிந்தியுங்கள். எதிரியின் இந்த இன அழிப்பு நடவடிக்கையில் இது வரை எத்தனை பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன அழிப்போடு எமது கல்வியையும் ஆண்டாண்டு காலமாக அழித்து வருகின்றன. நாம் இப்போராட்டத்தில் பங்கு கொள்வதன் நோக்கம் எமது இனத்தையும் கல்வியையும் எதிரியானவன் அழிப்பதைத் தடுப்பதற்காகவே. இன்றைய சூழ்நிலை தொடர்ந்தால் எமது கல்வியின் நிலை என்னாவது! இதற்கு ஒரு முடிவை நாம் போராடியே எடுக்க வேண்டும். குறுகிய காலத்தில் ஒரு விடுதலையை அடைவதற்கு எம் கல்வி வளங்கள் அனைத்தையும் இன அழிப்பிற்கெதிராகப் பயன்படுத்துவோம்.

வாழ்வா! சாவா! என்ற நிலையில் நாம் எல்லோரும் உறுதியாகப் போராடி எமது மண்ணை மீட்கப் புறப்படுவோம்.

# வன்னியில் தங்கியுள்ள மக்களுக்கு அப்பகுதி மக்கள் பேருதவி

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான பல்வேறு உதவிகளை வழங்குவதில் அப்பகுதி மக்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நலனோம்பு நிலையங்களிலும் அதற்கு வெளியிலும் வாழ்ந்து வரும் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் புடவைகள் மற்றும் கோப்பைகள் போன்றவற்றைக் கிராமங்களில் சேகரித்து வழங்குவதுடன் தற்காலிக மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுத்து வருகின்றனர். இவர்கள் இடம்பெயர்ந்த மக்கள் விறகுகளைச் சேகரிப்பதற்கென தமது மாட்டு வண்டிகளைக் கூட இலவசமாகக் கொடுத்துதவ முன்வந்துள்ளனர். இதைவிட வன்னியிலுள்ள விளையாட்டுக் கழகங்கள் தத்தமது கிராமங்களில் உள்ள மக்களிடமிருந்து மரக்கறி மற்றும் கருவாடு போன்றவற்றைத் திரட்டி நலனோம்பு நிலையங்களிலுள்ள மக்களுக்கு வழங்கி வருகின்றன.

குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்களுக்கான சத்துணவுகளைக் கூட இவர்கள் சேகரித்து வழங்கி வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்திற்கான போர் முடிவானதல்ல, ஆரம்பமே!

## பி.பி.ஸியின் சிங்கள சேவையின் தயாரிப்பாளர்.

ஆரியக்கதிர் நடவடிக்கையின் போது இச் செய்தித் தயாரிப்பு வெளியிடப்பட்டது

"சிறிலங்கா இராணுவம் யாழ் நகரைப் பிடிக்கத் தான் தயாராகிவிட்டதாகக் கூறுகின்றது. யாழ் நகருக்கான போர் ஒரு முடிவான போர் அல்ல ஓர் ஆரம்பமே" இவ்வாறு பி. பி. ஸி சிங்கள சேவைத் தயாரிப்பாளர் பிரியத்லியனகே குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் போர் முடிவல்ல ஆரம்பமே என்ற தலைப்பில் அவர் தனது ஆய்வுரையில் மேலும் குறிப்பிடுகையில், யாழ் நகரைக் கைப்பற்றுவதென்பது சுலபமானதொன்றல்ல. நகருக்கான போர் கடுமையாகவே இருக்கும். இரு தரப்பும் பல உயிரிழப்பைச் சந்திக்கும்.

யாழ் நகரைப் பிடிப்பது அரச படைகளுக்கு உளரீதியில் பெரிய வெற்றியாக இருக்கும். 1987இல் இந்தியப் படைகள் நகரைக் கைப்பற்றுமுன் 15 முழு நாட்கள் புலிகளுடன் போராட வேண்டியிருந்தது. அதன் பின் விடுதலைப் புலிகளின் கடுமையான போர்ப் பொறியாக மாறிவிட்டது. முழுமையான இராணுவமாக, கனரக வண்டிகள், துப்பாக்கிப்படகுகள், பீரங்கிகள் என்பவற்றைக் கொண்டு இன்று புலிகள் திகழ்கின்றனர். புலிப்படையினர் கூட போரினால் இறுகிய மனோபலமும் அனுபவமும் கொண்டு விளங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 15 ஆயிரம் அரச படைகள் நிற்பதாக இராணுவம் கூறுகின்றது. புலிகளின் தரப்பில் எத்தனை பேர் என்பது தெரியவில்லை. ஆனால் ஆய்வாளர் கருத்துப்படி குறைந்தது 10 ஆயிரம் பேர் புலிகள் அணியில் நிற்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கான போர் நாட்கணக்கில் இழுபடலாம். உலகம் முழுவதும் உள்ள கெரில்லாப்படையினர் அனைவரும் யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டனர். யாழ்ப்பாணம் முழு அளவில் புலிகளால் நிருவகிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றினால் பிரச்சினை அப்போதே ஆரம்பமாகும் எனலாம். பிடித்த யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து தக்க வைத்திருப்பது மக்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியிருக்கும். புலிகளுக்கு விசுவாசமான பெரும்பான்மையான தமிழர்கள் உள்ளதால் இது கடினம். எனவே புலிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க பெரியதொரு ஆக்கிரமிப்புப் படை ஒன்று அரசுக்குத் தேவைப்படும்.

யாழ்ப்பாணத்தைவிட வேறு இடங்களும் புலிகளுக்கு உண்டு. கிழக்கில் கூட அவர்களுக்கு கணிசமான பலம் உண்டு. மூன்று வாரங்களின் முன் கொழும்பில் எண்ணெய் நிலைகள் மீது தாக்குதல் நடை-பெற்றது என்றால் அது நாட்டின் மீதிப் பகுதிக்கும் போர் விரிவடையப் போகின்றது என்பதையே காட்டுகின்றது.

எனவே இப்படியான முக்கிய இலக்குகளை காப்பாற்றவும் அரசுக்குப் படைகள் தேவை. யாழ்ப்பாணத்தைப் படைகள் கைப்பற்றியபின் தமிழ் மக்கள் மனங்களை வெல்ல பெரும் முயற்சிகளை அரசு செய்ய வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக அரச படையின் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து யாழ்ப்பாண மக்கள் வாழ்ந்தவர்கள். பல அத்தியாவசியப் பொருள்கள் தடைசெய்யப்பட்டிருந்தது. மின்சாரமும் இல்லை அவர்கள் கஸ்ரப்பட்ட வேளை புலிகளே அவர்களைப் பாதுகாத்தனர். குறை தீர்த்தனர். சிறீலங்காப் படைகள் என்றுமே யாழ்ப்பாணத்தில் வரவேற்கப்பட்டதில்லை.

எந்த மக்களை விடுவிக்கப்போவதாக அரச படைகள் கூறியதோ அதே மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு ஓடிக் கொண்டிருக்கின்றனர். இப்போரில் ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் அழியும். யாழ்ப்பாணம் வீழ்ந்தாலும் உள் நாட்டுப் போர் அத்தோடு முடியாது. ஓர் புதிய அத்தியாயம் பிறக்கும். இரு பக்கமும் பொதுமக்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகும். குறிப்பிட்ட இந்தப் போரையடுத்து இலங்கை முழுவதும் இரத்த வெள்ளம் சிந்தப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இடம்பெயர்ந்து செல்வோருக்கு வன்னியில் 50 நலனோம்பு நிலையம்

இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் செல்லும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நான்கு மாவட்டங்களில் 50க்கு மேற்பட்ட நலனோம்பு நிலையங்களை அமைத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலே மேற்படி 50க்கு மேற்பட்ட நலனோம்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புள்ளி விபரப்படி இதுவரை ஒரு லட்சத்துப் பதினோராயிரம் மக்கள் அங்கு சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

# புலிகளால் அழிக்கப்பட்ட 13வது வான் கலம்

பலாலி விமானப் படைத் தளத்திற்குச் சமீபமாக அண்மையில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 ரக விமானம் சிறீலங்கா விமானப் படையின் 13வது வான்கலம் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன் முதலில் 1979 இல் இரத்மலானையில் வைத்து ஒரு 'அவ்ரோ' விமானத்தைத் தகர்த்த புலிகள், சிறீலங்காவிற்கு முதலாவது வான்கல இழப்பைக் கொடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து காரைநகர் கடற்கரையில் சீபிளேன், மூதூரில் 'பெல்' ரக உலங்கு வானூர்தி, யாழ். கோட்டையில் சியாமாச்செட்டி குண்டு வீச்சு விமானம், வவுனியாவில் 'பெல்' ரக உலங்கு வானூர்தி, இயக்கச்சியில் வை-8 ரக விமானம், புனானையில் ஒரு உலங்கு வானூர்தி, பலாலியில் கரும்புலித் தாக்குதலில் ஒரு 'பெல்' உலங்கு வானூர்தியும் புலிகளால் அழிக்கப்பட்டன.

சிறீலங்கா சனாதிபதியாகச் சந்திரிகா பதவியேற்ற பின்பு, கடந்த சித்திரை முதல் நவக்கிரியில் அடுத்தடுத்து இரு அவ்ரோ விமானங்களும், சிறீலங்கா இராணுவத்தின் முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய புலிப்பாய்ச்சலின் போது மாகியன்பிட்டிப் பகுதியில் ஒரு புக்காரா குண்டு வீச்சு விமானமும் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன், பொன்னாலையில் வைத்து உலங்கு வானூர்தி ஒன்றும் சுடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 18-11-95 அன்று காலை கடற்புலிகளால் வை-8 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 விமானம் விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய சிறீலங்கா விமானப்படை விமானங்களில் 13வது விமானம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதைவிட நீர்கொழும்புக் கடலிலும், அண்மையில் பலாலிக் கடலிலும் 2 உக்கிரேன் நாட்டுத் தயாரிப்பான ஏஎன் 32 விமானங்களையும் சிறீலங்கா விமானப்படை இழந்துள்ளது. இதனை விட, பல உலங்கு வானூர்திகளும் பலத்த சேதமடைந்த நிலையில் மீண்டும் பாவிக்க முடியாத நிலைக்குள்ளாகியுள்ளன.

# ஆயுதங்களைக் கைவிடச் சொல்வது எமது உரிமைகளைக் கைவிடச் சொல்வதற்குச் சமமானது

## -மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர்

சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக, விடுதலைப் புலிகள் தொடர்ந்து போராடுவார்கள் எனவும் இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் ஆயுதங்களைக் கைவிடச் சொல்வதானது எமது உரிமைகளைக் கைவிடச் சொல்வதற்குச் சமமானது எனவும், தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயிரமாயிரம் ஆண்களும், பெண்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் 07-12-95 அன்று 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார். "துப்பாக்கி முனையில் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது" என்று தேசியத் தலைவர் கூறியதையும் நினைவுபடுத்தினார்.

# எறிகணைக்கு பலி

நாவற்குழி, கைதடிப் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்கள் மீது, சிறீலங்கா இராணுவத்தினர் கண்முடித்தனமான எறிகணைத் தாக்குதலை 26-11-95 இல் மேற்கொண்டனர். இதில் இரண்டு பெண்மணிகள் கொல்லப்பட்டுள்ளனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

கைதடிப்பகுதியில் முதியோர் இல்லத்திற்கு முன்பாக, கிணற்றில் குளித்துக்கொண்டு நின்றபோது, அதனருகில் நான்கு எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் கொக்குவிலில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவரான பாலச்சந்திரன் பாலசவுந்தலா (42) என்பவர் தலைதுண்டித்த நிலையில் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார். இவரது மகளான பா. மிதுலா (05) படுகாயமடைந்து இரு கால்களையும் இழந்துள்ளார். இளவாலைப் பகுதியைச் சேர்ந்த வயோதிப மாதுவான நவரத்தினம் சிவக்கொழுந்து (76) என்பவரும் இந்த எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்லா வழிகளிலும்

யாழ்ப்பாண மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிப்பதற்கே, தான் யுத்தம் செய்வதாகக் கூறித் தனது தமிழின அழிப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்கச் சந்திரிகா முயன்றார். முயல்கின்றார்.

ஆனால், யாழ்ப்பாண மக்களோ சந்திரிகாவின் சிறீலங்கா நிர்வாகத்தையும், பாதுகாப்பையும் ஏற்க மறுத்ததுடன் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தையும், பாதுகாப்பையும் விரும்பி ஏற்று வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் வன்னிக்கும் இடம் பெயர்ந்தனர். இதனாற் சந்திரிகாவினதும், சிறீலங்காவினதும் இனஅழிப்பு நோக்கினை உலகு தெளிவாக இனங்கண்டு கொண்டுள்ளது. அத்துடன், ஒரு அரசானது தனது மக்கள் எனக்கூறப்படும் ஒரு தொகுதியை, எப்பொழுது தனது எதிரியாகக் கருதத் தொடங்குகின்றதோ அப்பொழுதே, அம்மக்களை ஆள்வதற்கான சட்டரீதியான தகைமையை இழந்து விடுகிறது. சந்திரிகாவின் சிறீலங்கா அரச ஐந்து லட்சம் தமிழ் மக்களின் தேவைகளை நிராகரித்து, உணவை ஆயுதமாக்கி அவர்களை அடிபணிய வைக்க முயலும் செயற்பாடானது, தமிழ் மக்களை எதிரியாகவே கருதும் சிறீலங்காவின் போக்கைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கிறது. இதனால், இத்தகைய நெருக்கடிகளின்போது அகதிகளாக மாற்றப்படும் மக்களைச் சர்வதேச அகதிகளாகக் கருதி, ஐக்கிய நாடுகள் சபை அம்மக்களுக்கான மனிதாபிமான அடிப்படைத் தேவைகள் கிடைப்பதற்கான வேண்டுகோளை விடுப்பது சர்வதேச வழமை. இதற்கமையவே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர், தமிழ் மக்களது மனிதாபிமான அடிப்படைத் தேவைகள் குறித்து சர்வதேச வேண்டுகோளை விடுத்தார்.

அத்துடன், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், தமிழ் மக்களினது மண்-குறிப்பாக யாழ்ப்பாணம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள இந்நேரத்தில், சிறீலங்காவுடன் எவ்விதமான சமாதானப் பேச்சு வார்த்தைக்கும் இடமில்லை என்பதை உலகுக்குத் தெளிவுபடுத்தி, தமிழீழ மக்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்க உறுதி பூண்டு நிற்பதை வெளிப்படுத்தியுள்ளார். இதனை மறுத்து, இன அழிப்புச் செய்ய முயலும் சிறீலங்காவுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முழுப்பேரும் அம்பாறை முதல் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வரை போராடியே வாழவேண்டிய நிலை காணப்படுவதனால், விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து, சிறீலங்காவின் ஆக்கிரமிப்புத் தன்மையை வெளிப்படுத்தும்படி சர்வதேச சமூகத்தையும், நீதியான தீர்வின் மேல் அக்கறையுள்ள அனைவரையும் வேண்டி நிற்கின்றனர். அதேவேளை, எல்லா வழிகளிலும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றியடைய, இயலுமான எல்லாவற்றையும் செய்யப் புலம் பெயர்ந்த தமிழர்களும் உறுதி பூண்டு நிற்கின்றனர்.

சந்திரிகா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு - இன அழிப்பு இராணுவ நடவடிக்கைகளின் உள் அர்த்தங்களைப் புரிந்து கொண்ட விடுதலைப் புலிகள், பல்லாயிரம் படையினரையும் பல கோடி ரூபா சுடுதிறனையும் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும் தமிழ் மக்களையும் நேரடி யுத்தம் மூலம் அழிக்கச் சதித் திட்டம் தீட்டிய சிறீலங்காவின் இராணுவ தந்திரோபாயத்திற்கு எதிராக, புதிய உத்தி மாற்றங்களை மேற்கொண்டனர். இதனாற் சந்திரிகா எதிர்பார்த்த மிகப் பாரியளவிலான உயிர் இழப்புக்கள் எமது மக்கள் மத்தியிலோ போராளிகள் மத்தியிலோ ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது. மாறாக, சந்திரிகாவின் சிறீலங்காப் படைகளே பலத்த உயிரிழப்புக்களையும் ஆயுத, ஆளணி, தொழில் நுட்ப இழப்புக்களையும் அடைந்துள்ளன. அத்துடன் தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறுவது போல், ஆக்கிரமித்த மண்ணில் நிலை கொள்ள முடியாது அம்மண்ணையே தமது கல்லறைகளாக எதிர் நோக்கிக் கொண்டு நிற்கிறது சிறீலங்கா இராணுவம். எனவே, இந்நேரத்திலாவது சந்திரிகா, தனது படைகளின் சாவுக்குத் தானே காரணமாக இருக்காது, இலங்கைத் தீவில் அமைதி ஏற்பட, தமிழீழம் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, ஆக்கிரமிப்பை விலக்கித் தமிழீழத் தேசத் தலைமையுடன் எதிர்காலம் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

# பிள்ளைகளைப் போராட்டத்தில் இணைக்கும் பெற்றோர்களின் தொகை அதிகரிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பல பெற்றோர் தமது பிள்ளைகளை மனமுவந்து இணைத்து வரும் நிகழ்வுகள் தற்போது அதிகரித்து வருகின்றன. இவ்வாறு பொலிகண்டி 3ம் கட்டையைச் சேர்ந்த திருமதி பூரணம் தனது மகள் யோகராணி என்பவரை விடுதலைப் போரில் இணைத்துள்ளார். மேலும், பொலி கண்டி-அணிஞ்சிற்காடு, மகாலிங்கம் ஜீவராணி-வயது 15, மற்றும் மானிப்பாயிலிருந்து இடம் பெயர்ந்து தும்பளையில் வசித்து வந்த யோசப் ரவி-வயது 12 ஆகியோர் தமது பெற்றோர்களால் அண்மையில் போராட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

## நாடும், வீடும், படையும்

எமது மண்ணில் சிங்களப் படைகள் நடத்தும் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின்போதும் எமது மக்கள் உயிர்களை இழந்து, காயமடைந்து, அங்கவீனர்களாக ஆவதுடன், காலங்காலமாக சேர்த்து வைத்த சொத்துக்களையும், பண்பாட்டுச் சின்னங்களையும் ஒரே இரவில் இழந்து ஓட்டாண்டிகளாகும் அவலம் தமிழர் நிலத்து தலைவிதியாகிவிட்டது. இந்தத் தலைவிதிக்கு உண்மையில் எதிரி காரணமல்ல. எமது மக்கள்தான் காரணமென்பது ஒரு கசப்பான உண்மை. எதிரி படைகளை எமது ஊர்களுக்குள் வரவிடாது தடுக்கும் படைப்பலத்தை இதுவரை தமிழினம் பெறாததுதான் அந்தக் கசப்பான உண்மைக்குக் காரணமாகும். உழைப்பதிலும், சொத்துச் சேர்ப்பதிலும் எமது மக்கள் காட்டிய அக்கறையை, சேர்த்தவற்றை பாதுகாத்து அனுபவிக்க ஒரு பலமான காவற்படையை அமைக்க வேண்டும் என்பதில் காட்டவில்லை. விளைவு சேர்த்த அனைத்தையும் இழந்து வெறும் கையுடன், நிற்கும் நிலை அடிக்கடி எற்படுகின்றது. கடும் உழைப்பால் ஒருவன் பணத்தைச் சேர்த்து அதை பெட்டியில் வைத்துப் பூட்டாது திருடனிடம் பறி கொடுப்பதுபோல், எமது மக்களும் தமது செத்துக்களையும் பரம்பரை பரம்பரையாகத் தாம் சேர்த்த தேட்டங்களையும் ஓர் இரவில் எதிரியிடம் இழந்து பிச்சைக்காரன் வாழ்ந்த நிலையை தத்தெடுத்துக் காட்டுகின்றார்கள்.

தேனீக்கள் கூட தாம் சேர்த்த தேனைப் பாதுகாத்து தாம் உண்ண ஒரு காவற்படையை வைத்திருக்கும்போது தமிழன் மட்டும் உழைக்கும் மட்டுடன் திருப்தி அடையலாமா. வலிகாமத்தில் வசித்த ஒவ்வொரு குடும்பமும் தமது அசையும், அசையா சொத்துக்களில் கணிசமானவற்றை இழந்துவிட்டது, இப்போது அவர்களிடம் இருப்பது தம் பிள்ளைகள் மட்டும்தான். தகுந்தநேரத்தில் ஒரு அவசர இடம் பெயர்வை செய்ததால்தான் ஒவ்வொரு குடும்பமும் அந்தப் பிள்ளைகளைப் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. ஆயினும் முன்னேறிவரும் எதிரியின் படையை தடுத்து நிறுத்த ஒரு பலமான படையை அமைக்க புலிகள் இயக்கத்திற்கு உதவாது விட்டால் இந்த பிள்ளைகளையும் அநியாயமக இழந்து தவிக்க வேண்டிய நிலைமை எமது மக்களுக்கு ஏற்படலாம். எனவே ஒரு பிள்ளையையேனும் போராட்டத்தில் இணைத்து எதிரியின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த மக்கள் உதவ வேண்டும். எக்காரணத்தை கொண்டும் இந்தக் கடமையில் இருந்து நாங்கள் தப்பிக்க முனையக் கூடாது. ஒவ்வொரு குடும்பமும் தனது வீட்டை வேலி போட்டு, மதில் கட்டி தமது காணியை பாதுகாப்பதில் அக்கறை காட்டுகின்றது. இது தவறல்ல. ஆனால் எமது தேசத்திற்கு வேலி போட்டு, மதில் கட்டி, எமது தாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் கருத்தில் எடுக்காததால்தான் எங்கள் வீடுகளை இழக்க வேண்டி வருகின்றது.

எமது மக்கள் தத்தம் வீடுகளில் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழவேண்டும். ஆனால் எமக்கென ஒரு நாடு இருந்தால்தான் எமக்கென ஒரு வீடும் இருக்கமுடியும். சுதந்திரமானதொரு நாடும் பாதுகாப்பானதொரு வீடும் இருக்கவேண்டுமாயின் பலம் பொருந்திய படையொன்றை நாம் கொண்டிருக்க வேண்டும். எமது படையின் ஆட்பலம் பெருகினால்தான் வலிகாமத்தை மீட்டு எமது வீடுகளுக்குச் செல்ல முடியும். அந்த வெற்றிதான் நாம் இழந்துவிட்ட வழமையான எங்கள் வாழ்வை மீண்டும் எங்களுக்குப் பெற்றுத்தரும். ஆட்பலத்தை அதிகரித்து போரை வெல்வோம். போரை வென்று பறிபோன வாழ்வைப் பிடிப்போம்.

# கோரக்கொலை புரியும் படைக்கு சிங்களப் பேராயர் ஆதரவு

## தமிழ் கத்தோலிக்கர்களை வெட்கமடையச் செய்துள்ளது —யாழ் பதில் ஆயர் விசனம்

'கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் மிகக் கொடூரமான முறையில் இனப்படுகொலைகளைச் செய்துவரும் சிறீலங்காப் படைகளின் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு, ஒரு கத்தோலிக்கப் பேராயர் கூறியிருப்பது குறித்து, கத்தோலிக்கர்கள் ஆகிய நாம் வெட்கப்படுகின்றோம்'

இவ்வாறு, கொழும்பில் இருந்து சிங்களப் பேராயர் மார்க்கஸ் பெர்னாண்டோ, தமிழ் கத்தோலிக்கர்களை யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள சிங்களப் படைகளுக்கு உதவுமாறும், தமிழ் மக்களை அழிப்பதற்காகவே சேர்க்கப்படும் சிறீலங்காவின் தேசிய பாதுகாப்பு நிதிக்கு உதவிடுமாறும் விடுத்த கோரிக்கைக்கு, யாழ் மாவட்ட பதில் ஆயரும், குரு முதல்வரும் புனித சபீத குருமட அதிபருமாகிய பேராயர் இமானுவேல் விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திருப்பலி உண்டியல் பணத்தைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குமாறும், காயமடையும் இராணுவத்தினருக்கு இரத்ததானம் செய்யுமாறும், நத்தார் பண்டிகையின் போது அனாவசியச் செலவுகளைத் தவிர்த்து அதன் மூலம் மிச்சமாகும் நிதியைப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குமாறும் கொழும்புச் சிங்களப் பேராயர் அதி வணக்கத்திற்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கத்தோலிக்க மக்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருப்பது குறித்து, கருத்து வெளியிட்ட யாழ் மாவட்ட பதில் ஆயர் இவ்வாறு கூறியுள்ளார். கவலையும், அதிர்ச்சியும் அடைந்த குரலில் மேலும் அவர் தெரிவித்ததாவது: பேராயரின் இக்கோரிக்கை குறித்து, தமிழ் கத்தோலிக்க மக்கள் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளனர். சுமார் 5 இலட்சம் மக்கள் வலிகாமம், தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் வீதியோரங்களில் வாழ்கின்றனர். இவர்களுக்குப் போதிய உணவு, மருத்துவ வசதிகளில்லை. மழை, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களில் சிக்கி மக்கள் தவிக்கின்றனர். இத்தகைய சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் மக்களிற்குத் தென்பகுதி கத்தோலிக்கத் திருச்சபையினர் ஆகக்குறைந்த அனுதாபங்களைக் கூடத் தெரிவிக்கவில்லை என்றார் பதில் ஆயர். இறுதியாக பதில் ஆயர் அவர்கள், தமிழரிற்கு எதிராகத் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் நோக்கோடு இராணுவ ரீதியில் அரசு மேற்கொண்டி ருக்கும் இனஅழிப்பு நடவடிக்கையை-இப்போரை, சமாதானத்திற்கான போராக நியாயப்படுத்த முற் பட்டிருப்பதாக எண்ண முடிகின்றது. இதனால் கத்தோலிக்க மதமும் அரசியல் மயப்படுத்தப்பட்டு தமிழர் தேசியப் பிரச்சினை தீர்க்க முடியாத அளவிற்குப் பின்தள்ளப்பட்டுவிடும் எனத் தெளிவாகக் கூறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வன்னிப் பெருநிலப்பரப்பில் வைத்திய வசதிகள் அதிகரிப்பு

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ள மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நலன்புரி நிலையங்களில் நோயாளர்களைப் பராமரிப்பதில் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பகுதியுடன் இணைந்து, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் செயற்படுகின்றனர்.

தற்போது பிரெஞ்ச மருத்துவ உதவிக் குழுவின் (எம். எஸ். எவ்) அதிகாரிகள் சுகாதார பராமரிப்பு, தொற்று நோய்த் தடுப்பு என்பனவற்றில் பணியாற்ற முன்வந்துள்ளனர். இவர்கள் இதுவரை காலமும் பருத்தித்துறை, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சை நிபுணர்களாக பணியாற்றி வந்தது தெரிந்ததே.

## ஐ.தே.கவின் வழியிலேயே சந்திரிகா செல்கின்றார் சகோதரி சுனேத்ரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

ஐதேக. விழுந்த அதே குழியை நோக்கி இந்த அரசாங்கமும் இழுபட்டுச் செல்லும் அறிகுறிகள் துரதிட்ட வசமாகத் தென்படுகின்றன. இவ்வாறு ஜனாதிபதி திருமதி சந்திரிகாவின் சகோதரியான திருமதி சுனேத்ரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

அண்மையிற் கொழும்புத் தினசரி ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், 1970க்குப் பின்னர் பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் தேர்தலுக்கு முன் ஒரு முகத்தையும், அதன் பின்னர் வேறு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்குக் காட்டுகின்றனர். பல்வேறு உறுதிமொழிகளையும் வழங்கிப் பதவிக்கு வரும் அரசாங்கம் பின்னர் தமிழ் மக்களை ஏமாற்றிவிடுகிறது.

தமிழர்களின் நீதி, நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதாக இல்லை என அவர்கள் நினைப்பதையே இந்த யுத்தம் நீடிப்பது எடுத்துக்காட்டுகிறது.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கடதாசிகளில் எழுதப்பட்ட போதும் அவை நடைமுறைப் படுத்தப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் சுதந்திரச் செயற்பாடு பற்றிய ஒரு கேள்விக்குப் பதிலளித்த அவர், ஐதேகவைக் காட்டிலும் சிறந்த சூழ்நிலை தற்போது காணப்படுகிறது. ஆயினும் அநாவசியமான திசைகளுக்கு இழுபட்டுச் செல்லாமற் பார்த்துக் கொள்வது முக்கியம். அரசாங்கத்தின் முக்கியத்தர்கள் இதனைப் புரிந்து கொள்வது நல்லது எனவும் தெரிவித்தார்.

## தமிழ் இனஅழிப்பைக் கண்டித்து வன்னியில் கொடும்பாவி எரிப்பு.

சிறீலங்கா அரசபடைகள் யாழ் குடாநாட்டின் மீது மேற்கொண்டு வருகின்ற தமிழ் இனஅழிப்பைக் கண்டித்து, வன்னியில் பல இடங்களில் சிறீலங்கா அரசின் உயர் தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

வன்னிப் பகுதி வெகுசன அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கொடும்பாவி எரிப்பில், பெருமளவு எண்ணிக்கையான மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அண்மையில் சிறீலங்கா சனாதிபதி சந்திரிக்கா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், நீதி அமைச்சர் ஜி. எஸ். பிரிஸ் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கொடும்பாவிகளே பறை, ஒப்பாரியுடன் மக்களால் வீதிகள் தோறும் இழுத்துச் செல்லப்பட்டு பிரதான சந்திகளில் வைத்து எரிக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது மேற்படி பகுதிகளில் கடைகள் மற்றும் அலுவலகங்களை மூடி வன்னி மக்கள் ஆதரவு வழங்கினர்.

## பொருட்களை விலைகூட்டி விற்பது குற்றச் செயல்

இடம் பெயர்ந்துவரும் மக்களுக்கு, பொருட்களை அதிக விலைக்கு விற்கும் குற்றச் செயலுக்கு எதிராகக் கடும் தண்டனை வழங்கப்படும் என விடுதலைப்புலிகள் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுடுதண்ணீர் இரண்டு ரூபா முதல் ஐந்து ரூபா வரை விற்கப்படுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களும், விலை கூட்டி விற்கப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. மனிதாபிமானமற்ற இக்குற்றச்செயல்களுக்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அக்குறிப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துணையுடன் செஞ்சிலுவைச் சங்கம் உதவிகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துணையுடன் செஞ்சிலுவைச் சங்கம், இடம் பெயர்ந்தோருக்கான உணவுகளை வழங்கி வருவதாகப் பொதுநல நாடுகளதும் வெளிநாடுகளினதும் அலுவலக தெற்காசியப் பொறுப்பாளர் எம். எச். தோமஸ் கூறியுள்ளார். பிரித்தானிய அரசு, 250,000 பவுண்களை கார்த்திகை 3ஆம் நாள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுத்ததாகவும் 1,00,000 பவுண்களை கெயர் (Care) நிறுவனத்தின் மூலம் உதவ அனுமதித்தாகவும் கூறியுள்ள திரு. தோமஸ் அவர்கள் 7ஆம் நாள் 138,000 பவுண்களை ஐரோப்பிய சமூகம் அவசர தேவைக்காக உதவியதாகவும், இதில் கம்பளங்கள், பிளாஸ்டிக் கூரைகள், மருந்துகள் ஆகியவற்றை சாவகச்சேரியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியதாகவும் கூறினார். தற்காலிக இருப்பிடங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். ஆனால் இதில் முக்கியமானது என்னவென்றால் போதிய உணவுப் பொருட்கள் யாழ். குடாநாட்டைச் சென்றடைந்துள்ளதாகவும் இவை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டதாகவும் தாம் நம்புவதாக கூறியுள்ளமையே ஆகும்.

யாழ்ப்பாண குடாநாட்டின் அவசர தேவைக்குரிய தொகையில் மிகக் குறைந்த அளவான தொகையினையே எப்பொழுதும் சிறீலங்கா அனுப்பி வருகிறது. இதனை அனுப்புவதன் நோக்கம் சர்வதேச உலகின் நேரடித் தலையீட்டைத் தடுத்து, தான் உணவுகளை வழங்குவதாக பிரமையை ஏற்படுத்தவே. ஆனால் இந்த உணவுகள் பெரும்பாலும் படையினரின் தேவைக்காக இறக்கப்படுகிறதே தவிர அவை பொதுமக்களைச் சென்றடைகையில் அனுப்பப்பட்ட தொகை மிகக் குறைந்து விடுகிறது. அத்துடன் இராணுவ முகாம்களுக்கும் படை நடத்துவதற்கும் தேவையான பொருட்களுக்கே கப்பல்களில் அதிக இடம் கொடுக்கப்படுவதினால் உணவுப் பொருட்கள் போதியளவு அனுப்பப்படுவதில்லை. ஆகவே எம். எச். தோமஸ் போன்ற பொறுப்பு மிக்க பதவிகளில் இருப்பவர்கள் இவ் உண்மைகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் கண்டறிந்து சிறீலங்காவின் தந்திரங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பது இடம்பெயர்ந்த தமிழர்களின் கோரிக்கை. அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நேரடியாக கொடுக்கப்படும் உதவிகளே உண்மையில் மக்களை முழுமையாக, விரைவாகச் சென்றடைவதால் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்துடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துமாறு தமிழர்கள் வேண்டி நிற்கின்றனர்.

# வன்னிப் பிரதேசத்தில் குடியமரும் மக்களுக்குத் துரிதகதியில் உதவிகள்

## -தமிழீழத் தேசியத் தலைவர் ஏற்பாடு

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் குடியமரும் மக்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் இயன்றளவு உடன் செய்யுமாறு, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் தலைமையில், நூற்றுக் கணக்கான விடுதலைப்புலிகளைச் சேர்ந்த நிவாரணப்பணியாளர்கள், கிளிநொச்சியில் மார்கழி 8ஆம் நாள் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி, தலைவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான செயற்திட்டங்களை வகுத்தனர்.

வன்னிப் பிரதேசத்திற்கு இடம் பெயரும் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச படகுச் சேவையுடன் அவர்களின் உடைமைகள், உணவுப் பொருட்கள் என்பவனவற்றை வன்னிப் பிரதேசத்தின் எப்பகுதிக்கும் இலவசமாகக் கொண்டு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விதம் பயணம் செய்யும் மக்களுக்கு பிரயாணத்தின்போது இலவச உணவும், தேநீரும் வழங்கப்படவும் ஏற்படாகியுள்ளது. கிராம சேவகர்களின் உதவியுடன் குடியேற்றவாசிகளை அடையாளங் கண்டு, பட்டியல் தயாரிப்பதற்கான சுலபமான முறையொன்றும் விளக்கப்பட்டது. பங்கீட்டுகளைச் சுமூகமாக விநியோகிக்கவும் தவறுகளைத் தவிர்க்கவும் இம்முறை உதவும் எனத் தெரியவருகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் உள்ள மருத்துவ மனைகளுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு, அதிக மருத்துவர்கள் சேவைக்கமர்த்தப்படுவதன் மூலம், குடியேற்றவாசிகளின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளும் சேவைகளும்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பிரதேச வாரியாக இணைத்து வருகிறது. புதிதாகக் குடியமர வருபவர்களுக்குச் சமைத்த சாப்பாடுகள் வழங்குவதற்குத் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பொறுப்பாக உள்ளது. மரணச் சடங்குகளை நடாத்துவதற்கும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் நிதி உதவிகளை வழங்கி வருகிறது. கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர், பருவம் எய்தும் இளம் பெண்கள் ஆகியோருக்கு விசேட நிதி உதவிகளையும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வழங்கி ஆதரவு அளிக்கிறது.

ஒக்ஸ்பாம், கெயர், ரெட்பானா, பேருட் போன்ற மற்றைய சர்வதேச முகவர் நிறுவனங்களின் உதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குடியமர வருபவர்களைக் குடியமர்த்துவதற்கான முழுப் பொறுப்பினையும் ஏற்றுச் செயற்பட்டு வருகிறது. காணிகளைத் தேர்ந்தெடுத்து விவசாயத்திற்கும், குடிசைகள் அமைப்பதற்குமென இரு பகுதிகளாக வகுத்து, குடியமரும் மக்களுக்குக் காணிகளை வழங்கும் பணிக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பு வகிக்கிறது. இடம்பெயர்ந்தோரின் குழந்தைகளதும் சிறுவர்களதும் கல்வி வசதிகளை ஏற்படுத்தும் பணியிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடும் பணியாற்றி வருகிறது.

### தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணி

இடம்பெயர்ந்தோருக்கான தற்காலிக, நிரந்தர தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கைத்தொழில்களை நிர்வகித்து வந்தவர்களுக்கு இங்கும் அவைகளை நிறுவி நிர்வகிப்பதற்கான சகல விதமான ஆலோசனைகள், நிதி உதவிகள் என்பன இந் நிறுவனத்தால் அளிக்கப்படுகின்றது.

பெருந்தொகையான மக்களின் உட்செல்லுகையை அடுத்து, சனத்தொகை அடர்த்தி குறைந்த வன்னிப் பிரதேசம் புதிய பரிமாணத்துடன், சனத்தொகைச் செறிவு கூடிய பிரதேசமாக மாறியுள்ளது. வாழ்வதற்கான இருப்பிடங்கள் விரைவாகக் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. இதனால் புதிய தோற்றப் பொலிவுடன் இப்பகுதி காணப்படுகிறது. ஓரிரவிலேயே கிராமங்களும் நகரங்களும் உருவாக்கப்பட்டு, உருமாறிக் காட்சியளிக்கிறது. வன்னியில் தேநீர்க் கடைகளும், பலசரக்குக் கடைகளும் எங்கு பார்த்தாலும் அமைக்கப்பட்டு மக்களுக்கு போசனைக்கு உதவி வருகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விலைகளுடன் ஒப்பிடுகையில் புதிய வன்னிப் பிரதேச விலைகள் பெருவீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. சீனி கிலோ 37 ரூபாவாகவும், அரிசி கிலோ 22 ரூபாவாகவும், ஆட்டிறைச்சி கிலோ 75 ரூபாவாகவும் அதேநேரத்தில், முட்டை ஒன்று 5 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இடம்பெயர்வும் அரசியல் வெற்றியும்

கட்டுப்பாட்டையும், பயிற்சியையும், இவை காரணமாகப் பெற்ற துரித செயற்பாட்டையும் குணாம்சமாகக்கொண்ட ஒரு பெரிய படை, ஒரு பிரதேசத்தை விட்டு வேறு ஒரு பிரதேசத்திற்கு முற்றாக ஓர் இரண்டு நாட்களுக்குள் பிரவேசித்தமை அசாதாரணமான ஒரு விடயம். ஆனாலும் ஒரு ஒருங்கமைப்புக்குள்ளும், கட்டுப்பாடான கட்டளை அதிகாரத்துக்குள்ளும்தான் இத்ததைய பெரிய பின்வாங்கல் வெற்றிகரமாக அமைய முடியும்.

ஒரு படையின் இத்தகைய திடீர் இடம்பெயர்வுகளைப் போர் வரலாற்றில் ஆங்காங்கே காணலாம். ஆனால் வயோதிபம், நோய், இயலாமை, உடன்பட மறுக்கும் சுபாவம் போன்ற பல்வேறு சுபாவங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு மக்கள் திரள் ஒரு



பிரதேசத்தை விட்டு மற்றொரு பகுதிக்கு, அதுவும் திடீரென இடம்பெயர்ந்து செல்வது வரலாற்றில் அபூர்வமாக இடம்பெறும் ஒரு சம்பவம். அத்துடன் ஒரு ஒழுங்கு அமைவுக்குள் உட்படுத்தக் கடினமான பல்வேறு நினைவுகளை, பல்வேறு சுபாவங்களைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டம், பதட்டம் நிறைந்த போர்ச்சூழலில் மாபெரும் இடம்பெயர்வைச் செய்வது சாதாரண விடயம் அல்ல. அத்துடன் அத்தியாவசிய பொருட்களையும், தமது வளர்ப்பு மிருகங்களையும் கூட்டிக்கொண்டு மக்கள் நெருக்கடி நிறைந்த ஒடுங்கிய வீதி ஒன்றினால் பாம்புபோல் நெளிந்தும், மூட்டைப்பூச்சிபோல் நசுங்கியும், நத்தைபோல் ஊர்ந்தும் நகர்ந்தவிதம் உலகில் எல்லா மக்களாலும் செய்யமுடியாத தொன்று.

அத்தகைய சிரமமான நகர்வின்போதும் காயப்பட்ட போராளிகளை ஏற்றிவந்த வாகனங்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்காக, வெள்ளம் நிறைந்த வயல்வெளிக்குள் மக்கள் தாமாகவே வழிவிட்டுக் கொடுத்தனர். இத்தகையதொரு திடீர் இடம்பெயர்வு விடுதலைப்போர் நடக்கும் எந்தவொரு நாட்டிலும் நிகழ்ந்திருந்தாலும், அந்த இடம்பெயர்வு மாபெரும் அழிவுகளை அந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கியிருக்கும். சனநெருக்கடியால் இறந்துபட்டும், நோயால் அழிந்தும், பட்டினியால் செத்தொழிந்தும் ஒரு மனித அவலம் அங்கே அரங்கேறியிருக்கும். ஆனால் வலிகாமத்தின் திடீர் இடம்பெயர்வு இவ்வாறான சோகங்களை நிகழ்த்தவில்லை. ஒருசில துயரங்களையும், அதிகமானளவு சிரமங்களையும், துன்பங்களையும் எதிர்கொண்டபடி இந்த வரலாற்று இடம்பெயர்வை வலிகாமம் மக்கள் வெற்றியுடன் செய்து முடித்துவிட்டனர். சொத்து இழந்து, பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தபோதும், இடம்பெயர்ந்த இந்த மக்கள் இப்போது தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முயன்று கொண்டிருக்கிறார்கள். இது எமது மக்களின் உறுதியாலும், போராட்ட வெற்றியில் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையாலும், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது தேசாபிமான உணர்வாலும் கிடைத்த வெற்றியாகும்.

வலிகாமம் மக்கள் காட்டிய இந்த தேசாபிமானச் செயல் எமது போராட்டத்திற்குப் பாரிய ஒரு அரசியல் வெற்றியைப் பெற்றுத் தந்து விட்டது. புலிகள் இயக்கத்துடன்தான் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மையை இந்த இடம்பெயர்வு உலக சமூகத்திற்குக் காட்டிவிட்டது. அதாவது ஈழத்தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை இந்த இடம்பெயர்வு மூலம் தமிழ்மக்கள் சர்வபேதமின்றி உறுதிப்படுத்தியுள்ளார்கள். சிங்கள அரச பிரச்சாரம் செய்வதுபோல் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல. அது தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பாடுபடுகின்ற ஒரு விடுதலைத் தேசிய இயக்கம் என்ற உண்மையை உலகிற்கு எமது மக்கள் காட்டிவிட்டார்கள். அத்துடன் இத்தகைய யுத்தங்களைச் சிங்கள அரச எமது மக்கள்மீது திணித்தாலும் எமது அரசியல் உரிமைகளை முற்றுமுழுதாக வென்று எடுப்பதில் தமிழ்மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள் என்ற செய்தியையும் எமது மக்கள் இந்த இடம்பெயர்வுமூலம் தெளிவுபடுத்திவிட்டனர்.

எவ்வளவோ தியாகம் செய்து மக்கள் ஈட்டிய இந்த அரசியல் வெற்றியை ஒரு இராணுவ வெற்றியாக மாற்றிடவும் மக்களே உதவ வேண்டும். ஏனெனில் இராணுவரீதியாகச் சிங்களப் படைகள் தோற்கடிக்கப்படுவதிலேயே எமது மக்களின் வாழ்வு தங்கியுள்ளது. புலிகள் இயக்கத்தில் ஆட்பலத்தை அதிகரிக்கச் செய்ய மக்கள் முயலவேண்டும். அதன் மூலம்தான் நாம் ஒரு இராணுவ வெற்றியைப் பெறமுடியும்.

# கொலைகார அரசின் காவலர்கள்

வடக்கில் எறிகணை வீச்சு, பீரங்கித்தாக்குதல், விமானக் குண்டு வீச்சு என்பவற்றால் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்து, அநேகர் அங்கவீனர்களுமாகிக் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை பால் வேறுபாடின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் இடம்பெறும் தாக்குதலினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வீடு, சொத்துக்கள் மற்றும் விளை நிலங்கள் யாவற்றையும் இழந்து அகதி முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் மிகவும் அல்லலுறும் வாழ்வு நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்மக்கள் அல்லலுறுவது சர்வதேச மனித உரிமை அமைப்புக்களினதும், மனிதநேய அமைப்புக்களினதும், கவனத்தை ஓரளவேனும் கவர்ந்துள்ளதாகவே தெரிகின்றது. அண்மைக்காலத்தில் மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் சில இது குறித்து சிறிலங்கா அரசாங்கத்தைக் கண்டித்தமையையும், மனித நேய அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டமையையும் இதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆனால் நிலைமை இவ்வாறு இருந்தும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் இப்படுகொலைகள் குறித்து எதுவும் கண்டு கொள்ளாததோடு சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்கு ஆதரவு அளிப்பதில் தீவிர அக்கறையும் காட்டி வருகின்றன. இராணுவத்தின் நடத்தைக்கு, நற்சான்றிதழும் வழங்கி வருகின்றன.

அண்மையில் யாழ்மாவட்டத்தின் பெயரில் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஈபிடிபி யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி சந்திரிகா பதவி விலகக் கூடாது எனக் கோரியது, இதன் உச்சக்கட்டமாக இருந்தது. சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் இனப்படுகொலையில் ஈடுபடுகின்றதென்றால் தனியாக அதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் மட்டுமோ அன்றி சந்திரிகா குமாரதுங்கவோ மட்டும்தான் பொறுப்போ காரணமோ என்று கூறிவிட முடியாது. ஆளும் கட்சியுடன் அதற்கு ஆதரவளிக்கும் கட்சிகள், ஏன் எதிர்க்கட்சியுமே பொறுப்பாகும்.

ஏனெனில் ஆட்சி என்பது தனியாக ஆளும் கட்சியினுடையதல்ல, எதிர்க் கட்சிக்கும் அதில் பங்குண்டு. அரசாங்கத்தின் கொள்கை, ஏற்புடையது இல்லாதுவிடின், எதிர்க்கட்சிகள் பலமான தமது ஆட்சேபத்தைத்தெரிவிக்கலாம்.

அரசாங்கத்தின் செயலை நிறுத்தக்கோரலாம். ஆளும் கட்சி அதற்கும் உடன்படாத பட்சத்தில் தமது எதிர்ப்பைக் காட்டும் விதமாக ஒட்டு மொத்தமாகப் பதவி விலகலாம்.

ஆனால் சிறீலங்காவைப் பொறுத்த மட்டில் இனப்படுகொலை விடயத்தில் ஐதேகவிற்கும், பொஜ.முன்னணிக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடுகள் இல்லை. சிலவேளை எண்ணிக்கை விடயத்தில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் இதில் யார் உயர்வு, யார் தாழ்வு என்பதைத் தற்பொழுது கூறிவிட முடியாது. அத்தோடு, அவர்களின் முடிவுகள் குறித்து யாரும் எதிர்பார்க்க எதுவும் இல்லை. அவ்வாறு ஏதும் நிகழினும் அவை அவர்களின் அரசியல் இலாபநோக்கிற்கானவையாகவும், ஒரு எல்லை வரம்புடன் கூடியனவையாகவுமே இருக்கும்.

ஆனால் தம்மைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்பவர்களும், தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தம்முடனும் பேசித் தீர்க்கப்படவேண்டும் எனக் கோருபவர்களும் தமிழ்மக்களின் மீதானபடுகொலையைப் பற்றிக் கண்களை மூடிக்கொண்டிருப்பது ஒரு புறம் வேடிக்கையாவும், மறுபுறம் அவர்களின் போலித்தனத்தையும் காட்டுவதாக உள்ளது

ஐ. தே. கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொ. ஐ. முன்னணி அரசாங்கத்தையே ஆதரிக்கின்றனர். ஒரு வகையில் அவர்களை நம்பியே சிறுபான்மை அரசான பொ. ஐக்கிய முன்னணி அரசாங்கம் உயிர்வாழ்கின்றது என்று கூடச் சொல்லலாம்.

இந்நிலையில் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் இனப் படுகொலை ஒன்றை நடத்துகின்றது என்றால், அதற்குத் தமிழ் எம். பி. களின் ஆதரவு இல்லாதவிடத்து தமது ஆட்சி அதிகாரத்தையே பேணமுடியாது போய் விடும். அரசாங்கம் தொடர்ந்து பதவிவகிக்க முடியாது கவிழ்ந்து போகக் கூடிய நிலை கூடஉருவாகலாம்.

இந்தவகையில் இனப் படுகொலைக்கான பொறுப்பு தனியாக சந்திரிகாவின் பொ. ஐ. முன்னணிக்கு மட்டுமல்ல அதன் ஆட்சி தொடர்வதற்கு ஆதரவளிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. மறுவளமாக சந்திரிக்கா அரசாங்கம் புரியும் இனப்படுகொலைக்கு பாதுகாப்பு அளிக்கும் கவசமாகவும் அவர்கள் உள்ளார்கள்.

அதாவது உலகத்தின் பார்வையில் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் இவர்கள், சந்திரிகா அரசாங்கத்தை ஆதரிப்பதென்பது, அரசின் படுகொலை

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைச்சர் கதிர்காமருக்கு ஒரு திறந்த மடல்



'மாண்புமிகு' அமைச்சர் கதிர்காமர் அவர்களுக்கு இராணுவத்தினரால் ஏவி விடப்பட்டு சீறிப்பாய்ந்து வரும் ஏவுகணைகளுக்கு உயிர்தப்பி, தொடரும் நடவடிக்கைகளால் இடம் பெயரும் அப்பாவித் தமிழ்மகன் ஒருவன் எழுதும் மடலிது.

சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சுப்பொறுப்பை நிர்வகிக்கும் பாரிய 'வேலைப் பளுவும்' பல்வேறு நாடுகளுக்கும் பறந்து திரியும் பயணக்களைப்பும் இந்த மடலை வாசிக்கும் கால அவகாசத்தை உங்களுக்குச் சிலசமயம் மறுத்து விடக்கூடும். இருந்தபோதும் உலகப் பெருமன்றம் எனப்படும் ஐக்கிய நாடுகள் பேரவையில் நீங்கள் ஆற்றியுள்ள நீண்ட உரை எங்களது செவிகளுக்கும் எட்டியுள்ளதால் சில விடயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் எற்பட்டு விட்டது. அதனால் இந்தத் திறந்தமடலை வரைய வேண்டியதாகிவிட்டது. பட்டங்கள் எதையும் எமதாக்கிக் கொள்ளாத போதும், சட்டங்களின் நுணுக்கங்களைப் புரியும் அளவுக்குப் புலமை பெற்றிருக்காத போதும் எமது வாழ்வின் இருப்பிற்குச் சிறீலங்கா இராணுவத்தின் பிரசன்னமும், செயற்பாடும் ஊறு விளைவிப்பதாகவும் கேடு செய்வதாகவுமே இருக்கின்றது என்பதைத் தெளிவாகவே புரிந்து கொண்டுள்ளோம். அதனாலேதான் இராணுவத்தினரின் இருப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டியதைத் தவிர்க்க முடியாத கடமை எனவும், காலத்தின் கட்டளை எனவும் மனதார நம்புகின்றோம். இராணுவத்தினர் இந்த மண்ணிலிருந்து விலக வேண்டுமென முற்றுமுழுதாக மனப்பூர்வமாக விரும்புகின்றோம்.

இந்த மண்ணில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வேட்கையை உணர்ந்து கொள்வது, உங்களுக்குக் கடினமானதாகத்தான் இருக்கும். செம்மண்ணின் புழுதிவாசனையைக் கூட பல தசாப்தங்களுக்கு முன்னரே மறந்து விட்டு, 'கலம்பு டமில்ஸ்' எனக் கெளரமாகக் கருதிக்கொண்டிருக்கும் உங்களைப் போன்றவர்களுக்கும் கூட, இதனைச் சிலவேளை புரிந்து கொள்ள முடியாது இருக்கலாம். இதனை நாங்கள் அறிவோம். எனவேதான் உங்களால் புரிந்து கொள்ள முடியாத, உணர்ந்து கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்களை நீங்கள் முன் வைப்பது சற்றேனும் பொருத்தப்பாடானதாக இல்லை.

நீங்கள் தமிழராகவே இன்னும் கருதப்படுவதால்தான், 1994 ஆண்டிற்குப் பின்னர் உங்களுக்குத் திடீர் யோகம் அடித்தது என்ற ஞானோதயம் இப்போதாவது ஏற்படாவிட்டால், பின்னர் வருத்தப்படுவதில் பயனேதும் கிட்டாமற் போய்விடலாம் என்பதைத் தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள்.

இனி நீங்கள் ஆற்றிய நீண்ட உரையில் வரும் இரண்டு முக்கியமான விடயங்களைப் பற்றி மட்டும், சிறிது சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

முதலாவதாக, தவறு இழைக்கும் நாடுகள் மீது பாதுகாப்புச்சபை, பொருளாதாரத் தடை விதிக்கும் முறையை நீங்கள் கண்டித்திருக்கிறீர்கள்-இந்தத் தடைகள் அப்பாவிப் பொது மக்களையே பாதிப்பதாகவும். சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்-சாதாரண பொதுமக்களின்பால் உங்களுக்கும் உங்களது அரசுக்கும் இருக்கும் அக்கறையைக் காட்ட நீங்கள் எடுத்த முயற்சி கவனிக்கத்தக்கதே.

ஆனால், உங்களது அரசு இவ்வாறான நடைமுறையைச் செயற்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. அரசுக்கு எதிரான போராட்ட முனைப்பை மழுங்கடிப்பதற்கு உணவுப் பொருட்களையும். எரிபொருட்களையும் இன்னும் இதுபோன்ற பல அத்தியாவசியப் பொருட்க்ளையும் ஒரு ஆயுதமாக உங்களது அரசு நடைமுறைப்படுத்தி வருவது உலகெங்கும் தெரிந்த விடயம்தானே. இதனால் ஆயுதம் ஏந்திப் போராடுபவர்கள் பாதிக்கப்படுவதை விடவும் அதிகமாக அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை எப்படி உங்களால் மறுதலிக்க முடியும்! அல்லது நியாயப்படுத்தமுடியும்.

எனவேதான் ஐக்கிய நாடுகள் சபை, பொருளாதாரத் தடை விதிப்பதைக் கண்டிக்கும் தார்மீக உரிமை கூட உங்களுக்கோ அல்லது உங்கள் அரசுக்கோ இல்லை என்பது எமது கருத்தாகும்.

அடக்கு முறையை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத்தடை என்ற ஆயுதம் பிரயோகிக்கப்படுவது பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதற்கு ஒப்பானதாகும் என்று, எங்கள் கிராமத்து முதியவர்கள் தங்களுக்குச் சுட்டிகாட்டச் சொல்கிறார்கள்.

இரண்டாவதாக, இப்பகுதியில் வாழும் பத்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளின்பாலும், நீலக்கண்ணீர் சொரிந்து இருக்கிறீர்கள். இது வழமைபோல உங்கள் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்களில் ஒன்றாக இருக்கும் போது கூட, இந்தக் கண்ணீரைத் துடைப்பதற்காக இங்கிருந்து எந்தக் கையும் நீளப்போவதில்லை. ஏனெனில் உங்களைப்போல படித்து முன்னேறும் வாய்ப்போ, அல்லது அமைதியான சூழ்நிலையோ வாய்க்காத இந்தச் சிறுவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவது தங்களதும், இனத்தினதும் இருப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்காகவே.

மேலும், பத்து வயதுச் சிறுமியாக இருந்தபோது கண்ணெதிரே நடைபெற்ற தந்தையின் படுகொலை நிகழ்ச்சியே, தன்னை அரசியல் அரங்கிற்கு இழுத்து வந்ததாக உங்கள் மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா கூறிக்கொள்வது உங்கள் காதுகளில் விழுந்திருக்கும். அது உண்மையானால் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகச் சாவுகளுக்கும், சாவுக்கு இட்டுச் செல்லும் பல்வேறு பயங்கர நிகழ்ச்சிகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறுவர்களின் மனோநிலை எப்படிப் பட்டதாக இருக்க முடியும்! இதனைக் கற்பனை செய்து பார்க்கும் பொறுப்பைச் சட்டத்துறை வல்லுன்ரான தங்களிடம் விட்டுவிடுகிறோம்.

பத்தாண்டு காலம் என்பது ஒரு இனத்தின்-சமூகத்தின் வரலாற்றில் பாரியதொரு காலப்பகுதியல்ல. ஒரு புள்ளியளவால் குறிப்பிடப்பட்டு விட முடியும். எனினும் ஒரு தனிமனிதனின் வாழ்க்கைக் காலத்தில் இது பெரியதொரு பகுதியே என்பதில் ஐயமில்லை. சிறீலங்காவைப் பொறுத்து 1971 ஏப்ரலில் பிரகடனமான அவசரகால நிலை, இடையிற் சில மாதங்கள் வரை தளர்வடைந்திருக்கலாம். ஆனால் 1978ல் பயங்கரவாதத் தடைச்சட்டம் (தற்காலிகம்) அறிமுகமானது முதல் இன்றுவரை எமது மண்ணில் போர்ச் சூழல் எவ்வகையிலும் தணியவில்லை. இயல்பு வாழ்க்கை என்பது என்ன! என்ற கேள்வி எழுப்பும் நிலையில்தான் இன்றைய இளைஞர் சமூகமும் மக்களும் இருக்கின்றனர். இதனால் ஆயுதங்கள் ஏந்துவதும், களத்தில் நின்று போராடுவதும்தான் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத விதி என்று இம மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகவே நம்புகின்றனர்.

கொழும்பிலுள்ள உங்களையும் உங்களைப் போன்றவர்களையும் பொறுத்தவரையில், இனப்பிரச்சினையின் தோற்றம் என்ன! வடிவம் என்ன! என்பன போன்ற விடயங்கள் ஆய்வுக்குரிய பொருளாக இருக்கலாம். ஆனால், எமது வாழ்க்கைக்கான உத்தரவாதம் நிலைநாட்டப்படுவதும் எமது இருப்பிற்கான அச்சுறுத்தல் எதுவும் இருக்கக்கூடாது என்பதும்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்வை நோக்கிய திசையில் இட்டுச் செல்லக்கூடும். அதனை உங்களது அரசு உத்தரவாதப்படுத்தும் என்ற நம்பிக்கை சித்திரை 1995 க்குப் பின் பறிபோய்விட்டது. எனவேதான் திருச்செல்வம்கள், குமாரசூரியர்கள், தேவநாயகம்கள் வரிசையில் உங்களது பெயரும் இடம்பெறுவது வரலாற்றில் தவிர்க்கமுடியாதது ஆகும்.

ஹமீத்துக்கள் அல்லது ஹேரத்துக்கள் ஐ.நாவில் இந்த உரையை நிகழ்த்தியிருந்தால் நாங்கள் பொருட்படுத்தியிருக்க ஏதும் இருந்திருக்காது என்பதைக் கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

> இந்த மண்ணில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வேட்கையை உணர்ந்து கொள்வது, உங்களுக்குக் கடினமானதாகத்தான் இருக்கும். செம்மண்ணின் புழுதிவாசனையைக் கூட பல தசாப்தங்களுக்கு முன்னரே மறந்து விட்டு, 'கலம்பு டமல்ஸ்' எனக் கௌரவமாகக் கருதிக்கொண்டிருக்கும் உங்களைப் போன்றவர்களுக்கும் கூட, இதனைச் சிலவேளை புரிந்து கொள்ள முடியாது இருக்கலாம். இதனை நாங்கள் அறிவோம்.

# சுதந்திர வாழ்வு கருதி உறுதியுடன் இருப்போம்

"தற்போதைய போர்ச்சூழல் காரணமாக வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் பெருமளவு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத் துன்ப துயரங்களை எமது இனத்தின் சுதந்திர நல்வாழ்வு கருதி நாம் அனைவரும் உறுதியோடு தாங்கிக் கொள்ள வேண்டும்'

என்ற உறுதி எமது மக்கள் மத்தியில் வலுவாக வேரூன்றி வருகின்றது. தமது இடப்பெயர்வு குறித்தும் மக்கள்படும் இன்னல் குறித்தும் இடம்பெயர்ந்து வந்துள்ள வலிகாமம் பகுதிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்த கருத்து வருமாறு:

'இந்தியாவிலிருந்து தமிழர்களது படையெடுப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்தமை காரணமாக, சிங்கள அரசர்கள் தமது இராசதானிகளைத் தென்பகுதி நோக்கியும் மலையகப் பகுதிகளை நோக்கியும் நகர்த்தியபடியால் சிங்கள இனமும் சிங்கள அரசும் இலங்கைத் தீவில் அழிவுறாமல் காப்பாற்றப்பட்டு நிலைபெறக் கூடியதாக இருந்தது. அவர்கள் அநுராதபுரத்தையும், பொலநறுவையையும் மாற்றாமற் தொடர்ந்து தலைநகராக வைத்திருக்க எண்ணியிருந்தால் சிங்கள அரசு அழிவுற்றிருக்கும்.

அதுபோல, போர்த்துக்கேயர் படையெடுப்பு நிகழ்ந்தபோது யாழ்ப்பாண இராசதானி அழிவுற்றதே தவிர, வன்னிப்பகுதி பாதுகாப்பான இடமாக இருந்தபடியால் ஐரோப்பியர்களது ஆக்கிரமிப்பிற்கு மத்தியிலும் வன்னியில் தமிழரசு மேலும் இரு நூற்றாண்டுகள் நிலை பெற்றிருந்தது. இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாடு மீதான தற்போதைய படையெடுப்புச் சூழ்நிலையில் நாம் ஏன் பாதுகாப்பும் வளமும் நிறைந்த வன்னிப் பகுதிக்கு நகர்வு செய்து, தமிழினத்தையும் எமது சிறப்புக்களையும் பாதுகாக்கக் கூடாது! எனவே எமது தமிழினத்தின் உறுதியான எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தற்போதைய துன்ப துயரங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோகங்களைச் சுமக்கும் தென்மராட்சி

"காலம் காலமாக வியர்வை சிந்தி, சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்த அனைத்தையும் ஒரு நொடியில் இழந்துவிட்டு இன்று குடிப்பதற்குக் கூட ஒரு கோப்பைக்கு வழியின்றித் தவிக்



கின்றோம்" என வேதனையுடன் தனது நிலையை விளக்கினார் ஆவரங்காலைச் சேர்ந்த அருமைத்துரை என்ற குடும்பஸ்தர். இது இவருக்கு மட்டும் ஏற்பட்ட சோக நிகழ்வல்ல. 'இடி முழக்கம்' 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த பல்லாயிரக் கணக்கானவர்களின் நிலையாகவும் உள்ளது.

பொன் விளையும் பூமியாகத் திகழ்ந்த மண்ணையே நம்பிக் காலம் காலமாக உழைத்து வாழ்ந்து வந்த மக்கள் இன்று தத்தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

## இடர்சூழ்ந்த வாழ்வில் இன்னலுறும் இடம்பெயர்ந்தோர் நிலைமைகள்

நெற்றிவியர்வை நிலத்திலே சிந்த, தமது உதிரத்தை உரமாக்கி உழைப்பால் உயர்ந்து நின்ற இவர்கள் இன்று உடுத்த உடுப்பிற்கு மாற்றுடை இன்றி, நீா அருந்தக் கூட ஒரு கோப்பையின்றி, படுத்துறங்கப் பாயின்றி மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் பாடசாலைத் திண்ணைகளிலும் ஒரு நேர உணவுடன் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் சோக நிகழ்வுகளை இன்று தென்மராட்சி எங்கும் காணக்கூடியதாகவுள்ளது.

அதிகாலை வேளை எறிகணைகளின் அதிர்வுகளால் திடுக்குற்று எழுந்த மக்கள் தத்தமது உயிர்களைப் பாதுகாத்திடும் நோக்குடன் கையில் அகப்பட்டவற்றையும்

நெற்றிவியர்வை நிலத்திலே சிந்த தமது உதிரத்தை உரமாக்கி உழைப்பால் உயர்ந்து நின்ற இவர்கள் இன்று உடுத்த உடுப்பிற்கு மாற்றுடை இன்றி, நீர் அருந்தக் கூட ஒரு கோப்பையின்றி, படுத்துறங்கப் பாயின்றி மரங்களின் கீழும் வீதியோரங்களிலும் பாடசாலைத் திண்ணைகளிலும் ஒரு நேர உணவுடன் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் சோக நிகழ்வுகளை இன்று தென்மராட்சி எங்கும் காணக்கூடியதாகவுள்ளது.

குழந்தைகளையும் தூக்கியவாறு தென்மராட்சி நோக்கி ஓடித்தஞ்சமடைந்தனர்.

அம்மாவைக் காணவில்லை, அப்பாவைக் காணவில்லை, வயது போனவர்களைவிட்டு விட்டு ஓடி வந்து விட்டோம், வீதிகளிலே சடலங்கள் கிடப்பதாகக் கூறுகிறார்கள், அது எம்மவர்களுடையதாக இருக்குமோ என்பன போன்ற ஏக்கம் பலரது மனங்களில் குடிகொண்டுள்ளது.

எங்கள் வீடுகளை எல்லாம் இராணுவத்தினர் எரித்துச் சாம்பராக்கியும் சொத்துக்களைச் சூறையாடியும் செல்வதாகத் தப்பி வந்தவர்கள் தெரிவிப்பதைப் பார்த்தால் எங்கள் எதிர்கால வாழ்வு எப்படி அமையப் போகிறது!'

என்ற ஏக்கம் இவர்களைச் சுட்டெரித்தபடியே இருக்கிறது. இடம் பெயர்ந்த இவர்கள் இன்று மட்டுவில் முதல் பளைவரையுள்ள பிரதேசங்களில் உள்ள உறவினர் வீடுகளிலும், இடம் பெயர்ந்தோர் நலனோம்பு நிலையங்களிலும், ஆலயங்கள் மற்றும் வீதியோர மரங்களின் கீழும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களை இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரவணைத்துப் பராமரித்து வருகிறது. தென்மராட்சியில் பல பாடசாலைகள் மூடப்பட்டு அங்கு இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், கமலாசினி வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், கோயிலாக்கண்டி மகாலக்சமி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், கைதடி நுணாவில் வித்தியாலயம், மட்டுவில் சரஸ்வதி



வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகாவித் தியாலயம், கோயில் குடியிருப்பு றோ. க. பாடசாலை சரசாலை கணேசா வித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் தற்போது இம்முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்குத் தேவையான உணவுகளையும், பராமரிப்பு நடவடிக்கைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டுவரும் அதே வேளை அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் தேவையான மரக்கறி

வகைகளை வழங்கி வருகிறது. இவர்களுடன் இணைந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினரும், விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினரும் இவர்களுக்கான சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை வாரந்தோறும் வழங்கி வருகின்றனர்.

இவர்களுக்கான உணவுகள் அந்தந்த முகாம்களில் வைத்தே சமைத்து வழங்கப்படுகிறது. நேர அட்டவணையின் பிரகாரம் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் சமையலில் உதவி வருகின்றனர்.

இவர்களுக்கு மூன்று நேர உணவும் தேநீரும் கிடைக்கின்றதே தவிர, அடிப்படை வசதிகள் எதுவுமே

இல்லாத நிலையே காணப்படுகின்றது. வகுப்பறைகளுக்குள்ளும், வெளியேயும் வெறும் தரையிலேயே குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட வயோதிபர்கள் கூடப்படுத்துறங்கும் பரிதாப நிலையைக் காணலாம்

இம்முகாம்களில் ஒவ்வொரு கிணறும் ஐந்து வரையான மலசல கூடங்களுமே காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அங்கு தங்கியுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் பயன்படுத்துவது என்பது இலகுவானதல்ல. அந்தந்த இடங்களில் இவர்கள் ப்டும் வேதனைகளை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது.

இவ்வாறு இடம்பெயர்ந்தோர் நலனோம்பு நிலையங்களில் தங்கியிருப்பவர்களை விட மேலும் பல ஆயிரக்கணக்கானவர்கள் உறவினர் வீடுகளிலும், ஆலயங்களிலும், சன சமூக நிலையங்கள், சிறிய சிறிய பாடசாலைகள் மற்றும் மர நிழல்களிலும் தங்கிக் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

இவர்களுக்கு உதவ எவரும் முன்வராத நிலையில் இவர்கள் ஒரு நேர உணவை மட்டுமே உட்கொண்டு பெரும் சிரமத்தின் மத்தியில் காலத்தை நகர்த்திய வண்ணமுள்ளனர். முகாம்களில் பெரும்பாலனவை நிரம்பி வழிவதால் அங்கு சென்று தங்க வசதியின்றி இவர்கள் இவ்வாறான இடங்களிலேயே படுத்து உறங்குவதைக் காணமுடிகிறது.

மழைக்காலம் ஆரம்பமாகி விட்டதால் இவர்களது நிலை மிகவும் கவலைக்கிடமானதாகவேயுள்ளது. பச்சிளம் பாலகர்கள் முதல் பாட்டிமார் வரை, ஒரு நேர உணவுடன் மரநிழல்களின் கீழ் சுருண்டு கிடப்பது வேதனை அளிக்கிறது. மட்டுவில் தெற்கு சாந்தநாயகி அ.த.க. பாடசாலையில் மட்டும் இருபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த நூறு பேர் வரையில் இவ்வாறு தங்கியுள்ளனர். இவர்கள் தங்கியிருக்கும் பாடசாலை முகாமாகக் கணிக்கப்படாமையால் அங்கு பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. இடம்பெயர்ந்தவர்கள் வகுப்பறையைச் சூழ தமது கைப்பைகளை அடுக்கிவிட்டு படுத்துறங்க நடுவில் மாணவர்கள் அமர்ந்திருந்து கல்வி பயின்று கொண்டிருப்பதை நேரில் காணமுடிகிறது. இடம் பெயர்ந்தவர்கள் வகுப்பறைகளுக்குள்ளும் வெளிப்புறங்களிலும் இருந்து பெரும் சத்தங்களை எழுப்பியவாறும் ஓடித்திரிந்தபடியும் இருக்க ஆண்டு ஐந்து வரையான அந்தச் சிறார்களும் ஆசிரிய, ஆசிரியைகளும் மிகவும் அமைதியாக இருந்து தமது கல்வியைத் தொடர்ந்த வண்ணமிருந்தனர்.

இவ்வாறான பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவர் பின்னாலும் பல்வேறு சோகங்கள் புதைந்து கிடந்தமை, அவர்களை அணுகிய போது வெளிப்பட்டன. ஈவினை வடக்கில் வசித்துவந்த வேல் சிவநாதன் தேவி எனும் குடும்பமாதைச் சந்தித்தபோது, கடந்த மாதம் எமது பகுதியை இராணுவம் சூழ்ந்து கொண்டதால் பிள்ளைகளை மட்டும்



தூக்கிக்கொண்டு ஓடிவந்து அச்செழு பாடசாலையில் தங்கியிருந்தோம். இராணுவம் ஏவிய எறிகணைகள் நாம் தங்கியிருந்த பாடசாலையைச் சூழ இருந்த வீடுகளில் வீழ்ந்து வெடித்தன. இதன்போது ஐவர் பலியாகியதுடன் ஆறுபேர் வரையில் காயமடைந்தனர். இதனால் பீதியடைந்த நாங்கள் அங்கிருந்து இரவோடு இரவாக வெளியேறி செம்பாட்டுப்பிள்ளையார் கோவில் தேர் முட்டிக்குள் போய்த் தங்கினோம். அதற்குள் எல்லோரும் இருக்கவோ, படுக்கவோ முடியாத நிலை ஏற்பட்டதால் அங்கிருந்து பன்னாலை கன்னி அம்மன் கோவில் ஆலமரத்தின் கீழ் தஞ்சமடைந்திருந்தோம். அங்கு வைத்து ஒருசில பாத்திரங்களைக் கொண்டு சமைத்து

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொலைகார அரசின் ...

நடவடிக்கையை மூடிமறைப்பதற்கு உதவும் செயலாகும். இது வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இனப் படுகொலைக்கு அரசின் சார்பில் விளக்கம் அளிப்பதைவிட மோசமானதாகும். இவர்களை கொலைகார அரசின் காவலர்கள் என்று கூறுவதிலும் தவறில்லை.

## வை-8 இன் பெறுமதி ஐம்பது கோடி ரூபா

அண்மையில் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட வை-8 இராணுவ போக்குவரத்து விமானம், சிறீலங்கா அரசினால் 50 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இந்த ரக விமானங்களில் மூன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும் ஏற்கனவே இயக்கச்சியிலும், அண்மையில் பலாலியிலுமாக இரு வை-8 விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட நிலையில் தற்போது இந்த ரக விமானம் ஒன்று மட்டுமே எஞ்சியுள்ளது.

இதைத் தவிர, இராணுவ போக்குவரத்து விமானங்களாக தற்போது 'அன்ரனோவ் 32' ரக விமானம் ஒன்று மட்டுமே சிறீலங்கா விமானப்படையிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவுக்கு உல்லாசப் பயணம் செல்ல வேண்டாம்

சிறீலங்காவுக்கு உல்லாசப் பயணம் செல்ல வேண்டாம் என உல்லாசப் பயணிகளுக்கு, தெற்காசிய விவகார அமைச்சர் திரு. கன்லி பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அறிவித்தார். வெளிநாட்டவர்களை இலக்காக வைத்துத் தாக்குதல்கள் நடக்காத போதிலும், பொது இடங்கள் எல்லாமே அபாயத்தினை எதிர்நோக்குவதாகவும் அவர் கூறினார். இவை எழுத்து மூலமான பதில்களாகும். பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. டிட்ஸ் இன் இலங்கைத் தீவில் எந்த பகுதி பாதுகாப்பானது, எப்போது இது குறித்து பிரித்தானியா தனது கொள்கையை மறுபரிசீலனை செய்தது என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், திரு. கன்லி மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், வேறு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில், "சிறீலங்காவையும் விடுதலைப் புலிகளையும் பொது மக்களின் பாதுகாப்புக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்படி" அவர் கேட்டுக் கொண்டார்.

## பலாலித் தளம் ஒரு தங்கச் சுரங்கம்

சிங்கள அரசு, பாரிய படை ஒன்றைப் பெருந்தொகை ஆயுதங்களுடன் நிறுத்தி வைத்திருக்கும் செயல், ஓட்டை-ஓடிசல் கொண்ட கப்பல் ஒன்றில் ஒரு சிங்கம் ஆட்சி புரிவதற்கு ஒப்பானது. கப்பல் மூழ்கத் தொடங்கும் வரை சிங்கம் இராசாத் திமிருடன்தான் உலாப்போகும்.

வலிகாமம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகள் அபரிமிதமான அளவில் பயன்படுத்தி வரும் படைக்கல சக்தி, மக்களுக்கு அச்சத்தை ஊட்டுகின்றது என்பது உண்மைதான். ஆயினும் வலிகாமத்தில் எதிரிப்படைகள் காட்டும் பலப் பிரயோகம் கண்டு தமிழ்மக்கள் பயந்து நடுங்கத் தேவையில்லை. இது தமிழ் இனத்தால் சமாளிக்கக்கூடிய ஒரு இராணுவச் சவாலே! என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சவாலுக்கு வெற்றிகரமான முறையில் முகங்கொடுக்கும் நோக்குடனேயே தீவிர ஆட்சேர்ப்பில் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது.

வலிகாமத்தில் சிங்கள அரசு, பாரிய படை ஒன்றைப் பெருந்தொகை ஆயுதங்களுடன் நிறுத்தி வைத்திருக்கும் செயல், ஓட்டை-ஓடிசல் கொண்ட கப்பல் ஒன்றில் ஒரு சிங்கம் ஆட்சி புரிவதற்கு ஒப்பானது. கப்பல் மூழ்கத் தொடங்கும் வரை சிங்கம் இராசாத் திமிருடன்தான் உலாப்போகும்.

சிங்களப் படையைப் பொறுத்தவரை, இப்போது, வலிகாமத்தில் அது சிங்கத்தைப் போல சிலிர்த்தபடி நிற்கலாம். ஆனால் அதன் விநியோக வழிப் பாதைகள் ஓட்டை - ஓடிசல் கொண்ட ஒற்றையடிப் பாதையாகவே உள்ளது.

யாழ்நகரைக் கைப்பற்றும் இலக்கைக் கொண்ட 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை உச்சக் கட்டத்திற்குள் பிரவேசித்து முற்றாகியது. தனது மொத்த படை பலத்தின் மிகப்பெரும் பகுதியை, ஒரு இடத்தில் ஒருங்கிணைத்துள்ளதால் வலிகாமச் சமர் சிங்களப் படைக்குச் சாதகமாக இருந்தது. சிங்கள அரசின் திட்டப்படி குடாநாட்டை முழுமையாக விழுங்க முயலும் முயற்சியின் ஒரு கட்டம்தான் வலிகாமச் சமர். அடுத்த கட்டமாகத் தென்மராட்சி மீதோ அல்லது வடமராட்சி மீதோ சிங்களப் படைகள் போரைத் தொடுக்க முனையலாம். ஆயினும் இதைச் செய்வதற்குச் சிங்களப் படைகளுக்கு ஒரு கால அவகாசம் தேவை.

இந்தக் கால அவகாசத்தைச் சிங்களப் படைகளுக்குத் தமிழினம் வழங்கக்கூடாது. மிக விரைவில் பெருந்தொகை ஆட்களைத் திரட்டிக்கொண்டு வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள படையினர் மீது நாங்கள் போர் தொடுக்க வேண்டும். நாங்கள் தாமதித்தால் தென்மராட்சி மீது அல்லது வடமராட்சி மீது எதிரி போரைத் தொடுத்துவிடுவான்.

எனவே, தேவையான ஆட்பலத்தைப் புலிகள் இயக்கத்திற்கு விரைவாகக் கொடுத்து, வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள படையினரை விரட்டியடிக்கப்போகின்றோமா! அல்லது தென்மராட்சியோ வடமராட்சியோ படையினரின் தாக்குதலுக்கு உள்ளாக நாம் அனுமதிக்கப்போகின்றோமா! என்பதைத் தீர்மானிக்கும் வரலாற்றுப் பொறுப்பு எமது இளைஞர்-யுவதிகள் ஒவ்வொருவரிடமும் உண்டு.

தேவையான ஆட்பலம், குறுகிய காலத்திற்குள் புலிகள் இயக்கத்திற்குப் போய்ச் சேருமானால் பலாலித் தளம், தமிழினத்தின் தங்கச் சுரங்கமாக மாறும்.

பலாலித் தளத்தை மையமாக வைத்து, படையினர் நிலைகொண்டுள்ள வலிகாமப் பகுதியில்தான் சிங்களத் தரைப்படைக்குச் சொந்தமான ஆயுதவளத்தின் பெரும்பகுதி குவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சிங்களப் படைக்கு ஒரு இராணுவ நெருக்கடியைப் புலிகள் இயக்கம் கொடுக்குமாக இருக்குமானால், இந்த மலையளவு ஆயுத தளபாடங்களையும் -நாற்பதாயிரம் படையாட்களையும் எங்கேயும் நகர்த்திவிட முடியாது. வலிகாமத்தின் புவியியல் அமைப்பும் - கடற்புலிகளின் கடலாதிக்கமும் எதிரியின் பெரும்படைக்கும் - அதன் ஆயுதங்களுக்கும் நிச்சயம் விலங்குபோடும். அதன் விளைவாக நாற்பதாயிரம் படையினர்க்கு, வலிகாமம் புதைகுழியாக மாறும். எமது மக்களை அழித்தபடி இருக்கும் எதிரிப்படையின் எறிகணைகளும், டாங்கிகளும், ஆயுதக்கிடங்குகளும் தமிழினத்தின் சொத்தாக மாறும். இந்த இராணுவச் சொத்துக்களைப் பயன்படுத்தி தமிழீழத்தின் ஏனைய பகுதிகளில் நிலைகொண்டுள்ள எதிரிப்படைகளை புறமுதுகிட்டோடச்செய்யமுடியும்.

இது கற்பனை அல்ல. நடைமுறைச் சாத்தியமான ஒரு உண்மை. எமது இளைஞர்கள்-யுவதிகள் புலிகளுடன் இணைந்தால் செய்யக்கூடிய சாதனைகள் பல்லாயிரம். புலிகள் அணி அணியாக வலிகாமத்துக்குள் புகும் அளவுக்கு, புலிகளின் ஆட்பலம் அதிகரித்தால் இந்த அற்புதம் எம் கண்முன்னாலேயே நடக்கும் அதிசயத்தை நாம் காணலாம்.

எது எப்படி இருந்தாலும், பலாலித் தளமும் படையினர் நிலைகொண்டுள்ள வலிகாமம் பகுதியும் தமிழினத்திற்கு வாழ்வளிக்கப்போகும் தங்கச் சுரங்கம் என்பதில் எவ்வித ஐயமும் தேவையில்லை. ஆனால், அதைத் தோண்டி எடுப்பதற்குப் பல்லாயிரம் கைகள் தேவை.

# வன்னிக்குச் செல்லும்படி புலிகள் கூறுவது ஏன்?

இடம் பெயர்ந்து அல்லற்படும் மக்கள், வன்னிக்குச் சென்று தற்காலிகமாகக் குடியேறுமாறு விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையினர் ஆலோசனை கூறுகின்றனர். சிலர் இந்த ஆலோசனையைக் கேட்டு ஏனோ, எதற்கோ என்று குழப்பம் அடைகின்றனர். தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தோன்றியுள்ள சன நெருக்கடியால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்பவற்றைக் கருத்தில் எடுத்து, அதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே இந்த ஆலோசனையைப் புலிகள் வழங்கியுள்ளனர்.

போதிய இருப்பிட வசதிகளோ கழிப்பிட வசதிகளோ இல்லாத நிலையில் இடம் பெயர்ந்தோர், முகாம்களிலும் வீடுகளிலும் நெரிசலாக வாழுகின்றனர். இதனாற் பல சுகாதாரப் பிரச்சனைகட்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. வயிற்றோட்டம், காய்ச்சல், தொண்டைநோ போன்றவற்றுடன் தோல் வியாதிகள் சிலவும் இங்கே பரவி வருகின்றன. நீண்ட கியூ வரிசைகளில் நின்றாவது மருத்துவம் செய்ய முடியும். இந்த நோய்களிற்குப் பிரதான காரணியாக இருக்கும் இட நெருக்கடிக்குத் தீர்வு காணாது மருந்து கொடுப்பதில் எப்பயனும் எற்படாது. இந்த ஒரு மாத காலத்திலேயே வயிற்றோட்டத்தால் மூன்று அல்லது நான்கு தடவைகள் வைத்தியசாலை சென்று மருந்து எடுப்பவர் தொகை அதிகம் என வைத்திசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதே வேளை, எந்தவித தொழிலும் இல்லாமல் எவ்வளவு நாட்களிற்கு முகாம் வாழ்க்கையும் யாரிலாவது தங்கியிருக்கும் வாழ்க்கையும் வாழ்வது! இது தொடருமானால், குடும்பத்திற்குள்ளும் உறவுக்காரர்களிற்குள்ளும் நண்பர்களிற்குள்ளும் மனத் தாங்கல்களும், பிரச்சனைகளும் எற்படக்கூடும்.

இது சமூக வாழ்விற்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆனால், வன்னி செல்வதன் மூலம் மேற்கூறிய பிரச்சனைகட்குத் தீர்வை ஏற்படுத்த முடியும். மற்றும் இருப்பிடவசதிகள் அங்கு அமைக்கப்படும். வெளிநாட்டு, உள்நாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் அங்கு செல்லும் மக்களிற்கு இருப்பிட வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. அத்துடன், எமது சக்திக்கு உட்பட்ட வரையில் சுயதொழிலில் ஈடுபடக் கூடிய ஒரு சூழல் வன்னியில் உண்டு. அங்கே சென்றால் சிறு தொழில் செய்யலாம். விவசாயம் செய்யலாம். பரந்தளவிலான ஒரு நிலப்பரப்பு ஆகையால், அங்கே சுகாதாரப் பிரச்சனைகளும் இல்லை. உணவுப் பிரச்சனையும் இல்லை. இன்றைய நிலையில் வன்னிக்குச் செல்வது நல்லது எனப் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் நுளம்புகளும், மலேரியாவும் தம்மைப் பயமுறுத்துவதாகச் சிலர் கூறுகின்றனர். வன்னிப் பெருநில மக்களை முன்னைய காலங்களில் மலேரியா பாதித்துள்ளது என்பது உண்மைதான். ஆனால், கடந்த சில வருடங்களாக மலேரியா நோய் அங்கே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான மருத்துவங்களும் வன்னியில் தாராளமாகக் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்துத் தனியார் மருத்துவ நிலையங்கள் பல இன்று வன்னியிலே சேவை புரிகின்றன. மேலும், யாழ்ப்பாணத்தில் விறகு வசதிகள் இல்லை. ஆனால், அது வன்னியில் இருக்கின்றது. கடந்த மாதம் தென்மராட்சியில் மட்டும் 568 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என, செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் வன்னி நிலப்பரப்பு முழுவதிலும் 200 பேர் மட்டுமே மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. மலேரியாவினால் பாதிக்கப்படுவதை விட, சாதாரண காய்ச்சலை, மலேரியா என நினைத்துப் பயப்படும் தன்மை பலரிடம் காணப்படுகின்றது.

இதேவேளை, சிங்கள இராணுவத்தின் குணத்தையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்படும் போது ஏற்படும் விளைவுகள் மோசமானதாகவே இருக்கும். இதனால் ஏற்படக்கூடிய உயிர் இழப்புக்கள் அதிகமானது. அத்துடன் யாழ் வைத்தியசாலை இயங்கிய அந்த நாட்களிலேயே எறிகணையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியாத நிலைமை அங்கிருந்தது. இன்று அந்தப் பெரிய வைத்தியசாலை இல்லாத நிலையில், கண்மூடித்தனமான எறிகணையாற் காயமடையும் மக்களுக்கு எப்படிச் சிகிச்சை அளிக்க முடியும்!

தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் முன்னைய சனத்தொகையே இருக்குமானால், காயமடையும் மக்களுக்கு இவ்விடங்களில் உள்ள வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை அளித்துக் காப்பாற்ற முடியும். இன்று வடமராட்சியில் நடக்கும் வான் தாக்குதல்களையும், ஆட்லறித் தாக்குதல்களையும் நாளை தென்மராட்சி மீது திருப்பினால் பாரிய உயிர்ச் சேதங்களை எமது மக்கள் சந்திக்க நேரிடும்.

எனவே, இன்றைய நெருக்கடி நிலையில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வன்னிக்குச் சென்று வாழ்வது, நிம்மதியானதும் பாதுகாப்பானதும் மகிழ்ச்சியானதுமாக இருக்கும். இந்த நோக்கங்களுக்காகவே வன்னிக்கு இடம் பெயர்ந்து செல்லும்படி, விடுதலைப் புலிகள் ஆலோசனை கூறுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வலிகாமச் சமர் வலிதாக இடம் பெற்ற வேளையில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியினை இங்கு தருகிறோம்

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
27.11.1995.

### எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

எமது தேசத்தின் விடுதலைக்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த இலட்சிய வேங்கைகளை நாம் எமது இதயக் கோயிலில் நினைவுகூரும் புனித நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணுக்காக மடிந்தார்கள், இந்த மண்ணின் விடிவிற்காக மடிந்தார்கள், எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டுமென்ற இலட்சியத்திற்காக மடிந்தார்கள். எமது மண் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண். எமது மூதாதையோரின் பாதச்சுவடுகள் பதிந்த மண். எமது பண்பாடும் வரலாறும் வேர்பதிந்து நிற்கும் மண் எமக்கே சொந்தமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடக்கும் எமது தாயகமண்ணை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமை பெற்ற சுதந்திர தேசமாக உருவாக்கும் இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் மடிந்தார்கள். எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப்போரில் எமது மாவீரர்கள் புரிந்த தியாகங்கள் மகத்தானவை. அவற்றைச் சொற்களால் செதுக்கிவிட முடியாது. உலக வரலாற்றில் எங்குமே என்றுமே நிகழாத அற்புதங்கள் இந்த மண்ணில் இந்த மண்ணிற்காக நிகழ்ந்திருக்கிறது. அந்த வீரகாவியத்தைப் படைத்த ஆயிரமாயிரம் மாவீரரின் இலட்சியக்கனவு அவர்களது ஆன்மீகதாகம் என்றோ ஒரு நாள் நிறைவு பெறுவது திண்ணம்.



எமது மண்மீதான எதிரியின் ஆக்கிரமிப்புப்போர் என்றுமில்லாதவாறு இன்று விஸ்வரூப பரிமாணம் பெற்றிருக்கிறது. எதிரியானவன் தனது முழுப்படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி தனது முழுத் தேசிய வளத்தையும் பயன்படுத்தி யாழ்ப்பாண மண்மீது பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறான்.

**சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது. படைபலத்தை அடிப்படையாகக் கொண்டே சிறீலங்கா அரசானது, தமிழரின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்க முனைகிறது. தமிழ்ப் பிரதேச ஆக்கிரமிப்பு மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று, தான் விரும்பிய குறைந்தபட்ச தீர்வு ஒன்றைத் தமிழ்மக்கள் மீது திணித்துவிட நினைக்கிறது.**

பழமையும் பெருமையும் வாய்ந்த எமது பாரம்பரிய பூமி எதிரியின் படைபல சக்தியால் அழிக்கப்பட்டு வருகிறது. ஓயாத மழையாகப் பொழியும் எதிரியின் எறிகணை வீச்சால் யாழ்ப்பாணத்தின் முகம் சிதைக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தின் பொருள்வளத்தைச் சிதைத்து, பண்பாட்டுச் சின்னங்களை அழித்து, தமிழரின் தேசிய வாழ்வைச் சீர்குலைத்து விடுவதே இந்த ஆக்கிரமிப்புப் போரின் அடிப்படை நோக்கமாகும். இந்தப் போர் அரசு கூறுவது போல புலிகளுக்கு எதிரான போரல்ல. இது தமிழருக்கு எதிரான போர் தமிழினத்திற்கெதிரான போர். தமிழின அழிப்பை இலக்காகக் கொண்டபோர். சிங்களப் பேரினவாதத்தின் இந்த இனப்போர் நீண்ட நெடுங்காலமாகவே நிகழ்ந்து வருகிறது. புலிகள் இயக்கத்தின் பிறப்பிற்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருகிறது. இதனைத் தொடக்கிவைத்தவர் சந்திரிகாவின் தந்தையார். இப்பொழுது சந்திரிகாவின் அரசு இந்த இனப்போருக்கு முழு வடிவம் கொடுத்திருக்கிறது. தமிழரின் உயிரையும் உடமையையும் தமிழரின் நிலத்தையும் வளத்தையும் ஒட்டுமொத்தத்தில், தமிழரின் தேசிய அடையாளத்தையே சிதைத்துவிடும் நோக்கத்தைக் கொண்டது இந்தப் போர்.

சமாதான முகமூடி அணிந்து, சமாதானத் தீர்வில் நம்பிக்கை கொண்டவர் போல நடித்து சிங்கள மக்களையும் உலக சமூகத்தையும் ஏமாற்றி ஆட்சிபீடம் ஏறினார் சந்திரிகா. அதிகார பீடத்தில் அமர்ந்ததும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை அரங்கேற்றினார். தமிழரின் தேசிய பிரச்சனைக்குச் சமாதான வழியில் தீர்வை வேண்டிய நாம் அவருக்கு நேசக்கரம் நீட்டினோம்.

சமூகமாகப் பேச்சுக்களை நகர்த்தும் நோக்கில் போர்க்கைதிகளை விடுவித்து நல்லெண்ண சமிக்கைகளைக் காட்டினோம் இந்தப் பேச்சுக்களின் போது நாம் எவ்வித கடுமையான நிபந்தனைகளையோ சிக்கலான கோரிக்கைகளையோ விடுக்கவில்லை. தமிழ்மக்கள் மீது அநீதியான முறையில் திணிக்கப்பட்டிருந்த பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை நீக்கி இயல்பான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும்படியே நாம் சந்திரிகா அரசிடம் வேண்டினோம். அடிப்படை வசதிகள் இன்றி அத்தியாவசியத் தேவைகள் மறுக்கப்பட்டு பல வருடங்களாக இடர்பட்டு வாழ்ந்த எமது மக்களின் துன்பத்தைத் துடைத்துவிடும்படியே நாம் கோரினோம். ஆனால் சந்திரிகா அரசு, இந்த அற்ப சலுகைகளைத்தானும் தமிழருக்கு வழங்கத் தயாராக இல்லை.

ஆறு மாதங்கள் வரை அர்த்தமின்றிப் பேச்சுக்கள் இழுபட்டபொழுது நாம் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ள முடிந்தது. அதாவது சந்திரிகா அரசு சமாதானத்தை விரும்பவில்லை என்பதையும் சமாதான வழிமூலம் தீர்வை விரும்பவில்லை என்பதையும் நாம் உணர்ந்து கொண்டோம். சமாதானப் பேச்சுக்களின் போது இராணுவ நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டதைக் கண்டபோது சந்திரிகா அரசு இராணுவத் தீர்விலேயே தீவிர அக்கறை கொண்டிருந்தது என்பது எமக்குத் தெளிவுறப் புலனாகியது.

பெரிய எடுப்பில் யாழ்ப்பாணம் மீது நிகழ்த்தப்படும் படையெடுப்பானது சந்திரிகா அரசின் இராணுவ, அரசியல் குறிக்கோளைத் தெட்டத்தெளிவாகக் காட்டுகிறது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் தமிழர் தாயகத்தின் மையப்பகுதியைச் சுற்றிவளைத்து மக்களோடு சேர்த்து மண்ணையும் ஆக்கிரமித்து யாழ்ப்பாணச் சமூகத்தை 'விடுதலை' செய்துவிட்டதாக உலகுக்குக் காட்டும் கபட நோக்குடன் இப்படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது. ஆயினும் யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் இராணுவம் முற்றுகையிடுவதற்கு முன்னராக, மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக இடம்பெயர்ந்து சென்ற வரலாற்று நிகழ்வானது, சந்திரிகா அரசின் தந்திரோபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிக்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் ஏக மனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம்பெயர்வு நிகழ்வு எடுத்துக் காட்டியது. சிங்கள அரச நிர்வாகத்தின் கீழ் அடிமைப்பட்டு வாழத் தமிழ்மக்கள் இனித் தயாராக இல்லை என்பதையும், மக்களையும் புலிகளையும் வேறுபடுத்த முடியாது என்பதையும் இந்த சனப்பெயர்வானது சிங்கள தேசத்திற்கும் உலகத்தாருக்கும் நன்கு உணர்த்தியது. எனவே யாழ்ப்பாணப் படையெடுப்பின் அரசியற் குறிக்கோளை அடைவதில் சந்திரிகா அரசு தோல்வியையே சந்தித்திருக்கிறது.

இராணுவ முற்றுகையிலிருந்தும் அதன் பின்னணியிலுள்ள அரசியற் பொறியிலிருந்தும் எமது மக்கள் பாதுகாப்பாகத் தப்பித்துக் கொண்டமை, ஒரு புறத்தில் எமக்கு ஆறுதலைத் தந்த போதும் மறுபுறத்தில், இந்தப் பாரிய இடம்பெயர்வால் எமது மக்கள் அனுபவித்த அனுபவித்து வரும் இடர்களும், துயர்களும், துன்பங்களும் எமக்கு ஆழமான வேதனையைத் தருகிறது.

காலங்காலமாக வசித்த பாரம்பரிய மண்ணைத் துறந்து வீடு, காணி, சொத்துக்களைக் கைவிட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து எமது மக்கள் எதிர் கொள்ளும் தாங்கொணாத்துன்பங்கள் எமது நெஞ்சத்தைப் பிளக்கிறது. எனினும் இத்துன்பியல் அனுபவமும் துயரமும் நிறைந்த அவலமும் எமது இனத்தின் விடுதலை எழுச்சிக்கு எமது மக்கள் அளித்த மாபெரும் பங்களிப்பாகவே நாம் கருதுகிறோம். ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல், சுதந்திர மனிதர்களாக சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு எத்தகைய துயரையும் எதிர் கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம்பெயர்வு உலகத்துக்குப் பறைசாற்றி நிற்கிறது.

மக்கள் வெளியேறிய நிலையில் இடிபாடுகளுடன் சுடுகாடாய்க்கிடக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவப் பேய்கள் வெற்றிக் கொடியைப் பறக்க விடலாம். தமிழரின் இராச்சியத்தைக் கைப்பற்றிவிட்டதாக நினைத்து தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதக் கும்பல்கள் பட்டாசுகள் கொளுத்திக் குதூகலிக்கலாம். இராணுவ மேலாதிக்க நிலையை எட்டி விட்டதாக எண்ணி சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுக்கான சமிக்கைகளையும் விடலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைத் தெட்டத் தெளிவாக எடுத்தியம்ப விரும்புகிறோம். அதாவது யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இது தான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி. பாரிய இராணுவப் படையெடுப்பை முடுக்கி விட்டு பலலட்சம் மக்களை இடம்பெயரச் செய்து வரலாற்றுப் பெருமை மிக்க யாழ்மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத் தீர்வும் ஏற்பட்டுவிடும் என சந்திரிகா அரசு எண்ணுமானால் அதைப் போல அரசியல் அசட்டுத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது சந்திரிகாவின் ஆட்சிபீடம் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இதன் விளைவாக சமாதானத்திற்கான சகல பாதைகளையும் கொழும்பரசு மூடிவிட்டதுடன், முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. யாழ்ப்பாணச்சமரில் புலிகள் இயக்கம் பேரிழப்பைச் சந்தித்துவிட்டதென்றும், பலவீனப்பட்டுவிட்டதென்றும் அரச பிரச்சாரச்சாதனங்கள் உரிமை கொண்டாடுவதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தச் சமரில் புலிகள் பலவீனப்படவுமில்லை, பெரிய உயிரிழப்பைச் சந்திக்கவுமில்லை. யாழ்ப்பாணச்சமரில் புலிகளை விட இராணுவத்தினருக்கே பெரிய அளவில் உயிரிழப்பும் தளபாட இழப்பும் ஏற்பட்டிருக்கிறது. பெரிய அளவிலான ஆட்பலத்துடன் பெரிய அளவிலான ஆயுத சக்தியைப் பிரயோகித்து தனக்கு சாதகமான நிலப்பரப்பு வழியாக முன்னேற முயன்ற பெரும் படையணிகளை எதிர்த்து எமது சக்திக்கு ஏற்ற வகையில் நாம் சாதுரியமாகப் போராடினோம். பெரும் இடர்கள் ஆபத்துக்கள் மத்தியில் போராடிய போதும் பெருமளவில் உயிரிழப்புக்களை நாம் சந்திக்கவில்லை. இதனால் எமது படைபல சக்திக்கும் படையணிக்கட்டமைப்புக்கும் பாதிப்பு நிகழவில்லை. மரபு வழிப்போர்முறைக்கு புலிகளை ஈர்த்து எமது படைபலத்தை அழித்துவிடலாம் என எண்ணிய இராணுவத்திற்கு இது ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது. ஒட்டு மொத்தத்தில் யாழ்ப்பாணச்சமர் எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல. அதுவும் ஒரு தற்காலிகப் பின்னடைவேதான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் இதைவிடப் பெரிய பின்னடைவுகளைச் சந்தித்தோம். ஆனால் அந்தப் போரில் நாம் தோற்று விடவில்லை. இந்திய இராணுவமே இறுதியில் தோல்வியைச் சந்தித்தது. எனவே இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறுவது திண்ணம்.

சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது. படைபலத்தை அடிப்படையாகக் கொண்டே சிறீலங்கா அரசானது, தமிழரின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்க முனைகிறது. தமிழ்ப் பிரதேச ஆக்கிரமிப்பு மூலம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று, தான் விரும்பிய குறைந்தபட்ச தீர்வு ஒன்றைத் தமிழ்மக்கள் மீது திணித்துவிட நினைக்கிறது. 'சமாதானத்திற்கான யுத்தமென்ற' சந்திரிகாவின் கோட்பாடு இத்தகைய இராணுவத் தீர்வையே மூலமாகக் கொண்டிருக்கிறது.

இத்தகைய தீர்வை மானமுள்ள தமிழன் எவனும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்தத் திட்டத்தை முறியடித்து தன்னாட்சி நோக்கிய எமது விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதாயின், எமக்கு ஒரேயொரு வழிதான்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வலிகாமம்

தமிழீழப் போராட்ட வரலாற்றில், சிறிலங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்தனை இராணுவ நடவடிக்கைகளும் விடுதலைப் புலிகளினால் பல்வேறு கோணங்களில், பல்வேறு முறைகளில் எதிர்கொள்ளப்பட்டு வெற்றி காணப்படுவதை வரலாறு அறியும். அது, போராளிகளின் அளப்பரிய தியாகங்களில், தலைவரின் நெறிப்படுத்துதலுடன் இணைந்து புதிய போராட்ட வடிவங்களை, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் உலக விடுதலை வரலாறுகளுக்கும் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அதே வேளை, நிலைமைகளுக்கேற்ப போரை நகர்த்துவது புலிகளின் நுட்பமிகு தந்திரோபாயத்திற்கு உட்பட்டு பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது. அது எதிரி பயன்படுத்தும் ஆட்பலம், வெடிப்பொருள் கொள்ளளவு, விநியோக பலம், விமான-கடற்படை உதவி, கால நிலை இவற்றுடன் இணைந்த எதிரியின் பிரச்சார சூழ்நிலை என்பவற்றிற்கேற்ப உருவம் பெறும். இதையும் வரலாறு அறியும்.

அவ்வகையில், சிறிலங்கா இராணுவத்தின் முன்னோக்கிய பாய்ச்சலின் இராணுவ நடவடிக்கையை, அதிரடி நுட்பங்களைக் கொண்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் தலைவர் முறியடித்தார். ஆனால், பல்லாயிரக் கணக்கான துருப்புகளுடனான ஏராளமான வெடிப்பொருட் சக்தியுடன் கவச வாகன, ஆட்லறி, பீரங்கி, விமான குண்டுவீச்சுத் துணைகளுடன் பாரியதோர் படைநகர்வைச் சிறிலங்கா அரச 'இடிமுழக்கம்', 'சூரியக்கதிர்' என்ற குறியீட்டுப் பெயருடன் மேற்கொள்ளும் போது விடுதலைப் புலிகளின் போர் முறை தாக்குதல் விதம் மாறுபடுகின்றது.

முன்னைய முறைகள் போன்று, விடுதலைப் புலிகள் மேற்குறிப்பிட்ட இரு இராணுவ நடவடிக்கைகளிலும் இராணுவத்தினரை எதிர்கொள்ளவில்லையென ஒரு சிலர் கருத்துக் கொள்ளக்கூடும். அதே போன்று, விடுதலைப் புலிகள் தோல்வியினையே தழுவிக் கொண்டார்கள் என்ற சிறிலங்காவின் பிரச்சாரத்திற்குச் சிலர் உட்பட்டுவிடவும் கூடும். அதே வேளை ஒரு போதுமே, ஒற்றையடிப் பாதை வழியாக வந்து மையப்பகுதியில் ஏற்றிய சிங்கக் கொடி, விடுதலைப் புலிகள் படைத்த வீரமிகு வரலாற்றை, அளப்பரிய தியாகத்தை மறைத்துவிட முடியாது.

ஒரு போரின் வெற்றி, தோல்வியினைச் சம்பவங்கள் ஒருபோதும் நிர்ணயிப்பதில்லை. அந்த முடிவுக்குச் சம்பவக் கோர்வைகள் படிப்படியாக இட்டுச் செல்கின்றன. இந்த வரலாற்று உண்மையை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது.

அந்த வகையில், இந்த இரண்டு நடவடிக்கைகள் மூலமும் இராணுவம் தனது படையெடுப்பை நிகழ்த்தியுள்ளது. அதே வேளை, விடுதலைப் புலிகள் எவ்வாறு தமது எதிர்த் தாக்குதலை நடாத்தியுள்ளனர் என்பதை மட்டும் தேதி வாரியாக வெளிச்சமிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் கண்ணோட்டமாகும்.

விடுதலைப் புலிகள் மேற்படி இராணுவ நடவடிக்கைகளின் போது அந்தந்தப் பிரதேசங்கள் தவிர, வேறும் பல பாகங்களிலும் பாரிய அளவில் மிகப் பெரிய வெற்றிகரமான தாக்குதல்களை மேற் கொண்டிருந்த போதும் அது பற்றிய விபரங்களை இக்கட்டுரை கொண்டிருக்கவில்லை என்பதனையும் தாக்குதல் விபரங்களையோ தந்திரங்களையோ மாவீரர்களின் பெயர் விபரங்களையோ அல்லது இன்னலுக்குள்ளான அல்லது பலியான பொது மக்களின் விபரங்களையோ கொண்டிருக்கவில்லை என்பதனையும் இவ்விடம் கவனத்திற் கொள்க.

போர் நடைபெறும் போது, சிறிலங்கா இராணுவத்தின் படை நகர்த்தலும் அந்நகர்த்தலின் போது அது எவ்வாறு முறையீனமாய் நடந்து கொண்டது என்பதனையும், அவ்வேளையில் அங்குலம் அங்குலமாக விடுதலைப் புலிகள் எவ்வாறு எமது மண்ணைக் காக்க நின்று போராடி இருக்கின்றார்கள் என்பதனையும், இன்று கொடியேற்றுகிறோம்- நாளை கொடியேற்றுகிறோம் என்று சிறிலங்கா அரச வீறாப்புப் பேசிய அதே வேளையில், தம் இன்னுயிரையும் துச்சமென மதித்து அவர்களது பொறிக்குள்ளேயே நின்று கொண்டு அவர்களது கண்களுக்குள் விரலை விட்டு ஆட்டிய எமது மறவர்களின் தீரத்தையும் தியாகத்தையும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## சிறீலங்கா விதைத்த வினைகளும்

## புலிகள் பதித்த தடங்களும்

### 01-10-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ இன்று 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கை சிறிலங்காவால் ஆரம்பிக்கப்படுகின்றது. காலையில் அச்சுவேலி, பத்தமேனி, வசாவிளான், புத்தூர், நவக்கிரி பகுதிகளை நோக்கி 5,000 இற்கும் மேற்பட்ட படையினர் குண்டு வீச்சுத் தாக்குதலுடன் நகர முயற்சி செய்கின்றனர். பலாலியிலிருந்து அகோர எறிகணை வீச்சும் விமானத் தாக்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் 5 பொது மக்கள் பலியாக, 17 பேர் படுகாயமடைகின்றனர்.

❖ பல பகுதிகளில் தாக்குதல் உக்கிரம் காரணமாக இறந்தோர், காயமுற்றோரை மீட்க முடியாத நிலை. எண்ணிக்கையும் தெரியாது. ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்வு.

### 02-10-1995 திங்கட்கிழமை

❖ விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதல் காரணமாக, இராணுவ அணிகள் சீர்குலைவு. பலாலியிலிருந்து தெற்கு நோக்கி நகர முயன்று முடியாமல் கிழக்கு நோக்கி அச்சுவேலி, பத்தமேனிக்கு நகர முயல்கின்றது.

❖ காலையிலிருந்து மாலை வரை நடைபெற்ற சண்டையில் சிறிலங்காத் தரப்பில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 120 இராணுவத்தினர் காயமடைந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் கொல்லப்பட்ட இராணுவத்தின் தொகை அதிகம் என அறியப்படுகின்றது.

❖ நீர்வேலி, சிறுப்பிட்டி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், கைதடி, கோப்பாய் மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது ஒரு பொதுமகன் கொல்லப்பட 38 பேர் படுகாயமடைகின்றனர்.

❖ வலி கிழக்கிலிருந்து, வலிகாமத்தின் ஏனைய பகுதிகட்கும், தென்மராட்சிக்கும் ஏராளமான மக்கள் இடம் பெயர்கின்றனர்.

❖ இரு கடற் படைக் கப்பல்கள் கடற் புலிகளினால் தாக்கியழிக்கப்படுகின்றன. 'ரணகஜ' என்ற போர்க் கப்பலும் இதிலொன்றாகும். 15 படையினர் பலியானதாகவும், 56 படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா அரசே அறிவிக்கின்றது. இச்சம்பவத்தில் நளாயினி படையணிப் பொறுப்பாளர் உட்பட 7 கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

❖ புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் 5 பொது மக்கள் படுகாயம். வடமராட்சி-குடாரப்புப் பகுதியில் புக்காரா விமானம் குண்டு வீச்சு.

### 03-10-1995 செவ்வாய்க்கிழமை

❖ மேலதிகமாக 2,500 துருப்பினர் 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கையில் இணைக்கப்படுகின்றனர்.

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் தொடர்ந்தும் கடுஞ் சண்டை நடைபெறுகின்றது. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெரியதோர் தனிச் சண்டையாக இது அமைகின்றது. புலிகளின் மகளிர் படையணியின் தலைமையில் இராணுவம் கைப்பற்றிய பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்று தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

❖ இராணுவ 'ஆட்லறி', பீரங்கிகள் கண்மண் தெரியாது பொழிந்து தள்ள, இராணுவத்தின் 'பரா' ஒளிக்கற்றைகள் ஒளியினைப் பாய்ச்சிய நிலையிலும் விடுதலைப் புலிகள் நேரடியாகக் கைகலக்கும் நிலையில் வீராவேசத்துடன் போர் புரிகின்றனர்.

❖ இதில் ஒரு அதிகாரி உட்பட 66 படையினர் பலியாகினர் என சிறிலங்காவே அறிவிப்பு.

❖ எறிகணை வீச்சுக்களில் 8 பொது மக்கள் பலியாக 30 இற்கும் அதிகமானோர் படுகாயமடைகின்றனர்.

❖ இன்றைய தாக்குதலில் 150 விடுதலைப் புலிகள் வீரச்சாவு.

### 04-10-1995 புதன்கிழமை

❖ சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகள் மீது தொடர்ந்தும் எறிகணை வீச்சு மேற்கொள்ளப்படுகின்றது.

❖ அப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஆவேசமாகத் தடுத்துத் தாக்குதல்களை நிகழ்த்துகின்றனர்.

❖ எறிகணை வீச்சில் புத்தூர் கற்பக விநாயகர் ஆலயம் சேதமாகின்றது.

### 05-10-1995 வியாழக்கிழமை

❖ முதல் நாள் வீரச்சாவடைந்த 150 மாவீரர்களை நினைவு கூருமுகமாக 3 நாட்கள் துக்க தினமாகப் பிரகடனம்.

❖ தமிழீழத்தில் அவர்களின் வித்துடலுக்கு மக்கள் மலரஞ்சலி, வீர வணக்கக் கூட்டம்.

❖ நூற்றுக் கணக்கான இராணுவச் சடலங்கள் கொழும்பு வந்தடைந்ததாய் அங்குள்ள வைத்தியசாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.



### 06-10-1995 வெள்ளிக்கிழமை

❖ வல்வெட்டித்துறைப் பகுதி மீது 'ஆட்லறி' செல் தாக்குதல்கள். 2 பேர் பலி, பலர் படுகாயம். அவல நிலையில் மக்கள் இடம் பெயர்ந்ததால் கொல்லப்பட்டோர் விபரம் அறிய முடியா நிலை.

❖ 10,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நல்லூர், கோப்பாய் பகுதிகளுக்கும் தென்மராட்சிக்கும் இடம் பெயர்வு.

### 07-10-1995 சனிக்கிழமை

❖ யாழ். நகரில் உணவுத் தட்டுப்பாடு.

❖ தேவையான உணவு அனுப்பப்படுவதாய் சிறிலங்கா அரச பொய்ப் பிரச்சாரம்.

❖ பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் ஏராளமான உயிரிழப்புகளுக்கு மத்தியிலும் சிறிலங்கா இராணுவத்தின் கோரக் கால்கள் புத்தூர் மண்ணில் பதிகின்றன.

❖ இராணுவத்தின் கால் பதியும் அதே வேளையில், உலக நாடுகளெங்கும் பல்லாயிரக் கணக்கில் மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துகின்றனர்.

### 10-10-1995 செவ்வாய்க்கிழமை

❖ புத்தூரில் இராணுவம் ஆக்கிரமித்தபகுதிகளினுள்ளேயே வயோதிபர் முகாமில், சிறிலங்கா இராணுவம் 9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ச் சமர்

வயோதிபர்களைக் குண்டு வீசிக் கொலை.

❖ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இராணுவம் சகல உடமைகளையும் சூறையாடுவதனைத் தப்பி வந்தோரும் திரும்பிச் சென்று பார்த்த சிலரும் உறுதிப்படுத்துகின்றனர்.

## 15-10-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ முதல் நாள் கவனத்தைத் திருப்பும் முகமாக பலாலியிலிருந்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பகுதிகள் நோக்கி அகோர எறிகணை வீச்சை நடாத்திய பின், மாதகல் பகுதியிலிருந்து இராணுவம் முன்னேற முயற்சி செய்கின்றது.

❖ இந்த நகர்வுடன் 'சூரியக்கதிர்' நடவடிக்கை ஆரம்பம். அதேவேளை பலாலி, காங்கேசன்துறை முகாம்களிலிருந்தும் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியவாறு தாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயல்கின்றனர்.

❖ இதனால் வலி-மேற்குப் பகுதியிலிருந்து சுழிபுரம், தொல்புரம், குடத்தனை, இறாத்தலடி, பண்ணாகம், மூளாய், வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்கின்றனர்.

❖ பெருமளவு மக்கள் வலி-மேற்குப் பகுதியிலிருந்து இரவோடிரவாய், அல்லோலகல்லோலமாய் இடம் பெயர்கின்றனர்.

## 16-10-1995 திங்கட்கிழமை

❖ பல்வேறு விதங்களில் மக்களினதும் புலிகளினதும் கவனத்தைத் திசை திருப்புவதாய் நினைத்துக் கொண்டு இராணுவம் புத்தூர், அச்சுவேலி பகுதியினூடாகவும் முன்னேற முயல்கின்றது.

❖ அப்பகுதிகளில் போர் விமானக் குண்டு வீச்சுக்கள், தாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் பெரும் சண்டை இடம் பெறுகின்றது.


❖ 12 இராணுவத்தினர் இறந்து, 150 இராணுவத்தினர் காயமடைகின்றனர்.

❖ இதைவிட, ஒரு கவச வாகனம் முற்றாய் புலிகளால் அழிக்கப்படுகின்றது.

❖ இந்தச் சண்டையில் 30 விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர்.

## 17-10-1995 செவ்வாய்க்கிழமை

❖ 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்கு ஆதாரமான விநியோகத்தைத் தகர்க்குமுகமாக, கடற் கரும்புலிகளின் சிறப்புப் படையணிகள் திருகோணமலைத் துறை முகத்தினுள் ஊடுருவி 3 கடற் படைக் கப்பல்களை மூழ்கடிக்கின்றன.



❖ ஒரு தரையிறங்கு கலம், ஒரு அதிவேகத் துருப்புத் தாங்கிக் கப்பல், அதிவேக டோறாப் பீரங்கிப் படகு என்பவையே தாக்கியழிக்கப்பட்டவையாகும்.

❖ அதேவேளை, வலி-கிழக்கின் பல முனைகளூடாக வெளியேற முயன்ற இராணுவத்தை எதிர்த்து, காலை ஆரம்பித்த சமர் விடுதலைப் புலிகளின் ஆக்கிரோசமான, கடுமையான எதிர்த் தாக்குதலால் மாலை வரை நீடிக்கின்றது.

❖ பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் 'ஆட்லறி செல்', பீரங்கித் தாக்குதலுடன் முன்னேற முயன்றும் அவர்களைத் தடுத்து நிறுத்தி புலிகள் வன்மையாகப் போரிட்டதால் 70 இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். 200 இராணுவத்தினர் படுகாயமடைகின்றனர். ஒரு அதிகாரி உட்பட 19 படையினர் கொல்லப்பட்டதாகவும், 7 அதிகாரிகள் உட்பட 150 படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா அரசே அறிவிக்கின்றது. இச்சமரில் 33 வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர்.

## 18-10-1995 புதன்கிழமை

❖ மக்கள் குடியிருப்புகள் மீது இராணுவம் கண்மூடித்தனமாக நடாத்திய புக்காரா, எறிகணைத் தாக்குதல்களில் 8 சிறு பிள்ளைகள் உட்பட 22 பொது மக்கள் பலியாகின்றனர். 17 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைகின்றனர்.

❖ பாரிய அளவில் உடமைகளையிழந்து மக்கள் சாரி சாரியாக இடம் பெயர்கின்றனர்.

❖ ஊரெழுப் பகுதியில் இரு குடும்பத்தைச் சேர்ந்த 15 பேர் விமானக் குண்டு வீச்சில் பலி.

## 21-10-1995 சனிக்கிழமை

❖ பெருமளவு பொது மக்கள் தென்மராட்சி நோக்கி இடம் பெயர்வு.

❖ நகர முயன்ற இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் நிகழ்த்திய உக்கிர தாக்குதலில் 10 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைகின்றனர்.

❖ 'சூரியக்கதிர்' தொடங்கி 21-10-1995 வரை 89 இராணுவத்தினரை இழந்துள்ளதாக சிறிலங்கா அரசு அறிவிக்கின்றது.

## 22-10-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ அச்செழுப் பகுதியில் பாரிய சண்டை தொடர்ந்து நடைபெறுகின்றது. இராணுவத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகின்றனர்.

❖ 'சூரியக்கதிர்' நடவடிக்கையிலேயே மாசியன் சந்தி நோக்கிய படை நகர்வை எதிர்த்து, விடுதலைப் புலிகள் நிகழ்த்திய தாக்குதல் மிக உக்கிரமானதாக அமைகின்றது. ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டும் மூன்று தாங்கிகள் அழிக்கப்பட்டும், மூன்று தாங்கிகள் சேதப்பட்ட நிலையிலும் 29 இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா அறிவிக்கின்றது.

❖ மாசியன் சந்தியில் நடந்த சண்டையில் 13 விடுதலைப் புலிகளும், புத்தூர், நவக்கிரி சண்டையில் 12 விடுதலைப் புலிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொள்கின்றனர்.

❖ விமானங்கள் வீசிய குண்டு வீச்சில் ஒரு பெண்மணி கொல்லப்பட்டு 6 பேர் காயமடைகின்றனர்.

❖ அகோர எறிகணை, விமானக் குண்டு வீச்சுகளினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் நல்லூரையும், அதை அண்டிய பகுதிகளையும், தென்மராட்சியையும் நோக்கி இடம் பெயர்கின்றனர்.

❖ தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இடம் பெயர் மக்களின் நிவாரணப் பணிகளில் முக்கிய பங்கேற்கின்றது.

## 26-10-1995 வியாழக்கிழமை



❖ இன்று காலை அரியாலைக் குடியிருப்புக்கள் மீது, சுப்பர் சோனிக் விமானங்கள் போட்ட குண்டுகளினால் 10 பொதுமக்கள் அந்த இடத்திலேயே உயிரிழக்கின்றனர். இதில், இரு நாட்களேயாகிய புது மணத்தம்பதிகளும் அடங்குவர். மேலும், 9 பேர் காயமடைகின்றனர்.

❖ நீர்வேலிப் பகுதி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து, விடுதலைப் புலிகள் பெருஞ் சமர் புரிகின்றனர்.

❖ தென்மராட்சியை ஒரு பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனஞ் செய்ய, யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் கோரிக்கை விடுக்கின்றது.

❖ கொட்டடிப் பகுதியில் ஆட்லறித் தாக்குதலில் 7 பொது மக்கள் படுகாயமடைகின்றனர்.

## 27-10-1995 வெள்ளிக்கிழமை

❖ கடந்த 5 நாட்களாக விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்திற்குமிடையில் அச்செழுப் பகுதியிலேயே மோதல்கள் நடைபெறுவதாய் சிறீலங்கா அறிவிக்கின்றது.

❖ சிறுப்பிட்டிக்கும் புத்தூருக்குமிடையில் நடந்த பல மணி நேரச் சண்டையில் 3 படையினர் பலியானதாயும் 7 பேர் காயமடைந்ததாயும் சிறீலங்காத் தரப்பில் அறிவிக்கப்படுகின்றது.

❖ மாதகல் பகுதியிலும் சுமார் இரண்டு மணி நேரம் சண்டை இடம்பெறுகின்றது. ஒரு இராணுவம் பலி. 4 பேர் காயம்.



❖ இந்தச் சண்டையில் 5 போராளிகள் வீரச் சாவடைகின்றனர்.

## 29-10-1995 ஞாயிற்றுக்கிழமை

❖ நீர்வேலியில் முன்னேற முயன்ற சிறீலங்கா இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல்களில் 110 இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைகின்றனர்.

❖ 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதிலிருந்து மிகப் பெரிய தாக்குதல் இதுவென இராணுவம் விபரிப்பு.

❖ இந்த வீரமிகு தாக்குதலில் 20 போராளிகள் வீரச்சாவடைகின்றனர்.

❖ விமானப் படை விமானங்கள் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகள் மீது மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களில் குழந்தைகள் பெண்கள் உட்பட 27 பேர் கொல்லப்படுகின்றனர். 60 இற்கு மேற்பட்டோர் காயமடைகின்றனர்.

## 30-10-1995 திங்கட்கிழமை

❖ நீர்வேலிப் பகுதியில் சண்டை தொடர்கின்றது. விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குகின்றனர். இரண்டு தாங்கிகள் அழிக்கப்பட்டு 50 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்படுகின்றனர். இரு அதிகாரிகள் உட்பட 17 படையினர் கொல்லப்பட்டதாகவும் 21,000 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சிறீலங்கா அறிவிக்கின்றது.

-தொடரும்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடமராட்சி....

தளர்த்த அழுத்தம் கொடுக்கும்படி ஐநா பொதுச் செயலாளரை உதவிகள் ஏதும் இன்றித் துன்பப்படும் மக்கள் சார்பாக, கிளிநொச்சிப் பிரசைகள் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

கடந்த சில நாட்களாக அதிக எண்ணிக்கையான பிரயாணிகள் கடலேரியூடாக வன்னிப் பெருநிலப்பரப்பை நோக்கிப் பயணம்செய்து கொண்டிருக்கின்றனர். இரவு அதிக நேரம் வரை படகுகள் விடுதலைப் புலிகளின் காவலுடன் மக்களைப் பத்திரமாகக் கரைசேர்த்தவண்ணம் இருப்பதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து கொழும்பு நோக்கி இடம்பெயர்வதைத் தடுக்க, வன்னிப் பிரதேச தேர்தற் கோப்பில் பெயர் பதிவு செய்து இருப்பவர்களை மட்டுமே சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் வன்னிப் பிரதேசத்தை விட்டு வெளியேற அனுமதிக்கின்றனர். இதனால் மருத்துவ தேவைகளுக்குக் கூட அனுராதபுரத்திற்குப் பாதிப்புற்றோர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து திருச்சபை பாசையூர் மருத்துவநிலையமும், 'த வில்லியம் கார்வி' நினைவு சண்டுக்குளி மருத்துவநிலையமும் கிளிநொச்சியிலும் மாங்குளத்திலும் செயற்படத் தொடங்கியுள்ளன.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள்மேல் எறிகணை குண்டுவீச்சுக்களை சிறீலங்கா தொடக்கலாம் என அச்சம் நிலவுகின்ற நேரத்தில் பூநகரி, ஆனையிறவு இராணுவ முகாம்களும் ஆக்கிரமிப்புப் போரில் உடன் இறங்குவதற்கான இறுதி நேர ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளன.

இதனால் விடுதலைப் புலிகளுக்கு உடன் உதவிகளை அவசரமாகச் செய்யவேண்டிய நிலை புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே இவ் அவசர உதவிகளை செய்வதற்கான ஏற்பாடுகளில் வேகமாக ஈடுபட்டுவரும் அனைத்துலக நாடுகளிலும் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்களுடன் உடன் தொடர்புகளை ஏற்படுத்தி இயன்ற எல்லா வழிகளிலும் உதவும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

# மட்டக்களப்பில்...

உயிரிழந்துள்ளனர்.

இக்கோர வெறியாட்டத்தை, இலகுவாகவும் இரகசியமாகவும் நடாத்தும் பொருட்டு இச்சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திலிருந்து பொதுமக்கள் யாரையும் வேறிடம் செல்லமுடியாதவாறும், வேறிடங்களில் இருந்து அப்பகுதிக்கு யாரும் வரமுடியாதவாறும் நாற்பத்தி எட்டு மணி நேரத் தடை விதிக்கப்பட்டது. இவ்வேளையிலேயே இவ்வெறித்தனத்தை நடாத்தி முடித்துள்ளனர். இப்பாதை போக்குவரத்துக்கென 07-12-95 அன்று திறந்துவிடப்பட்ட பின் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அவ்விடம் சென்று சடலங்களை அடையாளம் கண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட படையினர் பல இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை என்றும் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் சிறீலங்கா அரசின் பழிவாங்கல் நடவடிக்கையாலேயே பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பழி வாங்கும் நடவடிக்கை ஒன்றையே யாழ். குடாநாட்டிலும் மேற்கொள்வதற்கு சிறீலங்கா அரச நோக்கமாகக் கொண்டிருந்தது. இருந்தபோதிலும் யாழ். குடாநாட்டு மக்களின் இடம்பெயர்வு இந் நடவடிக்கையை முறியடித்துள்ளதோடு, அரசியல் இராசதந்திர ரீதியான வெற்றிக்கும் வழி சமைத்துள்ளது.

# கிளாலியில்...

சிவனடியான் வடிவேலு, சொக்கன், ரவி என அறியப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மற்றையோரின் விபரம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

# பிரித்தானியப் பாராளுமன்றில்...

திரு. கோர்பன் (Mr. Gorbyn MP) திரு. நீல் யெராட் (Mr. Gerrard MP) திரு. கொக்ஸ் (Mr. Cox MP), செல்வி. லெண்டர் (Miss Lester MP) ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைத் தீவின் இன்றைய நிலை குறித்து கேள்விகளை எழுப்பியதுடன், தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதில் பிரித்தானிய அரச என்ன செய்கிறது எனவும் வினா எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த பிரித்தானிய தெற்காசிய விவகார அமைச்சர் திரு. கன்லி (Hon. Hanley MP) பிரித்தானிய வெளிவிவகார அலுவலக அதிகாரிகள் இலண்டனிலும் கொழும்பிலும் மனித உரிமைகள் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், குழுக்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் வடக்குப் பகுதியின் மனிதாபிமான நிலைகுறித்து, பிரித்தானியத் தூதுவர் சிறீலங்கா அரசுடன் கலந்துரையாடி வருவதாகவும் தெரிவித்தார்.

பிரித்தானிய அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், 'ஒக்ஸ்பாம்', 'கெயர்' நிறுவனம் ஆகியவற்றினூடாக நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு உதவிகளை வழங்கி வருவதாகவும் இவை சிறீலங்கா அரசின் இணைவுடன் பணியாற்றுவதாகவும் தெரிவித்தார். மேலும், உணவு வகைகள் மற்றும் உணவு வகையில்லாத நிவாரணப் பொருட்கள் என்பன வடக்கிலுள்ள (குடாநாட்டு மக்கள் உட்பட) இடம்பெயர்ந்த மக்களைச் சென்றடைவதாகத் தெரிவித்தார். மேலும் பிரதான தேவைகளாக உள்ளவை இருப்பிடங்கள் அமைக்கத் தேவையான பொருட்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், மற்றும் சுத்தமான குடிநீரைப் பெறும் வசதிகள் என்பனவையே என்றார்.

ஆயினும் திரு. கன்லி அவர்கள் எதை அடிப்படையாகக் கொண்டு உணவு, உணவு பொருட்கள் அல்லாத நிவாரண பொருட்களும் குடாநாட்டைச் சென்றடைந்துள்ளதாகக் கூறுகிறார் என்பது விளக்கம் இல்லாது இருக்கின்றது. சிறீலங்கா, சர்வதேச சமூகத்தின் நேரடித் தொடர்பைத் தவிர்ப்பதற்காக, மிகமிகக் குறைந்த அளவிலான பொருட்களை வடக்குக்கு அனுப்புவதாகக் கூறுகின்றது. ஆயினும் இவையும் இராணுவத்தினரின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு மீதியே வெளியே விடப்படுகின்றது என்பது அங்கு பணியாற்றும் பல சமூகசேவை நிறுவனங்களின் கணிப்பு. அத்துடன், சிறீலங்கா 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வடக்கு-கிழக்குக்கான வெளிநாட்டு புனரமைப்பு உதவிகளைத் திருப்பியனுப்பி வைத்துள்ளதைச் சுட்டிக்காட்டும் அவதானிகள், இத்தகைய அரச நிவாரணப் பணிகளைச் செவ்வனே செய்யுமென எதிர்பார்க்க முடியுமா எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

# தலைவரின் மாவீரர் தினச்செய்தித் தொடர்ச்சி...

உண்டு. நாம் எமது படை பலத்தைப் பெருக்கி, போராட்டத்தைத் தீவிரமாக்க வேண்டும். தமிழ்மக்கள் தமது அரசியற் தலைவிதியைத் தாமே நிர்ணயிப்பதாயின் தமிழரின் படைபலம் பெருகவேண்டும். எமது படையமைப்பைப் பலப்படுத்திக் கொள்வதன் மூலமே நாம் பாதுகாப்பாக வாழ முடியும். நாம் எமது இழந்த மண்ணை மீட்டெடுக்க முடியும். நாம் எமது சொந்த இடங்களுக்குச் சுதந்திர மனிதர்களாக திரும்பிச் செல்லமுடியும். தமிழர் தேசம் தமது படைபலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பது இன்றைய தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக எழுந்துள்ளது. தமிழினம் சிதைந்து அழிந்து போகாமல் பாதுகாப்பாக வாழ்வதற்கு இது அவசியம். போராடித்தான் வாழவேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குத் தமிழ்த் தேசம் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தேசியப் பணியிலிருந்து வரலாற்றின் அழைப்பிலிருந்து தமிழ் இளம் பரம்பரை ஒதுங்கிக்கொள்ளமுடியாது. இதில் காலம் தாமதிப்பதும் எமது இனத்திற்குப் பேராபத்தை விளைவிக்கக்கூடும். எனவே காலம் தாழ்த்தாது எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் தமிழ் இளம் சந்ததி எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் நாம் எமது போராட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

மிகவும் நெருக்கடியான இக்காலகட்டத்தில் எவ்வித உதவியுமின்றி ஒரு இனஅழிப்பு யுத்தத்தை நாம் தனித்து நின்று முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான நேரத்தில் உலகத்தமிழினத்தின் உதவியையும் ஆதரவையும் நாம் வேண்டி நிற்கிறோம். குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் எமது உரிமைப் போருக்குக் குரல் கொடுப்பதுடன், தம்மாலான உதவிகளையும் செய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன். எமது தேசத்தின் விடுதலைக்காக சாவை அரவணைத்து சரித்திரமாகி விட்ட எமது மாவீரர்களை நாம் நினைவு கூரும் இப் புனித நாளில் எந்த இலட்சியத்திற்காக ஆயிரமாயிரம் விடுதலை வீரர்கள் களப்பலியானார்களோ அந்த இலட்சியத்தை அடைந்தே தீருவோமென உறுதி எடுத்துக் கொள்வோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# மாவீரர் நாள்...

தமிழரின் கலைகள் தமிழகத்திலேயே அழிந்துவரும்போது, வேற்று மண்ணில் தங்களின் கலை அடையாளங்களையும் தனித்தன்மையையும் காப்பாற்றி வருகின்றனர், தமிழீழ மக்கள்.

இவையனைத்தினூடாக மக்களை அரசியல் மயப்படுத்தி, தேசிய விடுதலைப் போரிற்குத் தயார்படுத்திக் கொண்டுள்ளனர். சுவிஸ் நாட்டின் நிகழ்ச்சிகளின் இடையில் 'தேசியப் பாதுகாப்பு நிதி' மேடையிலேயே வந்து வழங்களாமென அறிவித்தவுடன், நூற்றுக் கணக்கானோர் வரிசையில் வந்து பணமாயும், தங்க நகைகளைக் கழற்றி வாரி வழங்கியும் நிதிகொடுத்ததை என் கண்களாலேயே நம்பமுடியவில்லை.

மூன்று நாடுகளிலுமே யான் சிறப்புரையாற்றுகின்ற அரிய வாய்ப்பைப் பெற்றேன். அச்சிறப்புரையின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும், தமிழீழத் தேசியத் தலைவர் மாவீரன் பிரபாகரன் பற்றியும் குறிப்பிடும்போதெல்லாம் அரங்கம் அதிர்ந்தது. அதுபோலவே யான் சார்ந்துள்ள "உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்", "தமிழர் தேசிய இயக்கம்", "தமிழ் தமிழர் இயக்கம்", "தமிழ்த் தேச பொதுவுடமைக் கட்சி" போன்ற அமைப்புக்களும் மற்ற பிற தமிழீழ விடுதலையில் அக்கறை கொண்டுள்ள தமிழர் அமைப்புக்களும் செய்துவரும் பிரச்சாரங்களையும், போராட்டங்களையும் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் கைதட்டல் காதைப் பிளந்தது.

தமிழீழப் போராட்டம் ஈழத்தில் மட்டும் நடைபெறவில்லை. அது உலகெங்கும் நடைபெறுகின்றது. அப்போராட்டம் ஒவ்வொரு தமிழரின் வீட்டுக்குள்ளும் அவர்களது இதயங்களிலும் நிலைகொண்டுள்ளது என்பதைக் காணமுடிந்தது. "தமிழீழமே தீர்வு" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் கருதவில்லை. ஒட்டுமொத்தமாய் அனைத்துத் தமிழீழ மக்களும் உணர்கின்றனர் என்பது தெளிவாகியது.

எனவே, சந்திரிகா அரச நினைப்பதுபோன்று விடுதலைப் புலிகளை விட்டுவிட்டு, மக்களிடம் நேரடியாகப் பேசிப் பிரச்சினையை எப்படியாவது முடிக்கலாம் என்பது அபத்தமானது. புலிகளையும், மக்களையும் பிரித்துப் பார்ப்பதே மிக அபத்தமானது. ஒவ்வொரு ஈழத் தமிழருமே ஒரு புலியாகவே உள்ளனர். எனவே சந்திரிகாவின் திட்டப்படி தமிழினத்தையே ஒட்டுமொத்தமாய் ஒழித்தால்தான் அவரது நப்பாசையை நிறைவேற்ற முடியும். அது சாத்தியமில்லை எனவே,

"தமிழீழம் அமைவது உறுதி - அது
தமிழீழ மக்களின் உறுதி."

என்றே எனக்குப் பட்டது. இவ்வுறுதியே மாவீரருக்கு மக்களின் வீரவணக்கம் என யான் உணர்ந்தேன்.

ஒட்டுமொத்தமாய் மாவீரர்கள் எந்த இலட்சியத்துக்காய் உயிர்நீத்தார்களோ, அந்த இலட்சியத்தை அடைவதில் அனைத்துத் தமிழீழ மக்களும் போர்க்குணத்துடன் இணைவதைப் பார்க்க முடிந்தது. அதுவே என் மாவீரர் நாள் அனுபவம். அம் மாவீரர்களுக்கு என் வீரவணக்கம்!

# சர்வதேச நிறுவனங்கள் மீது
## சிறீலங்காவின் தென்பகுதியில் வெறுப்பு

சர்வதேச தொண்டர் நிறுவனங்களான அரச சார்பற்ற நிறுவனங்கள், சிறீலங்காவின் தென்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களாகவே கருதப்படுகின்றன. இவ்வாறு, பிபிசி யின் கொழும்பு முகவரான யோர்ச் ஆர்னி கூறியுள்ளார். 'நியூஸ் ரீல்' பகுதிக்குத் தகவல் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், 'வடபகுதியில் மிகவும் வேண்டப்படும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சர்வதேச தொண்டர்கள் நிறுவனங்கள் மீது, சிறீலங்காவின் தென்பகுதியில் பெருமளவில் கசப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அரசுடன் மோதல் போக்கு ஒன்றைக் கடைப்பிடிக்காமல் பொருண்மிய அபிவிருத்திக்கும், நாட்டுக்குத் தேவையான மற்றவழிகளிலும் செயற்படுவதிலேயே இவை செயற்படுகின்றன.

எனினும், பல தரப்பினருக்கும் பலவகையான விளக்கங்கள் அளிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அரச தரப்பில் இருப்பவர்களும், தீவிர இனவாதிகளும் இந்நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குப் பலவித முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகின்றனரெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்'

www.tamilarangam.net



# மாவீரர் நாள் 1995



-அருட்தந்தை அ. சேவியர் அருளரசு.

யேர்மனி நாட்டில் கிறிபீல்ட் நகரத்தில் 25.11.95 மாலையும் அதேநாளில் இரவு இங்கிலாந்தில் இலண்டனிலும், மறுநாள் சுவிஸ் நாட்டில் சூரிச் நகரிலும் மாவீரர் தின விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றும் அரிய வாய்ப்பினை நான் பெற்றேன். இருப்பினம் சுவிஸ் நாட்டில் மட்டுமே முழு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. யேர்மனியில் நிகழ்ச்சியின் முற்பகுதியிலும், இங்கிலாந்தில் நிகழ்ச்சியின் பிற்பகுதியிலும் மட்டுமே கலந்து கொள்ள முடிந்தது. நான் கண்ட வரை என் நெஞ்சப்பதிவுகளை இவண் சுருக்கமாகத் தொகுத்திட விரும்புகிறேன்.

மூன்று நாடுகளிலுமே மக்கள் பெருந்திரளாக மட்டுமல்ல, உணர்ச்சி வெள்ளமாயும் நின்றனர். தமிழீழ மக்கள், தம் தாயக உணர்வில் ஒருதாய் வயிற்றின் பிள்ளைகள் என்ற உணர்வோடு இருப்பதைப் பார்க்க முடிந்தது. நெடுந் தொலைவிலிருந்து பேரூந்துகளில் குழுக்களாயும், சீரூந்துகளிலும் வந்து குவிந்திருந்தனர். தேச பக்தியும், தேசத்திற்காய் உயிர் நீத்த மாவீரர்கள் மீதுள்ள அளவிடமுடியாத மதிப்பும், வணக்கமும் அவர்களின் குவிமுகப் புள்ளிகளாய் அமைந்தன.

மாவீரர்கள் யாரென்றும் அவர்கள் புரிந்த தியாகத்தின் தன்மையும் தமிழீழ மக்கள் அனைவருடைய நெஞ்சிலும் தெளிவாய் உள்ளது. யாரும் அவர்களுக்கு விளக்க வேண்டிய தேவை இருப்பதாய்ப் படவில்லை. மாவீரர் வணக்கம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாய் இருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பொறுப்பாளர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றியவுடன், தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. தொடர்ந்து மக்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வீரவணக்க நிகழ்வு நடைபெறுகிறது. யேர்மனியில் மாவீரர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகளும், ஒவ்வொரு பகுதிப் பிரதிநிதிகளும் வரிசையாய் வந்து மாவீரர்களின் மலர் பூமியில் தீபமேற்றி வைத்தனர். பலரது கண்களில் தங்கள் இனிய மாவீரர்களின் நினைவு கண்ணீரைக் கொட்டியது. சுவிற்சர்லாந்தில் வந்திருந்த அனைவருமே மாவீரர்களுக்கு விளக்கேற்றி அரங்கத்திலேயே உருவாக்கப்பட்டிருந்த மாவீரர் கல்லறைச் சதுக்கத்தில் வரிசையாய் வந்து ஒளியை வைத்துவிட்டு மரியாதை செலுத்தினர். அவ்வேளை முழுவதும் மாவீரர்கள் பற்றிய பாடல்களை இசைக்குழுவினர் மேடையில் பாடிக் கொண்டேயிருந்தனர். இறுதியாகத் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் வெளியிட்ட மாவீரர் தினச் செய்தி சுவிஸ் நாட்டுக் கிளையின் பொறுப்பாளர் முரளி அவர்களால் படிக்கப்பட்டது. "இராணுவ அழுத்தத்திற்குப் பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் பங்குபற்றப் போவதில்லை. இத்தகைய தீர்வை மானமுள்ள தமிழன் எவனும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்தத் திட்டத்தை முறியடித்து, தன்னாட்சி நோக்கிய எமது விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வதாயின் எமக்குள்ள ஒரேயொருவழி படைப்பலத்தைப் பெருக்கிப் போராடி, மாவீரர்களின் இலட்சியத்தை நாம் அடைந்தே தீருவோம்" என்ற, தமிழீழத்தேசியத் தலைவரின் செய்தி வாசிக்கப்பட்டதும் மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் அதை வரவேற்றனர்.

யேர்மனியிலும், இங்கிலாந்திலும் ஒரு மாவீரனின் உடலை இரு கரங்களில் ஏந்தி நிற்கும் வீரவேங்கை ஒருவரின் படத்தை மேடையில் ஓவியப் பின்புலமாய் அமைத்திருந்தனர். சுவிஸ் நாட்டில் மட்டுமே சுதந்திரப் பறவை ஒன்று தன் அடிமைக் கூண்டிலிருந்து விலங்கினை ஒடித்தெறிந்து, பறந்து, புயலாய்ச் சீறி வெளியேறுவதுபோன்று, இந் நிகழ்ச்சிக்கென்றே வரையப்பட்ட, ஓர் அரிய ஓவியத்தை வைத்திருந்தனர்.

மாவீரர் வணக்கம் முடிந்து தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறுவர், சிறுமிகள் மாவீரர்கள் பற்றிய உரைகளை உணர்ச்சிபூர்வமாய் நிகழ்த்தினர். தனிப்பாடல்களுக்கு நடனங்கள், தொடர்ந்து நாட்டிய நாடகங்கள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகள், இயல் இசை நாடகம் அனைத்தையும் கலந்தும், தனித்தனியாகவும் பல நிகழ்ச்சிகள், தமிழீழ மக்களின் துன்பங்கள், சிங்கள அரசின் கொடுமைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அளப்பரிய தியாகங்கள், கரும்புலிகளின் நம்பமுடியாத தியாகச் சாதனைகள் ஆகியன அனைத்துக் கலைநிகழ்ச்சிகளின் வேரோட்டமாய் விளங்கின. சிறுவர்கள், சிறுமியர் முதல் பெருமளவு இளம்பெண்கள், இளைஞர்கள் எனப் பெரியவர்கள் வரை அனைத்து நிகழ்ச்சிகளிலும் வயது வேறுபாடின்றி கலைஞர்களாய் நின்றனர். இவர்களில் பலர், தமிழீழ மக்களால் நடாத்தப்படும் அந்த நாட்டின் கலைப்பள்ளியிலிருந்து வருகின்றவர்கள் என்றறிந்தபோது, வேற்று மண்ணில் தழைக்கும் தமிழ்க் கலைகளை அறிய முடிந்தது.

சிங்கள இனவெறி அரசின் இனவாதத்திற்குப் பலியாகி நாடுகளனைத்திலும் ஏதிலிகளாய் வாழும் தமிழ் மக்கள் தங்கள் வாழ்வையும், உணர்வுகளையும், குறிக்கோள்களையும், போராட்டங்களையும் அப்படியே கலைவடிமாக்கியுள்ளனர். துன்பம், எழுச்சி, விடுதலைவேட்கை, போராட்டம், தியாகம், வெற்றி ஆகிய யதார்த்த நிலைகள் மாறிமாறிக் கொப்பளிக்கின்றன. பரதம், கர்நாடகம் முதல் அனைத்துப் பார்ப்பனீயக் கலைவடிவங்கள் கூட, அதன் மரபுக் கூடுகளிலிருந்து உடைக்கப்பட்டு விடுதலை அணிவகுப்பிற்கு இழுத்து வரப்படுகின்றன. விடுதலை வேட்கை கொண்டோர்களின் கரங்களில் மரபார்ந்த கலைகளாக இருக்கலாம், குறியீட்டு நாடகங்கள் போன்ற நவீன வடிவங்களாய் இருக்கலாம், அனைத்துமே போர்க்கருவிகளாய் மாறும் என்பதைக் கண்கூடாய்க் காணமுடிந்தது.

தாய்த் தமிழகத்தில் கலையென்ற பெயரால் முக்கலும், முனங்கலுமான 'முக்காபலாக்களும்', 'ஸ்டைல்' என்ற பெயரில் நடைபெறும் காக்காய் வலிப்பு நடனங்களும், வார்த்தைகள் புரியாமல் காட்டுக் கத்தலாய்க் கேட்கும் இசையமைப்பும், கலையென்றால் சதை, விரசம் என்ற பொருளில் நடைபெறும் பம்பாய்ப் பெண்களின் இறக்குமதியும் தமிழகத்தின் கலைச் சூழலைக் கவலைக்கிடமாக்கி இளைய தலைமுறையைச் சீரலித்துக் கொண்டிருக்கும்போது, இங்கே தமிழீழ மக்கள் தமக்கே உரிய முறையில் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பிய மேலைக் கலாச்சாரத்தின் சுவடுகூட இல்லாமல், மண்ணின் மணம் மாறாத தமிழ்க் கலைகளை இங்கு மேடையேற்றிக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டைப்போல் மக்களை வாழ்விலிருந்து கனவுலகத்திற்குக் கொண்டுசெல்லாமல், நிஜவாழ்வை அப்படியே கலைவடிவமாக்கியுள்ளனர். கலைப் படைப்பிலும், நவீனத்திலும் உலகத் தரமிக்க படைப்பாற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# யாழ்ப்பாணஇராட்சியம்

**தமிழ் மக்கள் அடிமைகள் ஆக்கப்படவில்லை. தமிழர் படைகள் தோற்கடிக்கப்படவில்லை. தமிழர் ஆட்சி அபகரிக்கப்படவில்லை. ஆகத் தமிழர் தாயகத்தின் ஒரு சிறு பகுதி மட்டுமே இழக்கப்பட்டுள்ளது. எனவே இழந்த நிலப்பரப்பை மீட்டு, எமது சுய கௌரவத்தையும் இனமானத்தையும் நிலைநாட்டி, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தங்களது வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று தமிழர் தேசியத்தின் உறுதிப்பாட்டை நிரந்தரமாக நிலைநிறுத்த வேண்டும்.**

யாழ் நகரத்துக்குள் எதிரிப் படைகள் புகுந்துவிட்டன என்ற செய்தி, நெஞ்சுக் கூட்டுக்குள்ளாக டாங்கி ஒன்று ஏறிச்செல்வது போன்ற உணர்வை எமது மக்களுக்குக் கொடுத்து விட்டது. அந்த மன உணர்வை எப்படியழைப்பது என்று தெரியாதுள்ளது. அது எமது மண்ணை எதிரி ஆக்கிரமித்து விட்டானே என்ற கோபமா அல்லது எதிரியின் வரவால் எமது மண் களங்கப்பட்டு விட்டது என்ற கொதிப்பா அல்லது நுழைந்த எதிரியை எப்படியாவது கொன்று தள்ள வேண்டும் என்ற சினமா அல்லது இவை எல்லாம் சேர்ந்த ஒருவகை உணர்வா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகின்றது. 375 ஆண்டுகளுக்கு முன்னர் எமது முப்பாட்டனின் முப்பாட்டர்கள் இதே போன்றதொரு விபரிக்க முடியாத மன உணர்வை அனுபவித்திருப்பார்கள். நமது நெஞ்சில் மேலே யானை ஒன்று ஏறிச் செல்வது போன்றதொரு அந்தரத்தை அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

மண்டைதீவுப் பக்கம் இருந்து வந்த சிங்களப்படை கோட்டைப் பகுதியைக் கைப்பற்றிப் பின்னர் நகர் மையப் பகுதிக்குள் தனது படைகளை நடாத்திச் சென்றது என சிங்கள அரச அறிவித்துள்ளது. இவ்வாறுதான் 1620ஆம் ஆண்டின் ஒரு விடியற்காலைப் பொழுதில் பண்ணைக் கடலுக்கு ஊடாக அந்நிய ஆக்கிரமிப்பு ஒன்று புகுந்து தமிழர் இராட்சியத்தை விழுங்கியது. தனது வீட்டை, தனது சொத்தை, தனது பிள்ளைகளை இழந்து இடம்பெயர்ந்தோடிய எமது முன்னோர்கள் விட்ட கண்ணீர், சொன்ன ஒப்பாரி, எதிரி மீது வெளிப்படுத்திய கோபம் இப்போது எமது மனக்கண்ணில் நிழலாடுகின்றது.

இன்று எதிரி விமானங்களின் இரைச்சல்களும், எறிகணைகளை ஏவும் சத்தங்களும் எமது செவிகளில் நுழைந்து வரும்போது அன்று போர்த்துக்கேயப் படைகள் ஏறிச் சென்ற குதிரைகளின் குழம்பொலி கேட்டு எமது முப்பாட்டரின் முன்னோர்கள் அடைந்த மன உணர்வை எங்களால் அனுபவிக்க முடிகின்றது. யாழ்ப்பாண மண்ணை எதிரியிடம் இழந்துவிட்டோமா! அதிகாலை நித்திரை விட்டெழும்பும் போது எவருமே உடனடியாக அதை நம்பத் தயாராக இருக்கவில்லை. கண்விழித்துச் சூழலை நோக்கும் போது அந்த உண்மை மக்களை வாட்டி எடுக்கின்றது.

வரலாற்றுப் பழமையாலும் பண்பாட்டுச் செழுமையாலும் எண்ணிக்கை தொகை காரணமாகவும் யாழ்ப்பாண மண் ஒரு முக்கியத்துவத்தை வகிக்கின்றது. அத்துடன் ஈழத் தமிழர்களின் தேசிய சின்னமாக சிங்களப் பேரினவாதம் யாழ்ப்பாணத்தையே கருதுகின்றது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல் என்பது தமிழர் ஆட்சியைத் தமிழர் பெருமையைக் கைப்பற்றிய ஒரு செயலாகவே அது கருதுகின்றது.

ஆயினும், யாழ்ப்பாணத்துக்கு இன்னும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. அதாவது சிங்களப் பேரினவாதத்தின் வெறிப்பாய்ச்சலுக்குத் தமிழர்கள் உள்ளாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யாழ்ப்பாண மண்ணில் அவர்களுக்குப் புகலிடம் அளித்துப் பாதுகாப்பு வழங்கி வந்துள்ளது. 1958 இல் தமிழர்களுக்கு எதிரான வன்செயலில் இருந்து, 1990 தொடக்கம் தமிழீழத்தில் நடாத்திய இனப்படுகொலையிலிருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக வந்த மக்களை யாழ்ப்பாணம் தாங்கியது. இவ்வாறு ஈழத்தமிழருக்குப் பாதுகாப்பு அரணாக இதுவரை காலமும் இருந்த யாழ் மண், இப்போது எதிரிப் படையிடம் வீழ்ந்துவிட்டது. அன்று, போர்த்துக்கேயப் படைகள் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்ற ஒரு போரைத் தொடுத்தன. அந்தப் போரில் தமிழர் படை தோற்றது. தமிழர் மன்னன் எதிரியால் சிறைபிடிக்கப்பட்டான். தமிழ் மக்கள் அடிமைகளாக்கப்பட்டனர். தமிழரின் ஆட்சி அபகரிக்கப்பட்டது. யாழ்ப்பாண இராட்சியம் வீழ்ச்சியுற்றது. ஆனால் இன்று நடந்துள்ளது என்ன! சிங்கள ஆக்கிரமிப்பில் இருந்து தமிழ் இனத்தை விடுவிக்க ஒரு விடுதலைப் போர் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழரின் விடுதலைப் போரை முறிக்கலாம் என நினைத்த சிங்கள அரசு, யாழ்ப்பாணச் சமரைத் தொடங்கியது.

இந்தப் படையெடுப்பின் விளைவாக, நாம் வேரூன்றி இருந்த நிலைப்பகுதியை விட்டு, தமிழர் அரசின் ஆட்சிமையம் இடம் மாறியுள்ளது. அவ்வளவுதான். ஆயினும் தமிழ் மக்கள் அடிமைகள் ஆக்கப்படவில்லை. தமிழர் படைகள் தோற்கடிக்கப்படவில்லை. தமிழர் ஆட்சி அபகரிக்கப்படவில்லை. ஆகத் தமிழர் தாயகத்தின் ஒரு சிறு பகுதி மட்டுமே இழக்கப்பட்டுள்ளது. எனவே இழந்த நிலப்பரப்பை மீட்டு எமது சுய கௌரவத்தையும் இனமானத்தையும் நிலைநாட்டி, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தங்களது வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று தமிழர் தேசியத்தின் உறுதிப்பாட்டை நிரந்தரமாக நிலைநிறுத்த வேண்டும். இந்தத் தேசிய உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதற்குத் தமிழர் படைபலம் அதிகரிக்கப்படுவதைத் தவிர வேறு வழிகள் இல்லை. இந்த வரலாற்றுக் கடமையை ஆற்ற முன்வருமாறு தமிழ் இளம் பரம்பரையை நோக்கித் தமிழர் தலைவன் அறைகூவல் விடுத்துள்ளான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோகங்களைச் சுமக்கும்....

உண்டோம். அப்பகுதியில் பாம்பின் நடமாட்டம் அதிகமாக உள்ளதாக அயலவர்கள் கூறியதால் அங்கிருந்து மட்டுவிலுக்கு வந்தோம். அங்குள்ள அம்மன் கோவிலின் முன்புறம் உள்ள மரத்தின் கீழ் தங்கியிருந்தோம். அங்கு தங்கியிருந்த போது மழைபெய்யத் தொடங்கியதால் தொடர்ந்தும் இருக்க முடியாத நிலையில் வெளியேறி, இந்த சாந்தநாயகி அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியிருக்கிறோம்.

இப்போ இங்கு வருபவர்கள், எம்மை இப்பாடசாலையை விட்டு வெளியேறி முகாம்களில் போய்த் தங்குமாறு பணிக்கின்றனர். இவர்களது சொற்படி நாம் மட்டுவில் மகா வித்தியாலய முகாமுக்குச் சென்றோம். அங்கு ஆயிரக் கணக்கானவர்கள் தங்கியிருப்பதாகவும் இனி மேலதிகமாக அனுமதிக்க முடியாது எனவும் அங்கிருந்தவர்கள் கூறினர். அதனால் வேறோர் முகாமுக்குச் சென்றோம். அங்கும் அதேநிலைதான் காணப்பட்டது. அவர்கள் எம்மை கைதடியில் போய்த் தங்குமாறு ஆலோசனை கூறினர். இங்கிருந்து இனி எப்படிக் கைதடி போக முடியும்? அங்கும் இதே நிலையாகத்தானே இருக்கும் என்பதால் மீண்டும் இந்தப் பாடசாலைக்கே திரும்பிவிட்டோம்.



நாம் எல்லோரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் நாளாந்தக் கூலி வேலைக்குப் போகிறவர்கள் தான். ஆனபடியால் இங்கும் எப்படியாவது வேலை செய்து வயிற்றைக் கழுவுவோம். எமக்கு நிவாரண உதவிகள் தராவிடினும் நிம்மதியாக இங்கேயே தங்கியிருக்க விட்டால் போதும். பிள்ளைகளையும் கொண்டு ஒவ்வொரு இடமாக அலைந்து திரிய முடியாது என்றார் மிகவும் வேதனையுடன்.

இப்பாடசாலையில் தங்கி யிருந்த வயோதிபர் ஒருவர் குறிப்பிடுகையில், கிடைக்கிறதைக் கொண்டு ஒருநேர உணவைத்தான் அரைகுறையாகச் சமைத்து உண்கின்றோம். உழைப்புப் பிழைப்பு இல்லாததால் கடந்த ஒன்பது நாட்களாக இப்படியேதான் காலம் போகிறது. முத்திரையைக் கூட எடுத்து வராததால் நிவாரணத்தைத்தானும் எடுத்து வயிற்றை நிரப்ப முடியாது தவிக்கிறோம்.

பிள்ளையள் நேற்றும் இன்றைக்குந்தான் புத்தூர் பக்கம் உயிரை வெறுத்துப்போய் ஊராரின் பொருட்களை எடுத்து வந்து கொடுக்கிறார்கள். அவர்கள் ஏதாவது பணம் கொடுத்தால் அதைக் கொண்டு ஒரு மாதிரிச் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

மட்டுவில் மகாவித்தியாலய இடம்பெயர்ந்தோர் நல நோம்பு முகாமிற்குள் சென்றதும் அம்மாவைக் காணவில்லை, அப்பாவைக்காணவில்லை, வயது போனவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் விட்டு விட்டு வந்துவிட்டோம் அவர்களுக்கு என்ன நடந்ததென்று அறிய முடியவில்லை. வீதிகளில் சடலங்கள் காணப்படுவதாகக் கூறுகிறார்கள் என்ற வார்த்தைகளே பலரது வாய்களிலிருந்தும் வந்த வண்ணமிருந்தன.

இம்முகாமில் உள்ளவர்கள் தமக்கு உணவைப் பொறுத்த வரையில் எந்தவித குறையும் இல்லை, ஆனால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்து விட்டோம். தண்ணீர் குடிக்க ஒரு கோப்பை கூடக் கிடையாது என்றனர். இம்முகாமில் தங்கியுள்ள பலர் வன்னி பெருநிலப்பரப்பிற் சென்று குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். இத்தகையவர்களது பெயர், விபரங்கள் முகாம் பொறுப்பாளர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன. இவர்கள் விரைவில் அங்கு கொண்டு சென்று தங்கவைக்கப்பட்ட பின், குடியிருப்பு வசதிகளும் விவசாய ஊக்குவிப்புகளும் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வன்னி செல்ல விரும்பித் தமது பெயரைப் பதிவு செய்து கொண்ட ஆவரங்காலைச் சேர்ந்த ஐயங்கன் அருமைத்துரை என்பவரைச் சந்தித்தபோது, தினமும் வியர்வை சிந்தி உழைத்துப் பழக்கப்பட்ட உடம்பு சும்மா இருந்து உண்ண இடம் கொடுக்கிறது இல்லை. கஷ்ரப்பட்டு உழைத்து எல்லாம் வீணாகப்போய்விட்டது. காலம் காலமாக உழைத்ததை ஒரேதரமாகக் கொடுத்து விட்டு வந்துவிட்டோம். வயலில் வெங்காயம் கிளறி விட்டபடி, பிடி கட்டமுதல் ஆமி வந்துவிட்டதால் அப்படியே விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டேன். முகாமில் சும்மா இருந்து உண்ணுவதைவிட, வன்னிப் பக்கம் போனால் காணி எடுத்துச் செய்யலாம். வீட்டாலை வெளிக்கிட்ட பின்பு எங்கிருந்தாலும், எப்படி இருந்தாலும் ஒன்றுதான் எனக் கூறிப் பெருமூச்சு விட்டார்.

இதன்போது அங்கு வந்த சின்னப்பு திரேசம்மா என்ற பெண்மணி, 1990 இல் திருகோணமலையில் இருந்து இரவு இரவாக புறப்பட்டு, உடுத்த உடுப்புடன் 25 நாட்களாகக் காடுகளூடாக நடந்து யாழ்ப்பாணம் வந்தேன். வழியில் பசியின் கொடுமையால் கையில் இருந்த ஒரு பவுண் சங்கிலியை ஐந்நூறு ரூபாவுக்கு விற்றுப் பெற்ற காசைக் கொண்டு வயிற்றை நிரப்பினேன்.

யாழ்ப்பாணம் வந்து சிலரின் உதவியுடன் தோப்பு எனும் இடத்தில் தங்கியிருந்து அப்பம் சுட்டு விற்று வந்தேன். சில மாதங்களுக்கு முன் அங்கு 'ஆமி' வந்ததை அடுத்து கையில் அகப்பட்டவற்றுடன் புத்தூரில் வந்து தங்கினேன். கடந்த வாரம் அங்கும் ஆமி வந்ததால் எதுவுமே எடுக்காது ஷெல்லுக்குப் பயந்து றோட்டில் படுத்துப் படுத்து ஓடி மட்டுவிலுக்கு வந்தேன். இங்கு வந்து பத்து நாட்களாகிவிட்டன. உடுத்த உடுப்புடனேயே இருக்கிறேன். மாற்றி உடுக்கக்கூட ஓர் உடை கிடையாது. தாகத்திற்குத் தண்ணீர் குடிக்க சிரட்டை கூடக் கிடைக்காதாம். அதாலைதான் கிளிநொச்சிப் பக்கம் போயாவது வாழ வழியைத் தேடிக் கொள்ள நினைத்துள்ளேன் என்றார்.

# இழந்தவை - உனக்கே உரியவை

நீயிருக்கின்றாய்-
நிலமிருக்கின்றது
நீ எதையுமே இழக்கவில்லை
நீ விட்டு வந்தவை-
உனக்கே உரியவை.
அவை உனக்குக் கிட்டும்!
நம்பிக்கை வை.
இன்று நீ இழந்தவையாகக்
கருதப்படுபவை



இழந்தவையல்ல.
அவை,
உனக்கே உரியவை!
உன் நிலமிருக்கின்றது
நீ ஓடி விளையாடிய
முற்றம் இருக்கின்றது.
இழந்தவற்றை விட
மீட்க வேண்டியவை ஏராளம்!

- வவுனியா திலீபன்

# போன மண்ணை மீட்கப் போர் புரிவீர்!

ஏழு தலைமுறைக்கும் எம்முரிமை மண் எந்தக்
கூழுக்குப் பாடி குடியிருப்பைக் கிண்டிவிட்டான்!
ஓலைக் குடிலெனினும் நாங்கள் உறங்கியெழும்
மாளிகைகள்! பட்டினியில் வாடித் தளர்ந்தாலும்
நீட்டி நிமிர்ந்து கிடக்கும் நிழலிடங்கள்!

தோட்டம் வயல்வளவு தொட்டி லொடுகட்டில்
வீடு பொருள் பண்டம் விறகுதடி காசபணம்
மாடாடு கோழிகுச்சு மாபலா வாழைதென்னை
பேசங் கிளி புறா பிள்ளைபோல் நாய்பூனை
ஆசையாய் நாம் வளர்த்த பூமரங்கள் ஐயகோ!
எல்லாமே விட்டோடி ஏதிலிய ராய்இந்தப்
பொல்லாத நச்சரவு வாழும் புதரயலே
மாரி பனி மையிருட்டு மற்றுஞ் சடுவெயில்
கூரையில்லாப் பாழ்வெளியில் கூனிக் குறுகிக்
குடர் சருண்டு நிற்போமா! கோவென்று கூவி
இடருற் றழுவோமா! ஏனிந்த வல்வினையோ!

எண்ணக் கொதிக்குமப்பா! எவ்வழியும் சேறுசரி!
பள்ளத்தில் வெள்ளம்! இருபக்கமெல்லாம் வெள்ளமங்கு
வெள்ளத்துள் வெள்ளம் மிதந்தாற்போல் மக்களது
வெள்ளம்! அவர் உள்ளம் கரைத்த விழிவெள்ளம்!
ஊழிநாள் வெள்ளத்தை உந்துமப்பா அந்தவெள்ளம்
ஏழுலகும் காணா இடப்பெயர்வை என்னென்பேன்!

நன்னீர் இலாமலங்கு நாவரண்டு போயினராம்!
மூச்சுத் திணறி முடிந்துவரும் சிற்சிலராம்
நாள்முழுதும் உற்ற நகர்வில் நடைமெலிந்தும்
கால் கடுக்க நின்றும் கடும்பசியில் வாடினராம்!

சூலோடு கைப்பையைத்தூக்கியபடி வைத்திரவில்
நாலாறு காதம் நடந்தவிளம் பூவையரே!
சாணைத்துணியால் தலைமுட்டப் பொத்தியுங்கள்
ஏணைக் குழவிகளை ஏத்திவந்த மெல்லியரே!

நெஞ்சை உருக்கும் நினைவுகளை விட்டிடுங்கள்
அஞ்சற்க! மண்ணின் அவலங்கள் மாற்றவிங்கு
வல்ல தலைவன் வழிகாட்ட வந்துநின்றான்
எல்லாரும் சேர்ந்துவிட்டால் எவ்வெதிரி முன்னிற்பான்!

தூக்கிய தொட்டில் தொடுகயிறு வெட்டுணுமுன்
ஆக்கிய பச்சைகள் காய்ந்து கருகுமுன்னே
நாமங்குப் போய்விடலாம் நம்புங்கள் கையுயர்த்தி
ஆமென்(று) உறுதி அகத்தில் எடுத்திடுங்கள்!
மானம் நிறைந்த இளையவரே! வாருங்கள்
போனமண்ணை மீட்டெடுக்கப் போர்புரிவீர் அஃதெங்கள்

அன்னைமண்: நாங்கள் அளைந்துவிளை யாடியமண்
சின்னக் குழவியிலே கோலியள்ளித் தின்றமண்:
எங்கள் உறவுமண்: வாழ்வாய் இலங்குமண்:
பொங்கும் உணர்வாய்ப் பொலியுமண்: எம்முயிர்மண்
பூனைநிகர் சிங்களவன் மண்ணிற் புகுந்து தமிழ்
மான மறத்தை வடுச்செய்தான் விட்டிடவோ!
வேரறுந்து போகவெங்கள் வாழ்வைக்குலைத்தவனை
போரெழுந்து சுட்டுப் புதைத்துவிட வேண்டாமோ!
வேலிவெட்டி வந்தெங்கள் வீட்டுக்குள் வம்புசெய்வோன்
காலைவெட்டிப் போடாமல் கைகட்டி நிற்போமா!

காளையரே! கன்னியரே! வாரும்: களமாடி
ஈழமண்ணை மீட்போம் இனிது!

பண்டிதர்: வீ. பரந்தாமன்

www.tamilarangam.net



# பொஸ்னியா சம(ர)தானம்?






கடந்த ஐந்து தசாப்தங்களில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகப் பெரியதும் சிக்கல் நிறைந்ததுமான போர், 250,000 உயிர்களைக் காவு கொண்டு, 2 மில்லியனுக்கும் மேற் பட்டோரை அகதிகளாக்கி, 1326 நாட்களின் பின்னர் 'ஒரு வாறக' ஓய்வுக்கு வந்துள்ளது. 1917, 1941 இற்குப் பின்னர் மீண்டும் அமெரிக்காவின் தலையீட்டின் மூலம் ஐரோப்பியச் சிக்கலொன்று தீர்க்கப்பட்டதானது, உலக அரசியலில் அமெரிக்காவின் மேலாண்மையை மீண்டும் நிரூபித்துள்ளது எனலாம்.

ஐரோப்பிய கூட்டுறவு நாடுகளின் சமாதான முயற்சிகளின் தோல்வியின் பின்னர், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் வோறன் கிறிஸ்ரோபர் அவர்கள், அவரது உதவியாளர் றிச்சாட் கோல்புறூக் அவர்கள் ஆகியோரின் தலைமையிலான அமெரிக்க மத்தியஸ்தக் குழுவினர், பொஸ்னியச் சிக்கலின் முக்கிய பகுதியினரைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்தனர். அமெரிக்க டேய்ரன் (DAYTON) பகுதியிலுள்ள ஒகையோ (OHIO ) நகரில் அமைந்துள்ள விமானப் படைத் தளத்தில் 21 நாட்கள் நடைபெற்ற தீவிரப் பேச்சுவார்த்தைகள், திரை மறைவு அழுத்தங்களின் பின்னர் கடந்த மாதம் 21ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தீர்வுத் திட்டம் கைச்சாத்திடப்படும் என்பது கடைசி நேரம் வரையில் சந்தேகமாகவே இருந்தது. பொஸ்னியச் சிக்கலின் முக்கிய பகுதியினராகிய பொஸ்னிய அரசு, சேர்பிய அரசு, குறேயேசிய அரசு ஆகியோரைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதில், அமெரிக்க அதிபர் பிள் கிளின்டன் அவர்களுக்கு இருந்த மிகுந்த ஈடுபாடு, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தது.

அதிகாரிகளின் கூற்றுப்படி, மூன்று பகுதியினரும் உடன்பாட்டிற்கு வரச் சிரமப்பட்டதை அடுத்து, அமெரிக்க அதிகாரிகள் தீர்வுத் திட்டத்தின் பிரதியொன்றை அவர்களுக்குக் காட்டினர். அதில் எல்லைப் பிரச்சனைகளுக்கு 'விட்டுக் கொடுப்பு' அடிப்படையில் தீர்வும் இருந்தது.

குறேயேசிய அதிபர் பிரான்யோ துச்மன் (FRANJO TUDMAN) அவர்கள், சேர்பிய அதிபர் சலோபடன் மிலோசவிச் (SLOBODAN MILOSEVIC) அவர்கள் ஆகியோர் அந்தத் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனராயினும், பொஸ்னிய அதிபர் அலியா இசபெகவிச் (ALIJA IZETBEGOVIC) அவர்கள் ஏற்க மறுத்து விட்டார். ஆனால் எல்லாப்பகுதியிலுமிருந்து வந்த அழுத்தம் காரணமாகவும் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் இறுதியில் அதை ஏற்றுக் கொண்டார். பொஸ்னிய அரசிலுள்ள பலர் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதில் மிகவும் கவலை அடைவார்கள் எனக் கருதப்படுகின்றது.

## 'ஒகையோ ஒப்பந்தம்"

ஒகையோவில் கைச்சாத்திடப்பட்ட இந்தத் தீர்வுத் திட்டத்தில் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளன.

(1) பொஸ்னியா தனது தற்போதைய எல்லைகளுடன் தனி நாடாகச் சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்படும்.

(2) பொஸ்னிய முஸ்லீம் -பொஸ்னிய குறேயேசிய கூட்டரசையும் (Federation) பொஸ்னிய சேர்பியர்களுக்கென ஒரு குடியரசையும் (Republic) கொண்ட நாடாகப் பொஸ்னியா அமையும்.

(3) சறயேவோ தொடர்ந்தும் ஒருமைப் பட்டிருக்கும் (united).

(4) சனாதிபதி ஒருவரையும், சட்டவாக்கச் சபையையும் (constitutional court) கொண்ட மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் மத்திய அரசொன்று அமையும்.

(5) அகதிகள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவார்கள்.

(6) மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரசையினதும் மனித உரிமைகள் பேணப்படுவது கண்காணிக்கப்படும்.

(7) போர்க்காலக் கொடுமைகளைப்(war crimes) புரிந்தவர்கள் அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்கள்.

(8) ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்தும் படையின் (Implementation force) திட்டமிடலை, நேட்டோ (NATO) எனப்படும் வட அத்திலாந்திக் உடன் படிக்கை அமைப்பு பூரணப்படுத்தும்.

(9) மனிதாபிமான உதவிகளையும், அகதிகளுக்கான தேவைகளையும் புனர்நிர்மாண வேலைகளையும் சர்வதேச செயற்திட்டம் வழங்கும்.





## எழும் சந்தேகங்கள்

மேற்குலகின் இராஜதந்திரிகள் இந்த ஒப்பந்தம் முழுமையானதும், தெளிவானதும், சகல தரப்பினரையும் உள்ளடக்கியதுமான ஒப்பந்தம் என்று கூறியபொழுதிலும், இந்த ஒப்பந்தத்தில் எழும் சந்தேகங்களைப் பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஒகையோ ஒப்பந்தத்தில் உள்ள பெரிய குறைபாடு என்னவென்றால்,

முதலாவது, ஒரு நாட்டிற்குள்ளேயே அதிகார பூர்வமாகப் பிரிக்கப்பட்ட ஒன்றிற்கொன்று எதிரான திசைகளில் செல்லும் இரண்டு ஆட்சி அலகுகள் இருப்பதைக் குறிப்பிடலாம்.

**இந்திரன்**

அதே வேளை, ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் ஆயுதத் தடையை விலக்கிக் கொள்வதானது, இந்தப் பிராந்தியத்தை மேலும் ஆயுத - இராணுவ மயப்படுத்துவதாகவே அமையும்.

இரண்டாவது, பொஸ்னிய சேர்பிய குடியரசிற்கும், பொஸ்னிய -குறேயேசிய கூட்டரசிற்கும் ஏறத்தாள தலா 50வீதம் ஆக நிலப்பங்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், சேர்பியர் இந்த நிலப்பங்கீடானது இயலுமானவரை தெளிவானதாக இருப்பதை உறுதி செய்வதோடு எதிர்காலத்தில் ஒப்பந்தத்தில் இருந்து விலகும் பட்சத்தில் தமது நிலப்பகுதியை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பையும் எதிர்பார்க்கலாம். அதே வேளை, பொஸ்னிய அரசோ நிலப்பங்கீடும், மக்களும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாக இருப்பதை வலியுறுத்துகின்றது. இது தொடர்பான தெளிவும் ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை.

பொஸ்னிய சேர்பியர், நூற்றுக்கணக்கில் பொஸ்னிய முஸ்லீம்களைக் கொன்று

தொடர்ச்சி மறுபக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



கைப்பற்றிய பொஸ்னிய சேர்பிய எல்லைகளு க்குள்ளிருக்கும் கிழக்குப் பகுதிகளான சிறபனிற்சா (Srebrenica), செபா (Zepa) ஆகிய முஸ்லீம்களின் பகுதிகளைத் தொடர்ந்து வைத்திருப்பர். இதை இந்த ஒப்பந்தம் மேலும் உறுதிப்படுத்தியிருக் கின்றது.

மூன்றாவது, முஸ்லீம்களின் இன்னுமொரு பகுதியான கொறஸ்ரே (Gorazde) சேர்பியரின் எல்லைக்குள் இருந்த போதிலும், தொடர்ந்தும் பொஸ்னிய அரசின் அதிகாரத்தின் கீழேயே இருக்கும்.

ஒப்பந்தத்தின் மூலம், அங்கீகரிக்கப்பட்ட சேர்பியப் பகுதிகளுடான தரை வழிப்பாதை சுயாதிபத்தியம்' (Territorial Intergrity) தொடர்ந்தும் அழுத்தங்களுக்கு உள்ளானதாகவே இருக்கும். அத்துடன், பொஸ்னியாவின் சேர்பியர், பெரிய சேர்பியாவுடன் இணைந்த முழு சேர்பியாவை உருவாக்குவதையும் பொஸ்னிய குறேயேசியர், பெரிய குறேயேசியாவுடன் இணைந்த முழு குறேயேசியாவை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இதுவும் எதிர்காலத்தில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம். இந்த முழு சேர்பியக் கனவின் ஒரு பகுதியாகத்தான், கொறஸ்ரே தவிர்ந்த ஏனைய டிறினா பள்ளத்தாக்குப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை, பொஸ்னியச் சேர்பியர் விரட்டியிருந்தனர்.



பொஸ்னியாவின் சேர்பியர், பெரிய சேர்பியாவுடன் இணைந்த முழு சேர்பியாவை உருவாக்குவதையும் பொஸ்னிய குறேயேசியர், பெரிய குறேயேசியாவுடன் இணைந்த முழு குறேயேசியாவை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இதுவும் எதிர்காலத்தில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம். இந்த முழு சேர்பியக் கனவின் ஒரு பகுதியாகத்தான், கொறஸ்ரே தவிர்ந்த ஏனைய டிறினா பள்ளத்தாக்குப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை, பொஸ்னியச் சேர்பியர் விரட்டியிருந்தனர்.

ஒன்றின் மூலம் கொறஸ்ரேயானது, சறயேவோ(Sarajevo) உடன் தொடுக்கப்பட்டிருக்கும். ஒப்பந்தத்திலிருந்து விலகும் பட்சத்தில் சேர்பியர் இந்த கொறஸ்ரே பகுதியை இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் கைப்பற்ற முனைவர்.

இன்னுமொரு சர்ச்சைக்குரிய பகுதியான பிர்கோ(Brcko) என்ற வட பொஸ்னிய நகரின் நிலை பற்றி, பின்னர் நடைபெறும் சர்வதேச மத்தியஸ்த்த பேச்சுவார்த்தையின் போதே தீர்மானிக்கப்படவுள்ளது.

நான்காவது, பொஸ்னிய அரசின் உறுதித்தன்மை இடம் பெயர்ந்துள்ள 2 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லீம் அகதிகளின் மீள்வருகையில் பெரிதும் தங்கியிருக்கின்றது. ஒகையோ ஒப்பந்தம், இந்த அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கான உரிமையை அளித்திருந்தாலும், இந்த அகதிகள் பாதுகாப்பாகத் தமது சொந்த இடங்களுக்கு அதுவும் அந்த இடங்கள், தம்மைக் கொடுமைப் படுத்தியவர்களின் கைகளிலேயே இருக்கும் போது, திரும்பிச் செல்வார்களா என்பது கேள்விக்குரியதாகவே இன்னும் உள்ளது.

ஐந்தாவது, பொஸ்னியாவின் சேர்பியர் வாழும் பகுதிகள் பெரிய சேர்பியாவின் எல்லைகளோடும், பொஸ்னியாவின் குறேயேசியர் வாழும் பகுதிகள் பெரிய குறேயேசியாவின் எல்லைகளோடும் உள்ளதால், பொஸ்னிய அரசின் 'பிராந்திய

ஆறாவது, பேச்சுவார்த்தையின் ஒரு சந்தர்ப்பத்தில் பொஸ்னிய அதிபர் இசபெகவிச் அவர்கள் தனது முஸ்லீம் இராணுவத்திற்கு, பொஸ்னியச் சேர்பியருக்கு இணையான இராணுவ ஆயுதங்கள் சலுகையாகத் தரப்படவேண்டும் என நிர்ப்பந்தித்தார். ஆனால் இதைத்தர மறுத்த அமெரிக்க அதிகாரிகள், தாம் தொடர்ந்தும் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கும், பயிற்சிகள் வழங்குவதற்கும் தயாராக இருப்பதாகக் கூறிவிட்டனர். ஆனால் நடு நிலையான சமாதான உத்தரவாதியாக இருந்து கொண்டு, போரிடும் ஒரு பகுதிக்கு ஆயுத விநியோகம் செய்வது என்பது ஒரு முரண்பாடான நடுநிலையற்ற விடயம் என ஐரோப்பிய நாடுகள் ஆட்சேபனை தெரிவிக்கின்றன.

ஏழாவது, ஒருமைப்பட்டதாக வைக்கப்படவிருக்கும் சறயேவோவில் வாழும் சேர்பியர், தாங்கள் பொஸ்னிய முஸ்லீம்களின் அரசை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கூறி வருகின்றனர். இதனால் சறயேவோவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதும் தெளிவின்றி இருக்கின்றது. யுத்தக் கொடுமைகள் புரிந்தவர்கள் என ஐ. நா. சபையின் யுத்தக் கொடுமைகள் விசாரணைக் குழுவினரால் கூறப்படும் பொஸ்னிய சேர்பியத் தலைவர் றடவன் கறட்சிச்சும் (Radavan Karadzic) இராணுவத் தலைவர் றட்கோ மிலாடிச்சும் (Ratko Mladic) பொஸ்னிய அரசியலில் எந்த விதமான பதவிகளும் வகிக்க முடியாது என ஒப்பந்தம் கூறுகிறது.

மிகுதி அடுத்த இதழில்.....

# பொஸ்னியாவில் நடந்தவை....

ஆனி 1991-

குறேயேசியாவும் சலொவேனியாவும் தனிநாடுகளாகத் தம்மைப் பிரகடனப் படுத்தியதையடுத்து, முன்னாள் யூகோசிலாவிய குடியரசுகளிடையே முறுகல் நிலை தோன்றுகின்றது.

தை 1992-

சலொவேனியாவின் தனி நாட்டுப் பிரகடனத்தை யூகோசிலாவிய இராணுவப் பலத்தால் முறியடிக்க முடியவில்லை. ஆனால், குறேயேசியாவில் குறேயேசியருக்கும், குறேயேசிய சேர்பியருக்குமிடையில் கடும் போர் வெடிக்கின்றது. இதனையடுத்து ஐநா ஏற்பாட்டில் போர் ஓய்வு தோன்ற, 14,000 ஐநா அமைதிப் படையினர் குறேயேசியாவில் போர் ஓய்வைக் கண்காணிக்கத் தொடங்குகின்றனர்.

பங்குனி 1992-

சிக்கலான இன வேறுபாட்டைக் கொண்ட பொஸ்னியாவில் போர் மூள்கின்றது. பொஸ்னிய சேர்பியர் புறக்கணிக்க, முஸ்லீம்களும் குறேயேசியரும் சுதந்திரத்திற்கான கருத்தறியும் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு தனி நாட்டுக்கென வாக்களிக்கின்றனர். ஐரோப்பிய கூட்டுறவு நாடுகளின் அமைப்பு பொஸ்னியாவை அங்கீகரிக்கின்றது.

சறயேவோவை முற்றுகையிட முனையும் பொஸ்னிய சேர்பியருக்கும் பொஸ்னிய அரசுக்குமிடையில் போர் மூள்கின்றது.

ஆவணி 1992-

ஐரோப்பிய கூட்டுறவு நாடுகள் அமைப்பினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் சமாதான முயற்சிகள் தோல்வியடைகின்றன.

பொஸ்னியாவில் முஸ்லீம்களுக்கும் குறேயேசியருக்குமிடையில் போர் வெடிக்கின்றது.

மாசி 1994-

சறயேவோவில் 68 பொது மக்கள், சேர்பியரின் எறிகணை வீச்சால் கொல்லப்பட, சர்வதேச நாடுகள் இதனைக் கண்டிக்க, சேர்பியர் தமது ஆயுதங்களைச் சறயேவோவிலிருந்து விலக்கிக் கொள்ளாவிடில் தாம் வான்வழித்தாக்குதலை நடத்தப் போவதாக நேட்டோ சேர்பியரை எச்சரிக்கின்றது.

பங்குனி 1994-

அமெரிக்காவின் முன்னெடுப்பில் முஸ்லீம்களுக்கும் குறேயேசியருக்கும் இடையில் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்படுகின்றது. இதன் மூலம் முஸ்லீம்களும் குறேயேசியரும் சேர்ந்து சேர்பியர் மீது தாக்குதல் நடாத்துவதற்கு வசதியாகின்றது.

26 வைகாசி 1995-

பொஸ்னிய சேர்பியர் சறயேவோ மீது தாக்குதல் நடாத்துகின்றனர். இதனால் நேட்டோ, பொஸ்னிய சேர்பியரின் நிலைகள் மீது வான் வழித்தாக்குதலைத் தொடுக்கின்றது. இதன் விளைவாக 350 ஐநா அமைதிப் படையினர் கைதிகளாகப் பிடிக்கப்படுகின்றனர்.

11 ஆடி 1995-

ஐநா வினால் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த சிறபனிசா (Srebrenica), பொஸ்னிய சேர்பியரால் கைப்பற்றப்படுகின்றது. இதன்போது, 6000 பொஸ்னிய முஸ்லீம்களை ஐநா படையினால் காப்பாற்ற முடியாமற் போனதற்கு அமைதிப் படையில் கடமையாற்றிய வீரர்கள் ஆயுத்தமில்லாமல் இருந்தமை காரணமென, அப்பகுதியில் கடமையாற்றிய டச்சுப் படையினர் ஒப்புக் கொள்கின்றனர். இந்த 6000 பொஸ்னிய முஸ்லீம்களிற் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. ஐநா வால் பிரகடனப்படுத்தப்பட்ட ஏனைய பாதுகாப்புப் பிரதேசங்களைச் சேர்பியர் தாக்கினால், தாம் கடுமையான வான்வழித் தாக்குதலை நடாத்தப்போவதாக நேட்டோ அறிவிக்கின்றது.

04 ஆவணி 1995-

சேர்பியர் கைப்பற்றி வைத்திருந்த கிறயினா மீது தாக்குதல் நடாத்திய குறேயேசியா, கிறயினாவைச் சில நாட்களில் கைப்பற்றுகின்றது. வடமேற்குப் பெஸ்னியாவில் 1500 சதுர மைல்களை முஸ்லீம்-குறேயேசியப் படைகள் தம்வசப்படுத்துகின்றன. ஆயிரக்கணக்கில் சேர்பியர் இடம் பெயர்கின்றனர். சேர்பியா இந்த நடவடிக்கைகள் ஒன்றிலும் தலையிடவில்லை. இந்தத் தாக்குதல்கள் மூலம் பொஸ்னியாவில் இனங்களுக்கிடையில் பௌதீகரீதியிலான நிலச் சமநிலை ஓரளவுக்குப் பேணப்படுகின்றது.

28 ஆவணி 1995-

சேர்பியர் ஏவிய ஏவுகணை வீழ்ந்து வெடித்ததில் சறயேவோவின் மத்திய அங்காடியில் 37 பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். இதனாற் பொஸ்னியச் சேர்பியரின் நிலைகள் மீது நேட்டோ மிகக் கடுமையான ஆட்லறி, விமானத் தாக்குதல்களை நிகழ்த்தியது.

13 புரட்டாதி 1995-

பொஸ்னியச் சேர்பியர் தமது கனரக ஆயுதங்களைச் சறயேவோவிலிருந்து அகற்றச் சம்மதிக்கின்றனர். நேட்டோ வான்வழித் தாககுதல்களை நிறுத்தியது. இதில் மிக நவீன வகை, 'லேசர்' கதிர்களால் வழிப்படுத்தப்பட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

05 ஐப்பசி 1995-

அமெரிக்க அதிபர் பிள் கிளின்டன், ஐப்பசி 10 ஆம் திகதி தொடக்கம் போர் ஓய்வு ஒன்றிற்கு, பொஸ்னியாவில் போரிடும் பகுதியினர் சம்மதித்துள்ளதாக அறிவித்தார்.

12 ஐப்பசி 1995-

நள்ளிரவு 12 மணி 1 நிமிடத்திலிருந்து போர் ஓய்வு நடைமுறைக்கு வருகின்றது.

21 கார்த்திகை 1995-

21 நாள் பேச்சு வார்த்தையின் பின் ஒகையோ ஒப்பந்தம் அமெரிக்காவில் கையெழுத்திடப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிறுகதை

# புன்னகையும் இன்னிசையும் ஒளித்துப் போயினவோ

-செ. யோகநாதன்-

உடம்பு எரிந்து கொண்டிருந்தது. வியர்வையைத் துடைத்தவாறே வெளியே வந்தாள் தங்கம். காலை எட்டு மணிக்கே இப்படியான வெப்பம்— இன்னமும் எரிச்சலாக இருந்தது. முற்றத்தின் இடது புறத்தில் கருகிப்போன புற்றரை. அந்த இடத்திலேதான் கிட்டத் தட்ட இருபது வயது நிறைந்த செழிப்பான வேப்பமரம் நின்றது. அம்மா, தானே வைத்து வளர்த்ததாகச் சொல்லிப் பெருமைப்பட்ட வேப்பமரத்தில் கரும் பச்சை இலைகள் அப்படிச் செறிந்து செழித்திருக்கும் பளபளக்கிற கபிலநிறக் கிளைகள். எந்தக் கொடிய வெய்யிலிலும் வாசற்புறத்தில் மட்டுமல்ல வீட்டின் உள்ளேயும், தண்ணீரை அளைந்து வருவது போன்ற குளிர்ச்சியான காற்றை அலையலையாய் பிரவகிக்கின்ற வேப்பமரம். எல்லாருக்கும் அன்பானதொரு நட்பாயிருந்த வேப்பமரம் அதன் கீழே பல தடவைகள் நாற்காலிகளைப் போட்டு கணேசன், அம்மா, தங்கம், தமிழ் ஆகிய எல்லோருமே பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள். பூக்கள் பூத்துவிட்டால் போதும், அம்மா வேப்பமரத்தின் கீழே பாயை விரித்து விடுவாள். எல்லாம் வேப்பம் பூ வடகம் செய்வதற்கான முன்னேற்பாடுதான்.

தமிழுக்கு மூன்று, நான்கு வயதிலேயே அந்த வேப்பமரத்தின் பழங்களில் மிகவும் பிரியம். உதட்டை அதக்கி அதக்கிப் பழங்களை மென்று தின்பாள்.

அந்த வேப்பமரம் எரிந்து கருகிச் சரிந்தபோது அவர்கள் எல்லோருமே தம்மை மறந்து அலறிவிட்டனர். ஒவ்வொரு முறையும் அந்தப் பகுதியில் குண்டு விழுமென்று அஞ்சி அவர்கள் எல்லோரும் அவர்கள் வீட்டுப் பதுங்கு குழியில் அடைக்கலம் புகுகின்ற வேளையிலெல்லாம், அந்த வேப்பமரத்திற்கும் என்ன ஆகுமோ என்று நெஞ்சு பதைபதைப்பார்கள். ஆபத்துநிலை தாண்டி வெளியே வந்ததும், வியர்வை கசியும் உடலுக்கு ஆதரவாக அவர்கள் போய்நிற்பது அந்த வேப்பமரத்தின் கீழேதான். வேப்பமரத்தின் காற்று அப்போது அவர்களைப் பரிவோடு வருடி, ஆறுதல்படுத்தி உற்சாகமூட்டுவதாக உணர்வார்கள். மனமே புத்துணர்ச்சியில் நனைந்து உயிர்ப்படையும், விம்மிதமுறும். நம்பிக்கை வலுப்பெறும். சற்றுமுன் முட்களால் ரத்தம் கசிந்த மனதில் பூக்கள்தான் படுத்திருக்கின்றனவென நினைக்கவைக்கும். இந்த முறை பெரிய பீப்பாக்களில் மோசமான அமிலங்களையும், கந்தகப் பொடிகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்கிச் செய்த குண்டுகளை நிறைத்து, பொம்மர் விமானங்களில் இருந்து மக்கள் நிறைந்திருந்த பகுதிகளின் மேல் வீசினார்கள். அந்தக் குரூரமான குண்டு வீச்சை, பாதுகாப்பு மந்திரியே விமானத்தில் இருந்து தொடங்கி வைத்ததாகப் பின்னர் பேச்சு அடிபட்டது. பத்திரிகைச் செய்திகள் அதை உறுதி செய்தன.

அப்படியே கிளைகளும், முதுகெலும்பும் முறிந்து எரிந்துகொண்டிருந்த வேப்பமரத்தைத் தண்ணீர் ஊற்றி அணைத்தார்கள். பக்கத்து வீட்டுக் கனகம்மா பெருமூச்சுடன்,"இந்த வேப்பமரந்தான் மக்காள் உங்களின் வீட்டைப் பாதுகாத்து காவாந்துபண்ணி வைச்சிருக்குது இல்லையென்றால்— "

வார்த்தையை முடிக்காமல் விம்மல் கனத்தது.

அந்த வேப்பமரம் அடிப்பாகத்திலிருந்து மீண்டும் வளருமென நினைத்தார்கள். ஆனால், 'அந்த இடத்தினில் சின்னஞ்சிறு புல்லுக்கூட முகங்காட்டவில்லை. நிலம் வெடித்துப் பொருக்கும், சாம்பல் நிறமுமாய் இப்போதே நெருப்புப் பற்றிய தரையாய் விரிந்தது. கொஞ்ச நாட்கள் மனம் சஞ்சலிக்காமல் அந்த இடத்திற்கு அம்மா நன்றாக நீர் வார்த்தாள். காலையிலும், மாலையிலும் நீரைச் செழிக்க செழிக்க வார்த்தாள். லேசாய்ப் பச்சை தெளித்து புல் அரும்பிற்று. மீண்டும் அந்தப் பச்சையெல்லாம் மெல்லக் கருகி எரிந்தாற்போலக் கருகத்தொடங்கின. அம்மா தனியே இருந்து கண்ணீர் சொரிவாள். மல்லிகையும், கனகாம்பரமும், செவ்வரத்தையும் நிறைந்திருந்த அந்த அழகிய பூ முற்றம், இப்போது சாம்பற் தரையாய் மாறத் தொடங்கிற்று. தென்னை மரங்களின் உச்சி கருகி, அவை மொட்டைத் தலைகளாயின.

அம்மா முன்பெல்லாம் கோயிலுக்குப் போயிருந்து அழுவாள். அப்போது தங்கத்தையும் கூட்டிச் செல்வாள். அப்போது தமிழும் அழுவாள். பத்து வயதுச் செல்லம். அவளுக்குத் தமது கண்ணீரைப் பற்றித் தெரிய வேண்டாமென்று நினைத்திருந்தாள்.

***

"என்ரை குஞ்சு சொன்னால் கேட்கவேணும். அண்ணனோடை இருந்து படிக்கவேணும். அதுவும் வழியில குண்டு ஏதாவது விழுந்தாலும்—"

"எனக்குக் கதை சொல்லவேணாம். அம்மாவும் நீங்களும் போறியள்தானே எனக்குக் குண்டுக்கும் பயமில்லை—ஒண்டுக்கும் பயமில்லை. நீங்க போங்க—போங்க—" தலையை ஆட்டிக்கொண்டு செல்லும் மகளை அள்ளித் தூக்கி முத்தம் கொடுப்பாள் அம்மா. தன்னை அணைக்க வரும் தாய் தங்கத்தைப் பார்த்து முகத்தைச் சுழித்துக் காட்டுவாள் தமிழ். தங்கம் அப்போதும் ஆசையோடு தமிழை அணைப்பாள். தமிழின் அப்பா செல்வன் அப்போது நினைவில் வருவான். மகளைப் போலத்தான் தகப்பனும். உள்ளே வந்து மறையும் கோபம். எப்படி இருந்தவன். தமிழ் பிறந்தபோது அவள் அருகேயே இருந்தவன். அவளுக்கு வைப்பதென்று எப்போதே அந்தப் பெயரைத் தீர்மானித்ததும் அவன்தான்.

கோயிலுக்குப் போகும் வழியில் வேலுப்பிள்ளையின் வீட்டுப் பக்கமாக ஆட்கள் ஓடுவதைக் கண்டாள் தங்கம்.

"அம்மா அங்கை பாருங்க என்னவோ கெட்ட காரியம் நடந்திருக்க வேணும். சனங்கள் ஓடுது—"

அம்மா சொன்னவாறே நடையைத் துரிதப்படுத்தினாள்.

"ஓம்மோனே, ஆரவோ மோசம்போயிருக்க வேணும்—"

வேலுப்பிள்ளையின் மனைவி தலைதலையாக அடித்து அலறிக் கொண்டிருந்தாள். "அக்கா— என்ரை செல்வம் போயிட்டுதனை—போயிட்டுது—மான் குட்டி மாதிரி இருந்த பிள்ளை. முழங்கால் மூட்டுவலி என்று சொல்லிச்சுது—பிறகு கால் வீங்கி—என்ரை கடவுளே—"

அவளின் மகள் கார்த்திகா தமிழின் வயது. சினேகிதி. தாடை, கன்னம் எல்லாம் வீங்கி, கசங்கிய பூங்கொத்தாய் பாயினில் உறங்குவதுபோல் கிடந்தாள்.

தாய் சொன்னது உண்மைதான். கார்த்திகா மான்குட்டிதான். அழகான சிறுமி.

செல்லத்தை அம்மா தேற்றினாள். அன்போடு வார்த்தைகளால் மனதைத் தொட்டு ஆறுதல்படுத்தினாள். கண்ணீரைத் துடைத்துவிட்டவாறே "என்னமாதிரி இந்த நோய் வந்தது?" என்றாள்.

செல்லம் மீண்டும் விம்மினாள்.

"அக்கா முதல்லை முழங்கால் மூட்டு வலிக்குதென்று சொன்னா. நாட்டு மருந்து கொடுத்தன். வலி நிக்கேல்லை. பிறகு கால் வீங்கி நடக்கமுடியாமல் நின்றா. அடுத்த நாளே முகமெல்லாம் வீங்கிப் போச்சுது. டொக்டரிட்டைக் கொண்டு ஓடினன். அவர் தடுமாறிப் போனார். என்னட்டை இதுக்குத் தர மருந்தில்லை என்று ஏதோ மருந்து கொடுத்தார். பிறகு அவ சோர்ந்து படுக்கத் தொடங்கி— என்ரை அக்கா — என்ரை பிள்ளை என்னை விட்டுப் போயிட்டுதணை—"

செல்லம் தலைதலையாக அடித்துக் கொண்டே கதறினாள். தங்கம் விம்மி விம்மி அழுதாள்.

ஞானேஸ்வரி அந்த இரவு நேரத்தில் வீட்டுக் கதவைத் தட்டியதைக் கேட்டு அம்மாவின் மனம் பதை பதைத்தது. ஆனால், தனது பதற்றத்தைக் கொஞ்சமும் காட்டிக்கொள்ளாமல் அவளை உள்ளே அழைத்து வந்தாள்.

"என்ன பிள்ளை — என்ன விஷயம்?"

கேட்டு முடிக்கவில்லை அம்மா. ஞானேஸ்வரி சட்டென்று அம்மாவைக் கட்டிக் கொண்டு தீனமாக அழத்தொடங்கினாள்.

"என்னராசா— என்னெண்டு சொல்லடா—" விம்மல் சிதறி உதிர்ந்தது.

"அக்கா கமலத்துக்குச் சுகமில்லை. எந்த மருந்துக்கும் கேட்குதில்லை. சோர்ந்து சோர்ந்து படுக்கிறதைப் பார்த்தால் பயமாயிருக்கு—"

"டொக்டர் என்ன சொன்னவர்—?"

செப்டிசேமியா என்ற நோயாம்—அதுக்கு இங்கை சரியான மருந்தே இல்லையாம். அதோடை மருந்துவகையைக் கூட அரசாங்கம் தடை செய்திருக்கிறதாலே என்ன செய்யிறதெண்டு அவர் குழம்பிப்போயிருக்கிறார். எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை—"

தங்கம் அப்போது அங்கே வந்தாள்.

"என்ன அக்கா—என்னது—!"

கமலத்துக்குச் சுகமில்லையாம்"

தங்கம் சுற்று முற்றும் பார்த்தாள். பின்னர் மெல்லிய குரலில்,"கமலமும் தமிழும் சினேகிதிகள். கமலத்துக்குச் சுகமில்லை எண்டு தெரிஞ்சால் தமிழ் அங்கை வரவேணுமெண்டு நிற்பாள்—" என்றுவிட்டு,"கமலாவுக்கு என்ன சுகமில்லை?" எனக் கேட்டாள்.

'செப்டிசேமியாவாம்'

"அப்பிடி என்றால்"

"செல்லத்தின்ரை மகள் கார்த்திகாவுக்கு வந்தது"

"ஐயோ—கடவுளே—"

**"நீ பதினாலு வயசுச் சிறுவன். உனக்கு ஏன் இப்ப இந்தக் கதைகள்—" கண்ணன் புன்னகை செய்தான். "வயசிலை என்னம்மா இருக்கு. எங்களின்ரை சனமெல்லாம் அநியாயமாகச் சாகுது. தன்னுடைய மக்க்ளையே குண்டு போட்டு அழிச்சு, அவர்களின்ரை கட்டிடங்களைத் தரைமட்டமாக்கிக் கொண்டிருக்கிற அரசாங்கம், உலகத்திலை வேறெங்கையுமே இல்லை என்று எங்களின்ரை மாஸ்ரர் சொன்னவர்—"**

**தங்கம் திகைத்துப் போனாள். அவளையறியாத அச்சம் மனதினுள் திரண்டது.**

**செல்வம் புன்னகையோடு எதிரே வந்தான். தகப்பனைப்போலவேதான் மகனும் பேசுகிறான். அதே அழுத்தமான வார்த்தைகள்.**

தொடர்ச்சி மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புன்னகையும்....

தங்கம் தன்னையறியாமலே தலையிலடித்துக்கொண்டே அழத்தொடங்கினாள்.
தமிழுக்குத் தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள் தங்கம். தமிழ் ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தாள். செல்வமும் அப்படித்தான். தன்னை மறந்துபோனவன் போல யோசனையில் ஆழ்ந்து போயிருப்பான். திடீரென்று சுயநினைவுக்குத் திரும்பி ஏதாவது கேள்வி கேட்பான். கணேசனிலும் அதே குணம் அப்படியே இருந்தது. இரண்டு நாட்களின் முன்னர் கணேசன் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மௌனமாயிருந்தவன் மெல்லத் தலை நிமிர்த்தி தங்கத்தைப் பார்த்தான்.
'அம்மா'
'என்ன ராசா'
'நாங்க எல்லாரும் எந்தக் காலத்தில ஒன்றாக இருக்கப்போறம்.. அப்பா நாங்க எல்லாம்..'
தங்கம் மனதை மறைத்துப் புன்னகை செய்தாள்.
'கொஞ்ச நாளைக்குப் பொறு.'
'அவங்கள் குண்டாய்ப் போட்டுத் தள்ளுறாங்கள். அநியாயத்துக்கு எங்களின்ரை சனமெல்லாம் சாகுது.'
'அது கொஞ்ச நாளைக்குத்தான்..' தங்கம் சமாளித்தாள்.
'நீ பதினாலு வயசுச் சிறுவன். உனக்கு ஏன் இப்ப இந்தக் கதைகள்.'
கண்ணன் புன்னகை செய்தான். 'வயசிலை என்னம்மா இருக்கு. எங்களின்ரை சனமெல்லாம் அநியாயமாகச் சாகுது. தன்னுடைய மக்களையே குண்டு போட்டு அழிச்சு, அவர்களின்ரை கட்டிடங்களைத் தரைமட்டமாக்கிக் கொண்டிருக்கிற அரசாங்கம், உலகத்திலை வேறெங்கையுமே இல்லை என்று எங்களின்ரை மாஸ்ரர் சொன்னவர்.'
தங்கம் திகைத்துப் போனாள். அவளையறியாத அச்சம் மனதினுள் திரண்டது.
செல்வம் புன்னகையோடு எதிரே வந்தான்.
தகப்பனைப்போலவேதான் மகனும் பேசுகிறான். அதே அழுத்தமான வார்த்தைகள்.
'அம்மா..' என்ற தமிழின் வார்த்தைகள் தங்கத்தின் சிந்தனையைக் குலைத்தன. புன்னகையை வருவித்துக்கொண்டே,'என்னடா' என்றாள்.
'என்ன யோசனை?'
'ஒன்றுமில்லை..'
'அப்ப சரி' என்ற தமிழ், தயக்கமான குரலில், சட்டென்று கேட்டாள்.
'அம்மா நான் இல்லையென்றால் நீங்கள் என்னம்மா செய்வியள்?'
பளீரென்று தீச்சட்டியொன்று தன்னில் கவிழ்ந்தாற்போல அதிர்ந்து சிலிர்த்தாள் தங்கம். தமிழின் தலையை முன்னே கோபத்தில் தள்ளிவிட்டு அதே வேகத்தில் அவளை மார்போடு அள்ளி இறுக அணைத்துக் கொண்டாள். பொலபொலவென்று கண்ணீர் சொரிந்தது. உடல் நடுங்கிற்று. அழுகை விம்மலாய்ப் பெருகி அவளைக் கரைத்தது. குரல் உடைந்து தவித்தது.
'எதுக்கடா அப்படிச் சொல்லுறாய்..'
தாயின் கண்ணீரைத் துடைத்தாள் தமிழ்.
'அம்மா, என்ரை ஆறு சிநேகிதிகளும் செத்துப் போய்விட்டினம். ஒவ்வொரு இரவிலையும் கமலாவும் சரஸ்வதியும், கார்த்திகாவும், அன்பும், கலைவாணியும் என்னை வந்து கூப்பிடுறாங்க. தாமரையும் தனக்கு அப்படிக் கனவு வாறதா நேற்றுச் சொன்னவ.'
தங்கம் தமிழை இன்னும் இறுகக் கட்டிக்கொண்டாள். அப்போது தமிழின் நெஞ்சு படபடவென அடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள். பிறகு அவளின் நெஞ்சிலே கைவைத்துப் பார்த்தாள்.
'என்னம்மா பார்க்கிறியள்?'
'ஏன் நெஞ்சு இப்பிடி அடிக்குது?'
'என்னவோ தெரியேல்ல, கொஞ்ச நாளா அப்படிஅடிக்குது. ஆனால் அதாலை ஒரு கஸ்டமுமில்லை. சரிசரி நீங்க அதைப்பற்றி யோசிக்கிறதை விட்டிட்டு, பின்னலைப் பின்னிவிடுங்க..'
தாயின் கன்னத்தில் ஆசையோடு கொஞ்சினாள் தமிழ். பிறகு தங்கத்தின் கையைத் தூக்கி தனது தலை முடியில் வைத்தாள்.
தமிழ் அமைதியாக உறங்குபவள் போல இறந்து கிடந்தாள்.
வெளியே வேப்பமரம் எரிந்து, புற்கள் கருகினாற்போல சாம்பல் பூத்திருந்த தரையில் டொக்டர் உட்படப் பலர் உட்கார்ந்திருந்தனர்.
'செப்டிசேமியா வியாதிதான் இந்தக் குழந்தையையும் அள்ளிக் கொண்டு போயிட்டுது. குண்டு வீச்சுக்கள்தான் காரணம். இன்னும் என்னென்ன துன்பம் நேரப்போகுதோ?'
வேதனையுடன் சொன்னார் டொக்டர். கண்கள் கலங்கின.
பின்னால் இருந்த இளைஞன் ஒருவன் முன்னே வந்தான். படுத்திருந்த தமிழின் அருகே வந்தான். அவளையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு அம்மாவின் அருகே சென்றான். கண்கள் கலங்கி இருந்தன.
அம்மாவும் தங்கமும் அவனையே உற்றுப் பார்த்தனர். மெல்ல மெல்ல உருவம் தெளிவாயிற்று-செல்வனின் நண்பன் தொய்ந்து போயிருந்த கண்ணன். அவனருகே வந்தான். அவனையே உற்றுப் பார்த்தான். திடீரென்று அவனது கைகளைப் பிடித்து உலுப்பினான்.
'ஏன் மாமா இப்பிடி! ஏன் இப்பிடிக் குண்டு விழ வேண்டும்! எங்களின்ரை நிலம், உயிரெல்லாம் ஏன் எரிய வேண்டும்! சொல்லுங்கோ' தங்கம் அவனைப் பரிவோடு தொட்டாள். 'ஐயா பொறுங்க.. பொறுங்க.'
'அம்மா ஏன் நாங்க இப்பிடி இருக்க வேணும்.. எனக்குத் தெரியும் அம்மா..அப்பா சண்டை பிடிச்சு வீரமரணம் அடைஞ்சது தெரியும். அப்பாவைப் போல நானும் வரவேணும் நானும் தங்கைச்சியைப் போல இன்னும் பலர் சாகாமல் இருக்க நானும் ஏதாவது செய்ய வேணும்.'
எல்லாரும் உறைந்து போய் நின்றனர். மௌனம் அங்கே திரைவிரித்து செறிந்தது.
'சொல்லுங்கோ அம்மா நான் சொல்லுறது சரியென்று சொல்லுங்கோ, என்னைப் போகச் சொல்லுங்கோ..சொல்லுங்கோ..'
அம்மா அவனருகே வந்தாள். பரிவோடும் வாஞ்சையோடும் அவனது தோளைத் தொட்டாள். தங்கம் கண்ணீரைத்துடைத்துக் கொண்டு கண்ணனைப் பார்த்தாள். ஏழு வருஷங்களின் முன்னே செல்வமும் இதேபோலத்தான். ஆனால் பதற்றமின்றி தங்கத்திடம் விடைபெற்றுச் சென்றான். நேற்று இரவு, தமிழும் செல்வனைப்போலவேதான் பதற்றமின்றி, 'அம்மா நான் சாகப் போகிறேன்' என்றாள். தகப்பனைப் போல பிள்ளைகள் மட்டுமல்ல, தானும் அப்படியே இருக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டாள் தங்கம் அந்த வேளையில்.

# சுவிஸ் பாராளுமன்ற முன்றலில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

11.11.1995 அன்று சுவிஸ்நாட்டின் தலைநகரான பேர்ண் மாநகரில் அமைந்துள்ள சுவிஸ்நாட்டின் பாராளுமன்ற முன்றலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்கு கலந்து கொள்வதற்காக நகரத்தின் மையத்திலிருந்து சுவிஸ் நாடு தழுவிய பல நகரங்களிலிருந்தும் வந்து குவிந்திருந்த பல ஆயிரம் தமிழீழ மக்களால் நிரம்பிய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி சரியாக பிப3.30 மணிக்கு நகரத் தொடங்கியது. பேரணியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், மதத்தலைவர்கள், மற்றும் சுவிஸ் பிரசைகள், பத்திரிகையாளர்கள், உட்பட சுவிஸ் நாட்டின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்ரீனா கோல் கலந்து கொண்டார். இத்துடன் சுவிஸ் நாட்டில் இயங்கி வரும் வெவ்வேறு சுவிஸ் கழகங்களும், சங்கங்களும், மதச் சங்கங்களும் பங்கு கொண்டன. ஊர்வலத்தின் முன்னே சுமார் 25மீற்றர் நீளமான அறிவிப்பு பதாகை மகளிர் அணியால் தாங்கிச் செல்லப் பட்டது. அதில் 'சிறீலங்கா ராணுவமே தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறு' என்னும் வாசகம் யேர்மன் மொழியில் பெரிய எழுத்தில் எழுதப் பட்டிருந்தது. இந்த ஊர்வலமானது மூன்று முக்கியமான கோரிக்கைகளை உள்ளடக்கியிருந்தது. அவையாவன.

1)தமிழீழ மண்ணிலிருந்து சிறீலங்கா ராணுவம் வெளியேற வேண்டும்

2)தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் ஈழ மக்களின் விடுதலை இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும்.

3)தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் ஓர் நீதியான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.

ஊர்வலம் மெதுவாக நகரத் தொடங்கியதும், அங்கு எழுப்பப்பட்ட கோசங்களில் பேர்ண் மாநகரமே அதிரத் தொடங்கியது. ஊர்வலத்தின் நடுவே ஒலிபெருக்கி மூலமும் கோசங்கள் எழுப்பப்பட்டது. சுவிஸ் நாட்டின் தேசிய ஒளிபரப்பு நிலைய படப்பிடிப்பாளர் உட்பட பல எமது தமிழ் படப்பிடிப்பாளர்களும் மிகவும் ஆர்வத்துடன் அந்த சரித்திர நிகழ்வைத் தமது படக்கருவிக்குள் முடக்கிவிட்டுக் கொண்டிருந்தனர். எங்கள் தலைவர் பிரபாகரன், எமக்கு வேண்டும் தமிழீழம், போன்ற கோசங்கள் தெருமருங்கிலுள்ள சுவர்களில் மோதி எதி-ரொலித்தன. அதுமட்டுமல்லாமல் பட்டொளி வீசிப் பறந்த பெரிய, சிறிய அளவிலான நூற்றுக்கணக்கான தமிழீழத் தேசியக் கொடிகளும் அந்த ஊர்வலத்திற்கு ஓர் மெருகைக் கொடுத்தது. இப்படியாக நகர்ந்த ஆர்ப்பாட்டப்பேரணி ஏறக்குறைய 40 நிமிடமளவில் சுவிஸ் பாராளுமன்ற முன்றலில் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இடத்திற்கு வந்தடையத் தொடங்கியது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களனைவரும் வரிசைக்கிரமமாக அந்த இடத்திற்கு வந்தடைய அண்ணளவாக அரைமணி நேரமாகியது. இதன்பின் அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் கூட்டம் ஆரம்பமாகியது. இதில் முதலாவதாக பேசிய பிரபல யேர்மன் மொழிப் பத்திரிகையாளரும், சுவிஸ் வாழ் தமிழர்களின் நன்மதிப்பைப் பெற்றவருமான திரு. எரிக் ஸ்மிட் உரையாற்றினார். அவர் தனது உரையில் சுமார் 86ம் ஆண்டு முதல் சிறீலங்கா அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்திவரும் இராணுவப் பேரினவாதப் போக்குகளையும் நடவடிக்கைகளையும், அதன்பின் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பற்றியும், இதே பாணியில்தான் சந்திரிக்கா அரசும் தமிழ் மக்களுக்கெதிரான ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றார் என்றும், நிச்சயமாக தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை தோற்றுப் போகாது என்றும், வலியுறுத்திப் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய சுவிஸ் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. அன்ரன் பொன்ராஜா, 'இன்று தமிழர் நாம் ஒன்றாகி விட்டோம். இங்கு எமது ஒற்றுமையையும், மற்றைய இனங்களுடனான ஒற்றுமையையும் இங்கு வெளிப்படுத்தி நிற்கின்றோம்' என்றார். அத்துடன் சுவிஸ் நாட்டின் அதிபருக்கு ஓர் மனு தற்போது வழங்கவுள்ளோம் எனவும் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து இந்த ஊர்வலத்திற்குரிய அனுமதிகளையும், ஒழுங்குகளையும் ஒருங்கிணைத்த சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெண்மணி திருமதி. பிரிகிற் சுப்ரமணியம் பிரெஞ்சு மொழியில் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு சுவிஸ் பெண் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ்ரீனா கோல் உரையாற்றினார். அவர் தனது உரையில் சிறீலங்காவிலே ஒரு நீதியான முறையில் ஓர் தீர்வைக் கொண்டு வருவதற்கு நாம் அரசியல்ரீதியாகவும் மற்றும் பல வழிகளிலும் சுவிஸ் அரசை சிறீலங்கா அரசை ஓர் நெருக்குவாரத்திற்கு கொண்டுவர நிர்ப்பந்திப்போம் என்றார். அத்தோடு தமிழ் அகதிகளை நாடு கடத்தும் சுவிஸ் அரசின் நடவடிக்கையையும் இவ்வூர்வலமூலம் கண்டிப்போம் என்றார். அதனைத் தொடர்ந்து ஜேர்மனியில் இருந்து வருகை தந்த விராஜ் மெண்டிஸ் உரையாற்றுகையில், சிங்கள இனவாதப் பத்திரிகைகளில் சில தற்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கத் தொடங்கியுள்ளன என்றும் அதற்கு உதாரணமாக 'கிரு' என்னும் சிங்களப் பத்திரிகையொன்றையும் மேற்கோள் காட்டியும் சிங்கள இனவாதப் போக்கையும் கண்டித்தார். கூட்டத்தை ஒழுங்கு செய்து தந்திருந்த மற்றுமொரு கிறிஸ்தவ தேவாலய பிரமுகர் மைக்கேல் டெய்லர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு ந. முரளிதரன் அவர்கள் உரையாற்றுகையில் 'தமிழர்களுடைய பிரச்சினை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் மூலமே தீர்த்து வைக்கலாம். ஏனெனில் தமிழர்களுடைய முழு தேசிய இனப்பிரச்சினையையும் நன்கு உணர்ந்தவர்களாகவும், அதற்காகப் போராடும் ஒரே இயக்கமாகவும் அது பரிணமித்து நிற்கின்றது. இதைத்தான் இன்றைய 7000க்கு மேற்பட்ட தமிழர்கள் ஒன்றுகூடி புலிக்கொடியின் கீழ் நிற்பது சுட்டி நிற்கின்றது என்றார். கூட்ட முடிவில் கலந்து கொண்ட பல்லாயிரம் ஈழத்தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து உரத்த குரலில் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற பாடலை பாடி மண்ணிற்கும், விண்ணிற்கும் சுவிஸ் நாடாளுமன்றத்திற்கும் தமது தேசிய எழுச்சியைப் பறைசாற்றினர். இந்தப் பாடலின் முடிவுடன் அன்றைய கூட்டமும் முடிவுபெற்றது.

## 33 ஆயிரம் குடும்பங்கள் பராமரிப்பு

பளைப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 33,000 குடும்பத்தைச் சேர்ந்த 1,30,000 மக்களைச் சுமார் 25 இலட்ச ரூபா செலவில் பராமரித்து வருகின்றனர்.

மேலும் இவ்விடத்தில் 42 மலசல கூடங்கள் 16 நலனோம்பு நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலிக கொட்டகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான பொருட்களை சிறுவர் பாதுகாப்பு நிதியமும் தமிழர் புனர் வாழ்வுக்கழகமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் வழங்கியுள்ளன.

இதேவேளை சுகாதார பரிசோதகர்கட்கு பற்றாக்குறை நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரேயொருவர் மட்டுமே பணியாற்றுகின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானியாவில் எழுச்சிமிகு மாவீரர் நாள் நிகழ்ச்சிகள்





பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களால், இலண்டனில் கார்த்திகை மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் மாவீரர் நாள் மிகவும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

25-11-95 அன்று தென்கிழக்கு இலண்டனில் நடைபெற்ற நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் திரு. சாந்தன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைக்க, தமிழீழ மக்கள் காவிய நாயகர்களான மாவீரர்கட்கு விளக்கேற்றி, மலர்தூவி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து, "தியாகத்தின் வித்தில் விளையும் தமிழீழம்" பற்றி திரு. சிவச்சந்திரன் அவர்கள் திருக்குறள் உதாரணங்களுடன் உரையாற்றினார். தொடர்ந்து 'லூசியம்' தமிழ்ப் பாடசாலை மாணவர்களால் பாட்டும் பரதமும் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது.

சிறப்புப் பேச்சாளரான, தமிழகத்தில் இருந்து வருகை தந்த அருள் தந்தை அ. சேவியர் அருளரசு அவர்கள், "எமது தேசியத்தலைவர் அவர்களது தீர்க்க தரிசனமான நடவடிக்கைகளையும், களத்தில் விழுப்புண் பெற்று தமிழ்நாடு கொண்டு சென்று சிகிச்சையளித்துப்





பலன்தராமல் தலைவர் மடியில் உயிர்நீத்த முதல் மாவீரன் சங்கர் நினைவு நாள்தான் மாவீரர்நாள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதையும் மிகவும் உணர்ச்சிவயப்பட்டவராக எடுத்துக் கூறி, உலகில் வாழுகின்ற எட்டுக் கோடித் தமிழ் மக்களும் தமிழீழத்தையும், நமது தேசியத் தலைவரையும் அங்கீகரித்து விட்டார்கள். உலக நாடுகளின் அங்கீகாரம் பெறுவதற்கு அனைத்து வழிமுறைகளையும் கையாள வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். கரகோசத்துக்கு மத்தியில், "தமிழ் நாடும் உறங்காது, தமிழக மக்கள் தக்கவேளையில் துணையிருப்பார்கள்" என்று கூறி நீண்ட சொற்பொழிவாற்றினார்.

26-11-95 அன்று மேற்கு இலண்டனில் நடைபெற்ற நிகழ்வில் மாவீரன் அன்பன் மாஸ்ரர் (முருகராஜா சிறீதர்) அவர்களின் தாயார் திருமதி. குமுதா முருகராஜா அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றியும், மாவீரர் சுது (சதானந்தன் நிர்மலநாத்) அவர்களின் தாயார் திருமதி. ரமணி சதானந்தன் அவர்கள் ஈகைச் சுடரேற்றியும் விழாவினைத் தொடக்கி வைத்தார்கள்.



அதனைத் தொடர்ந்து, புலம் பெயர்ந்து வாழும் எமது மக்கள் காவிய நாயகர்களின் சமாதிக்கு மலர் தூவியும் விளக்கேற்றியும் வணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சிகளில் தமிழீழ வாழ்த்துப்பா, சொற்பொழிவுகளைத் தொடர்ந்து மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவிகள், பிறன்ற் ஆசிய கலைக்கூட தமிழ்ப் பிரிவு மாணவிகள், நவரத்தினாலயா மாணவிகள் நாட்டிய நடன நிகழ்ச்சிகளை வழங்கினர்.

இடைவேளையின் முன்னதாக தேர்ந்தெடுக்கப்பட்ட விடுதலைப்பாடல்களை வாத்திய இசை வடிவத்தில் அமைத்த தாயக மண்ணின் காற்று என்ற இசைத்தட்டு, கலை பண்பாட்டுக் கழகத்தால் (பிரித்தானியக் கிளை) வெளியிடப்பட்டது.

சப்தஸ்வரா இசைக்குழுவினரால் சில விடுதலைப் பாடல்கள் பாடப்பட்டன. இசையமைப்பில் ஏற்பட்ட தடங்கல் பாடல்களின் உணர்வு வெளிப்பாட்டுக்கும் தடங்கலாக அமைந்து விட்டது.



அனைவரையும் சிந்திக்க வைத்த 'வரலாற்று அத்தியாயம் தொடரும்' என்ற கவிதா நிகழ்வு ஓர் நாடகவடிவில் திரு. ஞானவேல் அவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டது. இந்நாடகத்தில் சந்திரிகா என்ற பாத்திரத்தை ஏற்று நடித்தவர், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் பொய் முகத்தைத் தோலுரித்துக் காட்டி, பெரும் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எமது தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் தினச் செய்தி, ஒலிநாடாவில் ஒலிபரப்பப்பட்டபோது, அனைவரும் அமைதியாக உன்னிப்பாகச் செவிமடுத்தனர். அச்செய்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் புதிய அத்தியாயத்தையும், அதன் பரிணாம வளர்ச்சியையும், தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியது.

இரண்டு நாள் மாவீரர் நிகழ்வுகளும், தேசியக்கொடி இறக்கலுடன் நிறைவு பெற்றன.

---

தமிழர் கலை, பண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை நடாத்தும்

## கேணல் கிட்டு நினைவுப்போட்டி 1996

**தமிழர் கலை, பண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை வருடாவருடம் நடாத்திவரும் கேணல் கிட்டு நினைவுப் போட்டிகளின் 1996 ம் ஆண்டிற்கான போட்டியை நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச்**

### ஓவியப் போட்டிக்கான விதிகள்

- *போட்டியில் பங்குபற்றுவோர் ஓவியங்களை வரைந்து வரையப்பட்ட ஓவியத்தின் பின்பக்கத்தில் கையொப்பமிட்டு, பெயரையும் முகவரியையும் குறித்து, விண்ணப்பத்துடன் இணைத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 10.01.1996 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்கள் பின்னொரு நாளில் ஓவிய இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.*
- *ஓவியங்கள் போட்டியாளரின் சுதந்திரமான, சுயமான கற்பனையில் வரையப்படல் வேண்டும்.*
- *கீழ்ப்பிரிவினரும், நடுப்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 21 செ.மீ X 30 செ.மீ. பயன்படுத்தக்கூடிய வர்ணம் :*

| | |
|---|---|
| வர்ணக்கட்டி (Farbkreide) | மெழுகுவர்ணம் (Wachsmalstift) |
| வர்ணஎழுதி (Buntstift) | வர்ணஇழைத்தடி (Filzstift) |
| வரைவுவர்ணம் (Tuschfarbe) | நீர்வர்ணம் (Wasserfarbe) |

- *மேற்பிரிவினரும் அதிமேற்பிரிவினரும் வரையவேண்டிய ஓவியத்தின் அளவு 30 செ.மீ X 42 செ.மீ. பயன்படுத்தக்கூடிய வர்ணம்: நீர்வர்ணம்* (Wasserfarbe) *மட்டுமே.*
- *ஓவியத்திற்கான தலைப்பு -*

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | :- போட்டியாளரின் விருப்பத்திற்கமைய தலைப்பிடலாம் |
| நடுப்பிரிவு | :- பாட்டியின் கடிதத்தில் பார்த்த காட்சி. |
| மேற்பிரிவு | :- உதவுங்கரங்கள். |
| அதிமேற்பிரிவு | :- சிறகுகள் மீண்டும் முளைக்கும் - குருவிகள் கூடு திரும்பும். |

- *பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்*
- *பிரிவுகளுக்கான வயதெல்லை :-*

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | :- 01.01.1986 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள். |
| நடுப்பிரிவு | :- 31.12.1980 ற்கும் 01.01.1986 ற்கும் இடையிற் பிறந்தவர்கள். |
| மேற்பிரிவு | :- 31.12.1976 ற்கும் 01.01.1981 ற்கும் இடையிற் பிறந்தவர்கள். |
| அதிமேற்பிரிவு | :- 31.12.1976 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள். |

- *விண்ணப்பஞ் செய்வதற்கான இறுதிநாள் -* **10.01.1996**
- *விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி*

Kulturelle Organaization der Tamilen e.V.
Postfach: 1160 37441 Bad Sachsa

**தமிழர் கலைபண்பாட்டுக் கழகம், யேர்மனிக்கிளை.**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழி திறந்து கொள்வீர் விரைவில் வீடு திரும்பலாம்.

நேற்றுவரை உங்கள் வாழ்விருந்த கோலம் அழகானது.
உங்கள் கையளைந்த மண் கனகத்துகள்.
வானம் தொட நிமிர்ந்த வாழ்வுக்கு அதிபதிகளாக
நீங்கள் இருந்தீர்கள்.
கோயிற் கோபுரமாய் ஒரு புனிதமும்,
கோழியும் குஞ்சுகளுமாய் ஒரு உறவும்,
ஒன்றாய் இணைந்த வாழ்வுக்கு உருத்துடையவரானவர்.
அதிற் சுகமிருந்தது.
ஆனால்.... சுதந்திரம் இருக்கவில்லை.
நீங்கள் எடுத்துவைத்த ஒவ்வொரு அடிக்குள்ளும்
ஈகம் இதழ் விரித்துள்ளது.
நாளைக்கான வாழ்வுக்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளது.
அவலத்தை எண்ணி கண்ணிமைகள்
கரையுடைக்க வேண்டாம்.
நெஞ்சுக்கூடுகள் உலர்ந்து போக வேண்டாம்.
என்ன செய்வது ?
சுதந்திரம் சும்மா வருவதில்லையே...!
நீங்கள் விடுதலைக்குக் கொடுக்கும் விலையிது.
சோதனைப்பட்டுத் தொட்டாற் சுருங்கியாகக் கூடாது.
துணிவுடன் தீக்குளிக்க வேண்டும்.
நேற்றிரவு செம்மணித் தெருவிலும்,
நாவற்குழிப் பாலத்திலும் நடந்து வந்தவர்களே!
உங்கள் பாதங்களைப் பன்னீராற் கழுவி
அந்திமந்தாரப் பூவினால் அர்ச்சிக்க வேண்டும்.
வரிசையாக உட்கார வைத்து,
வலம் வந்து கால்களுக்குக் கற்பூரம் காட்ட வேண்டும்.

நேற்றிரவு நடந்து வந்த பேறுகாலத் தாயாரே!
பாயிற் கிடந்த பாரிசவாதத் தந்தையை,
தோளிற் சுமந்து வந்த சொந்தங்களே!
தொப்புள் கொடியறுத்து மூன்றுமணி கூட ஆகாத,
பிஞ்சுப் பொதிகளைத் தூக்கி வந்த தங்கைகளே!
உங்களை எப்படி வார்த்தைகளில் வைக்க முடியும் ?
ஆசையாக வளர்த்த ஆட்டை, முற்றத்துப் பூமரங்களை
கட்டிய வீட்டை, கண்ணாடி மேசையை
குத்து விளக்கை, குங்குமச் சிமிழை
எல்லாம் துறந்து வரும் போது
என்ன வேதனைப் பட்டிருப்பீர் என்பது தெரியும்.
பட்டதுயர் நாளை, பஞ்சாய்ப் பறந்துவிடும்.
எம் ஊர் புகுந்த எதிரி எரிவான்,
நாங்கள் விரைவில் வீடு திரும்புவோம்.
கலங்க வேண்டாம் கண்மணிகளே!
தலைவன் இருக்கிறான்.
தானை நடத்தும் தளபதிகள் இருக்கின்றார்கள்.
காற்றாய்ப் பறக்கும் கரும்புலிகளும்,
உங்கள் போராளிப்பிள்ளைகளும் இருக்கிறார்கள்.
இன்னும் கொஞ்சம் பாரம் தூக்குங்கள்,
குடும்பத்திலொருவராவது போரிற் குதியுங்கள்,
வெற்றியெங்கள் வாசலுக்கு விரைவில் வரும்.
தீயெரிக்க முடியாத தேசமே! விழிதிறந்து கொள்க,
எமை நோக்கி விடிவு விரைகிறது.

**புதுவை இரத்தினதுரை**




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்